REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
பக்கங்கள் 28 விலை: 25.00

# சுடர் ஒளி

THE SUDAROLI
வார மலர்
மார்ச் 25 - மார்ச் 31, 2012
March 25 - March 31, 2012



## ரணில் தூரப்போகும் உத்தரவாதம்?

# ஏகாதிபத்திய எதிர்ப்பில் புதைந்திருக்கும் போலித்தனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஐரிஷ் பாதுகாப்பு படையின் துணிச்ச லான வீரர்களின் அணிவகுப்பில் பிரிட்டிஷ் இளவரசியான கேட் கலந்து கொண்டார்.

வருடா வருடம் பிரமாண்டமாக இடம் பெறும் இந்த நிகழ்வு இன்றைய தினம் பிரிஸ்டல் பிரதேசத்தின் Aldershot, Hampshire என்ற இடத்தில் இடம்பெற்றது. றோயல் குடும்பத்தினர் ஒருவர் கலந்து கொண்ட இந்த நிகழ்ச்சி வருடத்துக்கு ஒரு முறையே நிகழ்வது வழமை.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட கேட் எப்போதும் முகத்தில் முத்துப் பற்களுடன் புன்னகையை உதிர்ந்ததாக பிரித்தானியப் பத்திரிகைகள் வர்ணித்துள்ளன.



# விண்வெளிக்கு செல்கின்றன பல்லிகள்

உலகில் முதன் முறையாக விண்வெளிக்கு வெப்பத்தை தாங்கக் கூடிய பல்லிகளை அனுப்பும் முயற்சியில் ரஷ்யா ஈடுபட்டுள்ளது.

இந்த ஆண்டின் இறுதியில் உயிரியல் மருத்துவத்திற்கான ரஷ்ய நிறுவனம் பல்லிகளை விண்வெளிக்கு அனுப்பி வைக்கும்.

பல்லிகளின் விண்வெளிப் பயணம் தொடர்பாக செய்தித் தொடர்பாளர் ஒருவர் கூறுகையில், விண்வெளிக்கு மனிதர்களை தெரிவு செய்து, பயிற்சி அளித்து அனுப்புவது போன்றே, பல்லிகளும் அனுப்பப்படுகின்றன என்றார்.

இதற்கு மிக வலிமையற்ற, உடல்நிலை சரியில்லாத மற்றும் கோபம், ஆத்திரம், படபடப்பு போன்ற உணர்ச்சி அதிகம் உடைய பல்லிகள் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை என்றார்.

மேலும் வீட்டில் இருக்கும் பல்லிகளுக்கு சிறப்பு பயிற்சி அதிகம் தேவைப்படாது. எந்த வெப்பத்தையும் அவற்றால் தாங்கிக் கொள்ள முடியும். எடையற்ற சூழ்நிலை உருவாகும் போதும், புவிஈர்ப்பு விசை குறையும் போதும் இவை தரையிலோ, சுவற்ஷூலோ, கூரையிலோ ஊர்ந்து செல்லும் இயல்புடையது.

இவற்றை வைத்து ஆராய்ச்சி செய்வதால் மனிதர்கள் பயணிக்கும் போது அவர்களுக்கான உடல்நலப் பிரச்னைகளுக்குத் தீர்வு கிடைக்கும். கடந்த 1947ஆம் ஆண்டில் முதன் முறையாக ஈக்கள் விண்வெளிக்கு அனுப்பப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




இந்த கட்டிடத்தின் தோற்றம் நிலநடுக்கத்தில் பாதிக்கப்பட்ட கட்டிடம் போல வடிவமைத்து இருப்பது தான். இந்த கட்டிடத்திற்கு ரிபிலிங் பிலீவ் இட் ஓர் நொட் என்றும் வித்தியாசமான பெயரும் வைத்திருக்கிறார்கள்.

இது சுமார் 40 அடி உயரமும், 1,200 அடி அகலமும் கொண்ட இந்த கட்டிடத்தை முதன் முறையாக இதை காண்பவர்கள் உண்மையிலேயே நிலநடுக்த்தில் சேதம் அடைந்தது என்றே நினைப்பார்கள். அமெரிக்காவின் மத்தியமேற்கு பகுதியில் அமைந்துள்ள மிச்சூரி மாகாணத்தில் உள்ள பிரான்சான் என்ற நகரில் அமைந்துள்ளது.






## இதுதான் லேற்றஸ்

இறந்த விலங்குகளின் தோல்களைக் கொண்டு வினோதமான காலணிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்தக் காலணிகள் தான் இப்போது உலக சந்தையில் அதிகம் புழக்கத்திற்கு வந்திருக்கிறதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்ட்ரல் பினான்சின் மாபெரும்

# வாகன சந்தை



மார்ச் 30முதல் ஏப்ரல் 1ஆம் திகதிவரை

## மட்டக்களப்பு

CF வாகனத்தரிப்பிடம்
இல. 568A, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு.
தொ.பேசி: 065 2223005

**உங்கள் வசதிக்கேற்ற குறைந்த அடிப்படைக் கட்டணம்**

- ஜப்பான், இந்தியா மற்றும் சீன உற்பத்திகளான பதிவு செய்யப்பட்டதும் பதிவு செய்யப்படாததுமான மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கரவண்டி, கார்கள், வேன்கள், ட்ரக், ட்ரக்டர்கள், லொறி உட்பட அனைத்துவிதமான வாகனங்களுக்கு லீசிங் வசதி செய்து கொள்ளவும் வாகனங்களை விலைக்குப் பெற்றுக்கொள்ளவும் வாருங்கள்.
- இந்த நாட்டிற்கு வாகனங்களை இறக்குமதி செய்து விநியோகிக்கின்ற அனைத்து முக்கிய விற்பனை பிரதிநிதித்துவ நிறுவனங்களின் பங்களிப்பு.
- குறைந்த பட்ச மாதாந்த தவணையில் கொடுப்பனவு வசதி.
- துரித ஒருநாள் சேவையின் மூலமாக அன்றைய தினத்திலேயே வாகனத்தை எடுத்துச் செல்லக்கூடிய சந்தர்ப்பம்.
- முச்சக்கரவண்டி, மகிலிமோ ட்ரக், டாடா நனோ, மைக்றோ பண்டா, மற்றும் டிமோ பட்டாவுக்கு விசேட குத்தகை வசதி.

1988ன் 78ம் இலக்க நிதி நிறுவன சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியில் நிதிச்சபையின் மூலமாக பதிவு செய்யப்பட்டுள்ளது


**சென்ட்ரல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி**
இல. 48, ஸ்டேசன் வீதி, மட்டக்களப்பு.
தொ.பேசி: 065 2227823

ரம்ஸான் 0777 594475 அனோஜ் 0777 161215 நிரஞ்சன் 077 5152801 அமானுல்லா 071 5272675

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது   பிட்ச் ரேட்டிங்: A+ (lka)

தமிழ், சிங்கள புதுவருடத்தை முன்னிட்டு
புத்தம் புதிய டிசைன்களில் ஆடைகள்....





**SHAMNA Tex**

NO. 36 / 03, MAHA VIDYALAYA,
MAWATHA, COLOMBO - 13.
Tel : 0112 333731
E - Mail : shamnatex@gmail.com

# கந்தானையில் உங்களுக்கான கனவு இல்லம்



நம்பமுடியாத விலையில் கந்தானையில் தொடர்வீடுகள். 120 வீடுகளில் 14 மட்டுமே மிகுதியாக இருக்கின்றன. பதிவுக்கு உடனே விரையுங்கள். முற்பணம் ரூ 5,85,000/= மாதாந்த வட்டி இல்லாது ரூ 50,000 வீதம் 18 மாதங்களுக்கு December 31 இல் வீடுகள் கையளிக்கப்படும். போகா தொட்டுபொல வீதிக்கு அருகாமையில் காலை 8.00 முதல் மாலை 4.00 வரை இடத்தைப் பார்வையிடலாம். தமிழில் தொடர்புகளுக்கு. **ராஜா :- 0777 708948**

**நிமாவின் டெவலொபர்ஸ் தனியார் நிறுவனம்**
**187, முதலாம் மாடி, வோட் பிளேஸ், கொழும்பு- 7**

NIMAVIN DEVELOPERS

ஈ.மெயில் : nimavingreenpark@gmail.com
இணையத்தளம் : www.nimavingreenpark.com
ஸ்கைப் : Nimavin greenpark

**Tel:- 011 2695714, 011 2695728.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்னிந்திய திருத்தல யாத்திரை

ஆரம்பம் ஏப்ரல் மாதம் 2012

# தரிசிக்கும் ஆலயங்கள்

## இது தமிழ்நாடு, ஆந்திர கர்நாடக, கேரள, பாண்டிச்சேரி ஐந்து மாநிலங்களுக்கூடான யாத்திரை தரிசிக்கும் ஆலய விபரம்

இந்த யாத்திரைகள் அனைத்தும் 05.01.2000ம் ஆண்டு காலமான என் மனைவியின் வேண்டுகோளிற்காக சேவை நலன்கொண்டு குறைந்த செலவில் நடாத்தப்படுகின்றது.

**யாத்திரை ஆரம்பம் யாத்திரீகர்கள் 10பேர் சேர்ந்ததும் ஆரம்பமாகும். 20பேர்வரை அழைத்துச் செல்லப்படுவர்.**

மலைக்கோட்டை விநாயகர், திருக்கடையூர் சிவன், ஆறுபடை முருகன், பிள்ளையார்பட்டி விநாயகர், தஞ்சாவூர் சிவன், திருப்பதி விஷ்ணு, மாங்காடு அம்மன், உப்பிலியப்பன், காஞ்சிவரதர், திருவேற்காடுஅம்மன், குருவாயூர், ஸ்ரீரெங்கம் விஷ்ணு (திருச்சி), மேல் மருத்துவத்தூர் அம்மன், வேளாங்கண்ணி மாதா, புதூர் ஆஞ்சநேயர், அஷ்டலெட்சுமி, சக்கரபாணி கோவில், பஞ்சவடி ஆஞ்சநேயர், அலமேலுமங்கா, சாரங்கபாணி கோவில், நடுத்திருப்பதி ஆஞ்சநேயர், சரஸ்வதி கோவில், வலம்சுளி விநாயகர், மகாமாழய குளம் (யாகம் நடந்த இடம்), சமயபுரம், ஸ்ரீ ரெங்கநாதர்கோவில் (மைசூர்), சக்தி அம்மன் கோவில், மீனாட்சி சுந்தரேஸ்வரர், இராமேஸ்வரம், வெக்காளி அம்மன், பகவதி அம்மன், திருத்தணி முருகன், பிருந்திவிலிங்காதேவி, சோட்டாணிக்கரை, பழனி முருகன், மதனகோபால சுவாமி திருக்கோவில் (மதுரை), கொடுங்களூர், திருச்செந்தூர் முருகன், கோலவாமணப்பெருமான், திருக்கோவில், பொற்கோவில், திருப்பரங்குன்றம் முருகன், தோணியப்பர், சாமுண்டீஸ்வரி (மைசூர்), பழமுதிர்ச்சோலை முருகன், சிதம்பரம், திருவண்ணாமலை, மருந்தீஸ்வரர் சிவன், பட்டீஸ்வரம்துர்க்கா, சுசீந்திரம் ஆஞ்சநேயர், கன்னியாகுமரி முருகன், கபாலீஸ்வரர் சிவன், சுவாமிமலை முருகன், வனத்திருப்பதி, காளகஸ்திரி சிவன், சிக்கல் முருகன், பார்த்தசாரதி விஷ்ணு, ஏகம்பரேஸ்வரர் சிவன், சௌமிய தாமோதரப் பெருமான், தாராசுரம் சிவன், வல்லக்கோட்டை முருகன், 65 திருவானைக்காவல் சிவன், நவக்கிரகங்கள் 9 கோவில், மெரீனா பீச், ஸ்ரீ திரிநேத்ர தஜபுஜ வீரஆஞ்சநேயர், உவரி முருகன், குணசீலம் வெங்கடாசலப் பெருமாள், வடபழனி முருகன், பாண்டிச்சேரி, மைசூர் ஊட்டியும் பூம்புகார், பீச்சும் காணலாம் நீங்கள் தரிசனம் முடித்து வரும் நேரத்தைபொறுத்தே மிகுதி.

## தங்களிடம் பெற்றுக்கொள்ளும் ரூபாவிற்கு எமது சேவை :

இருவழி விமான டிக்கட் வீட்டிலிருந்து எயர்போட் செல்லவும் திரும்ப வீட்டிற்கு வரவும் வாகன வசதி. காலை இரவு காப்பி, டிபன், மதிய உணவு தரமான சைவ உணவு ஹோட்டலில் (சாதம்) ஒரு நாளைக்கு ஒருவருக்கு ஒரு லீற்றர் மினரல் வாட்டர், தங்குமிடங்கள் 2 பேருக்கு 2 கட்டில் மெத்தை, குளியல் அறையுடன் கூடிய அறைகள் எடுத்து தங்கவைக்கப்படுவீர்கள். யாத்திரை தொடங்கி முடியும் வரை அ.இ.அதஞீடிணி, ஙடிஞீனுணி உள்ளன. சொகுசு வாகன வசதி, மேலும் ஆலயங்களில் தங்களை குரூப்பாக எடுக்கும் 60 புகைப்படங்கள் 6 து 4 சைஸ் படங்களும் 1 அல்பமும் திரும்பும் போது தரப்படும். 10 பேர் சேர்ந்ததும் அறிவிப்பேன். அப்போது விமான டிக்கட் நான் தரும் போது மிகுதி ரூபா வாங்கப்படும். இரவு 10.00 மணிக்கு மேல் இந்தியாவில் வாகனம் ஓடப்படமாட்டது. பதிவு செய்தபின் பூரண விபரம் தரப்படும் குறிப்பிட்ட ஆலயங்கள் தவறாது தரிசிக்கலாம்.

வயதானவர்களுக்கும், தனியாக வரும் பெண்களுக்கும் பூரண பாதுகாப்புடனும், கண்ணியமாகவும், கவனமாகவும் திரும்ப வீட்டிற்கு கொண்டு வந்து இறக்கிவிடப்படுவீர்கள். தென்னிந்திய, வடஇந்திய திருத்தல யாத்திரை சேவையில் 10 வருட அனுபவம் வாய்ந்தவரினால் நடாத்தப்படும் யாத்திரை வயதானவர்களுக்கு முன்னுரிமை உண்டு. தோஷ நிவர்த்திக்கு விரும்பினால் நிவர்த்தி செய்ய ஒழுங்கு செய்து தரப்படும். அதற்குரிய ஆலயங்களில் உறவினர்களையும் சந்திக்கலாம்.

## கட்டண விபரம் கேட்டு அறிந்துகொள்ள !

மட்டக்களப்பில்
K. ராஜகோபால் Tel : 065 3653719
யாழ்ப்பாணத்தில்
M. T. வாசகர் Tel : 077 2487937

கலாநிதி T. ஸ்ரீரெங்கநாதன்
No. 66/2 - 3/2, Joseph Dias Lane, Colombo- 15.
Tel : 0777 680102, 0724 222989, 0777 864061
Web : www.sridevipilgrims.com

யாழ்ப்பாணத்தில்
S. Vijayakumar
கொக்குவில் கிழக்கு
Mob. 0777 148911
Tel : 021 2226427

ஆரம்பம் ஏப்ரல் மாதம் 2012

## வட இந்திய யாத்திரை

சென்னை, டெல்லி, ஆக்ரா (தாஜ்மகால்) மதுரா, கோகுலம், ஹரித்துவார், ரிஷிகேஸ், பத்திரிநாத், கேதார்நாத், குருச்ஷேத்திரம் (பாண்டவர்கள் யுத்தம் புரிந்த இடம்) அலகாபாத் (கங்கா, ஜமுனா, சரஸ்வதி) திருவேணி சங்கமம், கயா (காலம் சென்றவர்களுக்கு பிதுர் கடன் செய்ய சிறந்த இடம் கயா மேலும் பெண்கள் பிதுர்காரியம் செய்ய உகந்த புண்ணிய ஸ்தலம், கயாமட்டுமே) புத்தகயா (புத்தபெருமான் ஞானோதயம் பெற்றவெள்ளை அரசமரத்தையும் புத்தபெருமானின் ஆலயங்களையும் காணலாம்) காசி (வாரணாசி) இராமேஸ்வரம், திருச்சி, மதுரை, திருவண்ணாமலை, வேலூர் பெற்கோவில் சென்னை.

நாட்கள் 30, யாத்திரிகர்கள் 20 பேர், திடகாத்திரமானவர்கள் மட்டும். ஆண்கள் 70 வயதிற்குள், பெண்கள் 45 வயதிற்கு மேல் மட்டும். 29.02.2012க்கு முன் பதிவு செய்யவும், ஆரம்பம் 10.05.2012இல்.

விமானரிக்கட் இருவழி, ஏயர்போட் போக, வர வாகன வசதி, ரயிலில் 2ஆம் வகுப்பு உறங்கலிருக்கை, ரயிலினால் இறங்கி சுற்றிப்பார்க்க பஸ் வசதி, தங்குமிடகள், றூம்கள்,

2 இடங்களில் செட்டி நாடு சத்திரம் வரும். உணவு சமயல் செய்தே வழங்கப்படும் (காரைக்குடி, செட்டி நாடு சமையல் ஆட்கள் சமையலுக்கு வருவார்கள்)

சென்ற யாத்திரைகளில் கலந்துக் கொண்ட பலரில் ஒருவரின் பெயர், தொலைபேசி இலக்கம் தரப்படுகிறது. விசாரித்து பார்த்து தொடர்புகொள்ளவும்.

திருமதி. எஸ். பாலேஸ்வரன், இல. 45, நெல்சன் பிளேஸ், கொழும்பு 06. தொ.பே இல: 077 3152710.

## கட்டண விபரம் கேட்டு அறிந்துகொள்ள !

மட்டக்களப்பில்
K. ராஜகோபால் Tel : 065 3653719
யாழ்ப்பாணத்தில்
M. T. வாசகர் Tel : 077 2487937

கலாநிதி T. ஸ்ரீரெங்கநாதன்
No. 66/2 - 3/2, Joseph Dias Lane, Colombo- 15.
Tel : 0777 680102, 0724 222989, 0777 864061
Web : www.sridevipilgrims.com

யாழ்ப்பாணத்தில்
S. Vijayakumar
கொக்குவில் கிழக்கு
Mob. 0777 148911
Tel : 021 2226427

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஏகாதிபத்திய எதிர்ப்பில் புதைந்திருக்கும் போலித்தனம்

ஐரோப்பாவில் நீராவியின் பயன்பாடு கண்டு பிடிக்கப்பட்ட பின்பு ஏற்பட்ட அபரிமிதமான கைத்தொழில் வளர்ச்சி ஒரு முதலாளித்துவ சமூகக் கட்டமைப்பை உருவாக்கியது. இந்த முதலாளித்துவ நிறுவனங்களில் ஏற்பட்ட உற்பத்தி அதிகரிப்பு தமது சொந்த நாடுகளுக்கு வெளியே சந்தைகளைத் தேட வேண்டிய நிலைமைகளையும் உற்பத்திக்கான மூலவளங்களைத் தேட வேண்டிய தேவையையும் ஏற்படுத்தியது. இதன் காரணமாகக் கைத்தொழிலில் வளர்ச்சி பெற்ற நாடுகள் ஏனைய நாடுகளைப் படையெடுப்புகளின் மூலம் கைப்பற்றி தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தன. இப்படியாக முதலாளித்துவ வளர்ச்சியின் தவிர்க்க முடியாத தேவையாக ஏகாதிபத்தியங்கள் உருவாகின.

பிரிட்டன், பிரான்ஸ் போன்ற நாடுகள் படை நடவடிக்கைகள் மூலமும் ஒப்பந்தங்கள் மூலமும் ஆசிய, ஆபிரிக்க நாடுகளைத் தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தன. இத்தகைய ஏகாதிபத்திய தேவையின் அடிப்படை தான் முதலாம் இரண்டாம் உலகப் போர்களுக்கான அடிப்படைக் காரணம். அதாவது மிக வேகமாக ஜேர்மனி, ஜப்பான் ஆகிய நாடுகளில் ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சி காரணமாக அவைகள் தமக்கான சந்தைகளையும் மூலப்பொருட்களையும் தேட வேண்டிய காரணத்தினால் பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகள் கைப்பற்றி வைத்திருந்த தேசங்களைக் கைப்பற்றப் படையெடுத்தன. இதுவே இரண்டாவது உலக மகாயுத்தத்திற்கு அடிப்படையாக இருந்தது.

ஆனால், இரண்டாவது உலக மகாயுத்தத்தின் பின்பு உலக ஒழுங்கில் ஒரு மாபெரும் மாற்றம் நிகழ்ந்தது. ஆசிய ஆபிக்க நாடுகளில் எழுச்சி பெற்ற சுதந்திரப் போராட்டங்கள் காரணமாக நாடுகளைக் கைப்பற்றி நேரடியாக ஆட்சி செலுத்திய காலம் முடிவுக்கு வர ஆரம்பித்தது. எனவே பல நாடுகளுக்குச் சுதந்திரம் வழங்க வேண்டிய நிலை எழுந்தது. இந்நிலையில் ஏகாதிபத்தியம் தன் வடிவத்தை மாற்றிக் கொண்டு பொருளாதார மேலாதிக்கம் மூலம் ஏனைய நாடுகளின் மூலவளங்களைக் கொள்ளையிடவும் அவற்றைத் தமது சந்தைகளாக மாற்றவும் புதிய வழிமுறைகளைக் கையாண்டன. இக்கால கட்டத்தில் அமெரிக்காவின் கை ஓங்கியதுடன் உலகப் பொருளாதாரத்தின் மீது ஆதிக்கம் செலுத்தும் வகையிலும் அது வலிமை பெற்றது.

எனினும் முதலாளித்துவத்தின் சமச்சீரற்ற வளர்ச்சி, உற்பத்திக்கும் நுகர்வுக்குமிடையே ஏற்படும் முரண்பாடுகள் என்பன அடிக்கடி பொருளாதார நெருக்கடிகளை உருவாக்கி வளர்ச்சியடைந்த நாடுகளையே தடுமாற வைத்தன.

இந்நிலையில் தான் உலகமயமாக்கல் என்ற புதிய வழிமுறை உருவாக்கப்பட்டது. அதாவது உலக நாடுகள் அனைத்துமே ஒரு உலகப் பொதுச் சந்தையின் நுகர்வோராகவும் வழங்குநர்களாகவும் மாற்றுவதாகவும் அது ம்ட்டுமன்றி உலக மக்கள் அனைவருமே அதன் நுகர்வோரும், விஞ்ஞானிகள், அறிவு ஜீவிகள் உட்பட அனைத்து உலக மக்களும் அதன் கூலி உழைப்பாளர்களாக மாற்றப்படுவதாகும்.

இன்று இந்த உலகமயமாக்கலின் தலைமைச் சக்தியாக அமெரிக்காவும் அதன் துணை சக்திகளாக ஐரோப்பிய ஒன்றியமும் அவற்றின் போட்டிச் சக்தியாக சீனாவும் வடிவெடுத்துள்ளன.

இன்று பொதுவாகவே ஏகாதிபத்திய எதிர்ப்பு என்றால் அமெரிக்க எதிர்ப்பு என்றே காட்டப்படுகிறது.



தற்சமயம் அமெரிக்கா ஜெனிவாவில் இடம்பெறும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஒரு பிரேரணையை முன்வைத்துள்ளது. அதற்கு ஆதரவாகப் பல நாடுகளையும் தனது பக்கம் திரட்டி வருகிறது. அதேவேளையில் இலங்கை அப்பிரேரணையைத் தோற்கடிக்கும் விதத்தில் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பலவிதமான தீவிர முயற்சிகளை எடுத்து வருகிறது.

இதன் ஒரு பகுதியாக அரசாங்க அமைச்சரும் தேசிய முன்னணியின் தலைவருமான விமல்வீரவன்ச அமெரிக்கப் பொருட்களை நிராகரிக்க வேண்டும் என அறைகூவல் விடுத்துள்ளார். அதே கோரிக்கையைத் தேசப்பற்றுள்ள தேசிய முன்னணியும் ஆதரித்துள்ளது. ஆனால் அமைச்சரவையின் பதில் பேச்சாளர் அது விமல் வீரவன்சவின் சொந்தக் கருத்து எனவும் அரசின் கருத்து அல்ல எனவும் தெரிவித்துள்ளார்.

ஒரு ஜனநாயக நாட்டில் அமைச்சரவைக்கென ஒரு கூட்டுப்பொறுப்பு உண்டு. அதாவது ஒரு அமைச்சரின் கருத்து முழு அமைச்சரவையின் கருத்தாகவே கருதப்படும். அது அமைச்சரவையினால் ஏற்கப்படாவிட்டால் சம்பந்தப்பட்ட அமைச்சர் ராஜினாமா செய்வார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் மனதைக் குளிர வைப்பது தான் ஜனநாயகம் எனக் கருதப்படும். இலங்கையில் இப்படியான பண்புகளை நாம் எதிர்பார்க்க முடியுமா?

அதேவேளையில், இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவாசம் இந்தியத் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் நல்லிணக்க முன்னெடுப்புகள் தொடர்பாக நாங்கள் அரசியல் கூட்டுகளுடனும் தமது சொந்த மக்களுடனும் பேச வேண்டும் எனவும் அதன் மூலம் நாம் செய்ய வேண்டிய பணியைப் புரிந்து கொண்டு அதற்கேற்ற வகையில் வகுத்துக் கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்துள்ளதுடன் இந்த முன்னெடுப்புகளைத் துரிதப்படுத்தி அமெரிக்காவோ அல்லது ஐ.நா. சபையோ பலப் பிரயோகத்தை மேற்கொள்ளவோ கைபோடவோ முயற்சித்தால் எதிர்மறையான விளைவுகளையே சந்திக்க வேண்டிவரும் எனவும் எச்சரித்துள்ளார்.

ஒரு நாட்டின் தூதுவர் தெரிவிக்கும் கருத்துகள் அந்த நாட்டு ஜனாதிபதியின் கருத்தாகவே கொள்ளப்படும். இதுவரை ஜனாதிபதி இக்கருத்து தொடர்பாக எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்காத நிலையில் இது ஜனாதிபதியின் கருத்து என உறுதிப்படுத்தப்படுகிறது.

எனவே, விமல்வீரவன்சவோ, பிரசாத்காரியவாசமோ அல்லது சம்பிக்கரணவக்கவோ வெளியிடும் கருத்துக்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அவர்களின் கருத்துக்கள் என்பதில் ஐயமில்லை.

இப்படியான கருத்துக்கள் மூலம் தாம் ஏகாதிபத்தியவாதிகளுக்கு எதிராக திடமான நிலைப்பாடு எடுத்திருப்பவர்களாகவும் இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பான மேற்கு நாடுகளின் நடவடிக்கைகள் ஏகாதிபத்தியங்களின் ஆக்கிரமிப்பு நோக்கங்களின் அடிப்படையிலே மேற்கொள்ளப்படுகின்றன எனவும் சிங்கள மக்களை நம்ப வைக்கும் ஒரு முயற்சியாகும். ஜனாதிபதியின் இந்த நோக்கத்தையே பல்வேறு அரசதரப்பு நபர்களும் வெவ்வேறு குரல்களில் முன்வைத்து வருகின்றனர். அவ்வகையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு, இனங்களுக்கிடையே நிரந்தர நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சிகள், தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்குப் பொறுப்புக் கூறல் என்பன அனைத்துமே ஏகாதிபத்திய எதிர்ப்பு என்ற மாயை போட்டு நசுக்கப்படுகிறன.

ஆனால் உண்மையில் இலங்கை அரசு அமெரிக்க, ஐரோப்பிய ஏகாதிபத்தியங்களுக்கு மட்டுமன்றி சீன மேலாதிக்க வாதிகளுக்கும் இந்தியப் பிராந்திய வல்லரசுக்கும் அடிவருடிச் செயற்பட்டு இலங்கையின் இறைமையையும் சுயாதிபத்தியத்தையும் கூறுபோட்டு விற்கின்றனர் என்ற உண்மை சிங்கள மக்களால் புரிந்து கொள்ளப்படவில்லை.

இலங்கையின் எப்பாவெலவில் உள்ள பொஸ்மேற் கனிம வளம் அமெரிக்காவுக்கு விற்கப்பட்டுவிட்டது. புல்மோட்டையின் இலுமனைட் கனிய வளம் அமெரிக்க ஜப்பானியக் கூட்டு நிறுவனத்திற்கு கையளிக்கபட்டு விட்டது. குறித்த பொருளாதாரக் கொள்கை அந்நிய [illegible] என்ற பெயரில் அமெரிக்க ஐரோப்பிய தொழில் நிறுவனங்கள் இந்நாட்டின் ஏற்றுமதி உற்பத்தியைத் தமது கைக்குள் கொண்டு வந்துள்ளன. சுதந்திர வர்த்தக வலயம் என்ற பெயரில் எமது மக்களின் உழைப்பு கொடிய முறையில் சுரண்டப்படுகிறது. அங்கு வேலை செய்யும் பணியாளர்கள் சம்பள உயர்வு கோரியோ, ஏனைய வசதிகள் தொடர்பாக வேலை நிறுத்தம் கூடச் செய்ய முடியாது.

இலங்கை தனது அந்நியச் செலாவணி வருமானத்திற்கு பெருமளவில் தைக்கப்பட்ட ஆடை ஏற்றுமதி, சுற்றுலாத்துறை என்பவற்றையே நம்பியுள்ளது. வெளிநாடுகளிலிருந்து இயந்திரங்கள், நூல் போன்ற மூலப்பொருட்கள் என அனைத்துமே இறக்குமதி செய்யப்பட்டு தைக்கப்பட்ட ஆடைகளாக்கப்பட்டு மீண்டும் அவை அமெரிக்க ஐரோப்பிய நாடுகளுக்கே ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இத்தொழிலின் வருமானத்தில் பெரும் பகுதி அந்நிய நிறுவனங்களுக்கே செல்கின்றன. இலங்கைக்குக் கிடைப்பதெல்லாம் தொழிலாளர்களின் கூலி, மின்சாரக் கட்டணம் போன்ற ஒரு சிறு தொகையே. சுற்றுலாத்துறை தொடர்பான பெரும் ஆடம்பர விடுதிகள் அந்நியநாட்டு நிறுவனங்களுக்கே சொந்தமானவை. சுற்றுலாப் பயணிகளால் பெருமளவு அந்நியச் செலாவணி கிடைக்கப் பெற்றாலும் அவற்றில் கணிசமான பகுதி அவர்களின் ஆடம்பரத்தேவைகளுக்கான இறக்குமதிக்குப் போய் விடுகிறது. இத்துறை மூலம் இலங்கைக்குக் கிடைப்பதெல்லாம் இத்துறையில் பணிபுரிபவர்களின் ஊதியம், உள்ளூர் போக்குவரத்து வருமானம் என்பனவே. இதில் பல சிங்கள இனப் பெண்கள் வருமானம் பெறுவதுண்டு, எயிட்ஸ் போன்ற கொடிய நோய்களுக்கு ஆளாவதுமுண்டு.

இவை மட்டுமன்றி சம்பூர், கொக்கிளாய், கும்புறுப்பிட்டி, புத்தளம், கொழும்பு கோல்பேஸ் சுற்றுவட்டம் என இலங்கையின் பல பிரதேசங்கள் பகுதி பகுதியாக அந்நிய நாட்டு நிறுவனங்களுக்கு 99 வருடக் குத்தகை என்ற பெயரில் கையளிக்கப்பட்டுவிட்டன. இலங்கையின் ஆழ்கடல் மீன்பிடிப்பு கூட ஜப்பானுக்குத் தாரைவார்க்கப்பட்டு விட்டது. மேலும் இன்னொரு பகுதி சவூதி அரேபியாவுக்கு இருபது வருடக் குத்தகைக்கு வழங்கப்படவுள்ளது.

> ஒரு ஜனநாயக நாட்டில் அமைச்சரவைக்கென ஒரு கூட்டுப் பொறுப்பு உண்டு. அதாவது ஒரு அமைச்சரின் கருத்து முழு அமைச்சரவையின் கருத்தாகவே கருதப்படும். அது அமைச்சரவையினால் ஏற்கப்படா விட்டால் சம்பந்தப்பட்ட அமைச்சர் ராஜினாமா செய்வார்.

அதாவது இலங்கை உலகமயமாக்கல் என்ற வலைப்பின்னலுக்குள் கழற்ற முடியாதவாறு தன்னை மாட்டி ஏகாதிபத்தியங்களின் நலன்களின் அடிப்படையிலான ஒரு பொருளாதாரக் கட்டுக்கோப்பை உருவாக்கி விட்டது.

ஏகாதிபத்தியங்களின் நலன்களின் அடிப்படையில் எரிபொருள் விலையேற்றம், விலைவாசி உயர்வு, அரச ஊழியர்களுக்குப் போதிய ஊதியம் வழங்காமை, மருத்துவக் கல்விச் செலவினங்களைக் குறைத்து அத்துறைக்கு வெளிநாட்டு நிறுவனங்கள் உட்பட தனியார் நிறுவனங்கள் முதலீடு செய்ய வாய்ப்பளித்தல் போன்ற பல விசயங்களை மேற்கொண்டு வருகிறது.

அதாவது இலங்கை அரசு சுயாதிபத்தியம், இறைமை என்று கோசமிட்டவாறே பொருளாதார ரீதியாக ஏகாதிபத்தியங்களின், சீனாவின், பிராந்திய வல்லரசான இந்தியாவின் வேட்டைக்காடாக மாறி வருகிறது.இலங்கையில் ஒரு காலத்தில் கொடி கட்டிப் பறந்த யானைச் சோடாவின் வியாபாரத்தை விழுத்தி அதே வேளையில், காணும் இடமெங்கும் அமெரிக்க தயாரிப்புகளான கொக்கோக்கோலாவையும் பெப்சியையும் குவித்து வைத்திருக்கும் இலங்கை அரசின் ஏகாதிபத்திய எதிர்ப்பின் உண்மைச் சொரூபத்தை நாம் புரிந்து கொள்ள முடியும்.

ஏகாதிபத்திய எதிர்ப்பு என்ற போர்வையில் சிங்கள மக்கள் மத்தியில் தமிழ் மக்களுக்கு எதிரான மனப்போக்கை விதைப்பது நீண்ட காலம் செல்லுபடியாகாது என்பது மட்டும் உண்மை.

சந்திரசேகர ஆசாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொலையா நினைவுகள்

நெடுந்தீவு மகேஷ்

# ஆரோக்கியத்துடன் ஆயுளை அதிகரிக்க......!



Dr Vladimir Vladbur



அந்திப்பொழுதில் ஏறத்தாழ ஐந்து கிலோமீற்றர் தூரத்தை நடந்து எனது வீட்டுக்கு வந்து சேர்ந்த அந்த ரஸ்ய வைத்தியரை நான் வியப்போடு நோக்கினேன். அவர் தங்கியிருந்த அவரது வைத்திய நண்பரின் வீட்டுக்கும் எனது வீட்டுக்கும் இடைப்பட்ட அந்த நீண்ட தூரத்தை கடந்து வந்த அவரது நடைபயணத்தை நினைத்தேன். " அங்கிருந்து இங்குவர உங்களுக்கு வாகனம் எதுவும் கிடைக்கவில்லையா? ஏன் நடந்து வந்தீர்கள் ? " என்று கேட்டேன். அவர் புன்னகைத்துக் கொண்டே "நடந்து பயணிப்பது தான் உடலுக்கு ஆரோக்கியமானது " என்றார். அதற்கு நான், " நீங்கள் நீண்ட தூரம் நடந்து செல்வதை ஆரோக்கியமாகக் கருதுகிறீர்கள். ஆனால் நாங்களோ அதனை உடலை வருத்தும் உவப்பற்ற செயலாகத்தான் பார்க்கிறோம்" என்றேன்.

அவரோ சிரித்துக் கொண்டே " நீங்கள் சொல்வதற்கு முன்னரே நான் இங்கு நடப்பவற்றை அவதானித்தே அவற்றைத் தெரிந்து கொண்டேன். இவ்வூரில் மிகவும் ஒடுக்கமான பாதைகளே காணப்படுகின்றன. இந்தப் பாதையில் மனிதர்கள் நடந்துதிரிவதைக் காண்பது மிகவும் அரிதாகவே உள்ளது. கார், வான், பஸ், லொறி இவற்றுடன் ஸ்கூட்டர், திரிவீலர் மோட்டார் சைக்கிள் என்றும், அவற்றை விடவும் ரிப்பர், ட்ரைக்டர், கன்ரர் எனப்பாரிய கனரக வாகனங்களும் பயணிக்கின்றன. ஒரு வாகனப்பேரணியே எதிரும் புதிருமாகப் பலவாறாகப் பயணிக்கின்றன. நடந்து செல்வதற்கு அவை இடையூறாகவே உள்ளன. இவ்வாறு வாகனத்தில் பயணம் செய்பவர்களுக்கோ ஆயுள் மிகக் குறைவானதாகவே இருக்கும் " என்றார்.

" ஓமோம். ஏனென்றால் வாகன விபத்துக்கள் ஏற்பட நிறைய வாய்ப்புக்கள் உண்டுதானே " என்று நான் அவரின் சொல்லை ஆமோதித்த போது " அதுவும் நிசந்தான். ஆனால் இன்றைய கணனி யுகத்தில் உடல் உழைப்புடன் கூடிய தொழில்கள் மிகக் குறைவு அனைத்தையும் இயந்திரங்களே செய்கின்றன. அதனால் உடலுக்குப் பயிற்சிகள் எதுவுமே இல்லை. உட்கார்ந்திருப்பதிலேயே பலருடைய வாழ்நாளில் பெரும் பகுதி தொலைந்து விடுகிறது " என்றார். விளாடிமிர் விளட்பர் (Dr.Viladimir Vladbur) அவர்கள் கடந்த மூன்று வாரங்களாக இங்கு தங்கியிருந்து போனவாரமே ரஸ்யாவுக்குத் திரும்புவதற்காகக் கொழும்புக்குச் சென்றுவிட்டார்.

அவர் இங்கு தங்கியிருந்த நாட்களில் நான் அவருடன் ஆங்கிலத்தில் உரையாடினேன். அப்போது அவர் கூறியவைகளே இவை. எமது மக்களை நேரில் பார்த்ததன் மூலமும், அவர்களுடன் உரையாடியதன் மூலமும் கற்றுக்கொண்டவற்றையே அவர் என்னிடத்தில் கூறினார். இந்த வாகன நெரிசலுக்கான காரணத்தை அவர் அறிய முற்பட்ட போது என்னால் அனைத்தையும் ஆய்வு செய்து தெளிவுபடுத்த இயலவில்லை. ஆனால் அவரின் அவதானிப்பில் இருந்த ஆய்வும் தெளிவும் என்னால் உணரப்பட்டது.

ரஸ்யா ஒரு கம்யூனிஸ்ட் நாடு. உழைப்பவர்களின் உரிமையைக்காக்கும் வகையில் சமத்துவக் கொள்கையைக் கொண்டது. விவசாயம், விஞ்ஞானம் ஆகிய துறைகளில் நாடு வளர்ச்சியடைந்து வருகின்றது.

இலங்கையில் மக்கள் மகிழ்ச்சியாக வாழ்கிறார்கள். ஆடம்பரமான செயல்களும், உடலுழைப்பற்ற ஓய்வும் இங்குள்ளவர்களுக்குப் பெருமையைத் தேடித்தருகின்றன. ஒவ்வொருவர் வீடுகளிலும் குறைந்தது ஒரு குடும்பத்துக்கு ஒரு வாகனம் என்ற வகையில் உண்டு. சிலரின் வீடுகளில் குடும்பத்தினர் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மோட்டார் சைக்கிள் என்றவகையில் வாகனம் உள்ளது. அவர்கள் தமது தேவைகளுக்காக மிக மிக அருகிலிருக்கும் கடைகளுக்கும் வாகனங்களிலேயே செல்கிறார்கள். அயல் வீடுகளுக்கும் கோவில்களுக்கும் நடந்து போவதில்லை. நடந்து செல்வதனால் ஏற்படக்கூடிய ஆரோக்கியமான உடற்பயிற்சியை இவர்கள் இழந்து விடுகிறார்கள். மிக விரைவிலேயே இரத்த அழுத்தம், நீரிழிவு ஆகிய நோய்களுக்கு உள்ளாகிவிடுவர். என்ற கருத்தை அவர் முன்வைத்தார். அத்தோடு வாகனங்களின் பெருக்கமும் அவற்றின் இயக்கங்களால் வெளியேறும் வெப்பம் கலந்த புகை மண்டலமும் சுற்றாடலை மாசடையச் செய்கின்றன. குளோரோ புளோரா காபன் பெருக்கத்தால் ஓசோன் படலம் சேதமுறுகின்றது புற்றுநோய் சார்ந்த புதிய நோய்களும் பெருக்கமடைகின்றன என்று அவர் விளக்கிய போது சத்தியமும் சாத்தியமுமான இந்தப் பேருண்மையைச் சூழல் பாதுகாப்புக்கான முயற்சிகளில் ஈடுபடுகின்ற நம்மவரான ஐங்கரநேசன் போன்ற சூழலியலாளர்களும் சொல்லிவருகிறார்கள் என்பதுவும் என் நினைவுக்கு வந்தது. இந்த ஆடம்பரமான வாகனப் பயணங்களும் சோம்பல் நிறைந்த வெண்ணாடை உத்தியோகங்களும் ஏன் இங்கு அதிகரித்தன? எதிர்காலம் மேலும் மோசமான அல்லலுறும் படியான வாகன நெருக்கத்தால் - சூழல் மாசடைவதால் எமது ஆயுளைக் குறைத்துக் கொள்ளும் நிலைமை தொடரப் போகிறது என எண்ணினேன்.

" நடந்து நடந்தே கூடிய வரை உங்கள் தேவைகளை நிறைவு செய்ய முயற்சியுங்கள். தூரப்பயணங்களின் போது மாத்திரமே வாகனங்களில் பயணம் செய்யுங்கள். இது உங்கள் ஆரோக்கியத்தைப் பேணி ஆயுளை அதிகரிக்கும்" என்றார் அவர்.

மிகக் குறுகிய தூரத்தில் உள்ள இடத்திற்குச் செல்வதற்கே அவசியம் எதுவும் இன்றி வாகனங்களை ஓட்டிச் செல்வதும் அவற்றில் பயணிப்பதும் இன்று எம்மவரின் நாகரிகமாகி விட்டது. இந்த நவீன நாகரிகம் மிகவும் ஆபத்தானது என்பது உண்மையே அளவுக்கு அதிகமாக வாகனங்களை வைத்திருப்போரும் நடந்து பயணம் செய்யாத பேர்வழிகளும் இவை குறித்துச் சற்றுச் சிந்திப்பார்களாக.

நாங்கள் ஆரோக்கியமாக வாழவும் அயலவர்களை ஆரோக்கியமாக வாழவைக்கவும் எங்களின் அர்த்தமற்ற ஆடம்பர நடவடிக்கைகளைக் குறைப்போம். பணத்தை விரயமாக்கும் பயனற்ற வாகனப் பயணங்களைப் படிப்படியாகத் தவிர்ப்போம்.

# மனவேதனையுடன்...

## கவிஞர் ஆழியூர் ரதீஸ்



மிக விரைவிலேயே எம்மை சுற்றியுள்ளவை எல்லாம் மாறிப் போய் விடுகின்றன நமக்கு வாய்ப்பான எண்ணங்களும் செயல்களும் நாம் எதிர்பார்ப்பது போல் வாழ்க்கையில் நிலைத்திருப்பதில்லை. கோலங்கள் மாறும் கொள்கைகள் மாறும் கூடி இருந்தவர்கள் மாறி மாறித் தொலைய எஞ்சுவோர் மிகச் சிலரே. அதனால் எமது மகிழ்ச்சிகள் யாவுமே இல்லையென்றாகி மனவேதனைகளும் மாற்றங்களும் நம்மைச் சூழ்ந்து கொள்கின்றன என்கிறார் இந்தக் கவிஞர்.

நான் பட்டம் விட்ட
பாதிவிடம்
மிதிவெடி வயல்களாயின
என்னைத் தூக்கிவளர்த்த
பெற்றோர்கள்
சுவர்களில் படங்களாயினர்
என்னுடன் கூடப்படிக்கும்
தோழனோ
முடவனாயினான்.

நான் பட்டம் விட்டு மகிழ்ந்த வயல் வெளிகள் எல்லாம் கண்ணிவெடி புதைக்கப்பட்டு என் இன்பத்தின் கனவுகளைக் கலைத்து விட்டன. எங்களைத் தூக்கிவளர்த்த என் பெற்றோர் அந்தப் போரின் கொடுமையினால் அழிக்கப்பட்டனர் அவர்களின் நிழற்படங்கள் சுவர்களில் நினைவுப் படங்களாயின. என் தோழனோ குண்டுகளின் தாக்கத்தால் முடவனாயினான் என்கிறார் அவர்.

நானோ குருடனாயினேன் - இப்போ
அழுவதற்குகூட என்னிடம்
இருகண்ணில்லை - அதனால்
கருமேகம் எனக்காக அழுகின்றது
காட்டுமயில்கள்
எனக்காக அகவுகின்றது
கருங்குயில் எனக்காக
சோககீதம் இசைக்கின்றது
என் மனவேதனைகளை
கடவுளிடம் கூறும்போது.

நானோ குருடனாகி விட்டேன். இப்போது அழுது வடிக்கக் கண்களும் இல்லை. அதனால் கருமேகங்களாக இருண்ட எனது வாழ்வு கண்ணீர் வடிக்கிறது. அதனைப் பார்த்தோ காட்டு மயில்கள் தாம் அகவுகின்றன. எனது உறவுகளைக் காணவில்லை. கருங்குயில்களின் பாட்டு எனக்குச் சோககீதமாய் ஒலிக்கின்றது. எனது வேதனைகளை இறைவனிடத்திலே சொல்வதைத் தவிர வேறெந்த மார்க்கமும் எனக்கு இல்லை என்கிறார் கவிஞர் ஆழியூர் ரதீஸ்.

கவிதையின் ஊடாகத் தனது மனக்கவலைகளைக் கொட்டித் தீர்த்து ஆறுதல் காண விளைகின்றார் அவர். பல்கலைக்கழகப் பட்டப்படிப்பினை மேற்கொள்ளும் லிங்ககுலேந்திரன் ரதீஸ் 'ஒரு நெஞ்சத்தின் நெருடல்கள்' என்ற அவரது கவிதைத் தொகுப்பில் சேர்த்துள்ள ஒரு கவிதையே இது. துயரத்தின் பல் பரிமாணங்களையும் அனுபவித்ததன் மூலம் இவற்றை கவிதைவரிகளாய் வெளிக்காட்டுகின்றார்.

மைதிலி தேவராசா

ஆரம்பக்கல்வியை ஆழியவளையில் பெற்றவர். யாழ் சென்ஜோன் கல்லூரி ஊடாகப் பல்கலைக்கழகக்கல்விக்குப் பாலம் அமைத்தவர். போர் மேகங்கள் சன்னங்களுடன் தீக்கதிர் சொரிய உறவுகளை இழந்து தனித்து நிற்கிறேன். எனக்கூறும் கவிஞரின் கவிதைகள் அவரது வலிகளைப் போக்கும் ஊடகமாகும் எனலாம். தொடர்ந்தும் தமிழ் இலக்கிய உலகில் அவரின் பவனி தொடர வாழ்த்துகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது மக்களுக்கான அறிவித்தல்

**பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கியினால் உரிமமளிக்கப்பட்ட நிறுவனங்கள்**

(29.02.2012 இல் உள்ளவாறு, அகரவரிசைப்படி)

### உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்

1. அமானா பாங்க் லிமிடெட்
2. அக்சிஸ் பாங்க் லிமிடெட்
3. அட்டன் நஷனல் பாங்க் பிஎல்சி
4. இந்தியன் ஓவசீஸ் பாங்க்
5. இந்தியன் பாங்க்
6. இலங்கை வங்கி
7. எம்சிபி பாங்க் லிமிடெட்
8. ஐசிஐசிஐ பாங்க் லிமிடெட்
9. ஹபிப் பாங்க் லிமிடெட்
10. கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
11. சம்பத் பாங்க் பிஎல்சி
12. சிற்றி பாங்க் என்ஏ
13. செலான் பாங்க் பிஎல்சி
14. டீஎவ்சிசி வர்தன பாங்க் பிஎல்சி
15. டொச்சே பாங்க் ஏஜி
16. நேஷனல் டிவலொப்மன்ட் பாங்க் பிஎல்சி
17. நேஷன்ஸ் ட்ரஸ்ட் பாங்க் பிஎல்சி
18. த ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பரேசன் லிமிடெட்
19. பப்ளிக் பாங்க் பேர்ஹாட்
20. பான் ஏசியா பாங்கிங் கோப்பரேசன் பிஎல்சி
21. மக்கள் வங்கி
22. யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி
23. ஸ்ரேற் பாங்க் ஒவ் இந்தியா
24. ஸ்ராண்டட் சார்ட்டட் பாங்க்

### உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்

1. அரச ஈட்டு முதலீட்டு வங்கி
2. இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
3. எம்பிஎஸ்எல் சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
4. சனச டிவலொப்மன்ட் பாங்க் லிமிடெட்
5. ஸ்ரீலங்கா சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
6. டீஎவ்சிசி பாங்க்
7. தேசிய சேமிப்பு வங்கி
8. பிரதேசிய சங்வர்தன பாங்க்
9. லங்காபுத்திர டிவலொப்மன்ட் பாங்க் லிமிடெட்

### உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்

1. அபான்ஸ் பினான்ஸ் பிஎல்சி
2. அலையன்ஸ் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
3. அசோசியேட்டட் மோட்டார் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
4. ஆசிரிகோ பினான்ஸ் கம்பனி பிஎல்சி
5. எதிரிசிங்க ட்ரஸ்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிடெட்
6. எல்பி பினான்ஸ் பிஎல்சி
7. ஓரியன்ட் பினான்ஸ் லிமிடெட்
8. [illegible] கபிட்டல் லீசிங் பிஎல்சி
9. ஏசியா அசெட் பினான்ஸ் லிமிடெட்
10. [illegible] பினான்ஸ் லிமிடெட்
11. கபிட்டல் அலையன்ஸ் பினான்ஸ் பிஎல்சி
12. கொமர்ஷல் கிரடிட் பிஎல்சி
13. கொமர்ஷல் லீசிங் அன்ட் பினான்ஸ் லிமிடெட்
14. சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி
15. [illegible] பினான்ஸ் லிமிடெட்
16. சிங்கபுத்ர பினான்ஸ் பிஎல்சி
17. [illegible] பினான்ஸ் கோப்பரேசன் லிமிடெட்
18. சிற்றிசன்ஸ் டிவலொப்மன்ட் பிஸ்னஸ் பினான்ஸ் பிஎல்சி
19. சென்றல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
20. சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
21. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி
22. சொப்ட்லொஜிக் பினான்ஸ் பிஎல்சி
23. ட்ரேட் பினான்ஸ் அன்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் பிஎல்சி
24. த பினான்ஸ் அன்ட் கரண்டி கம்பனி லிமிடெட் (*)
25. த பினான்ஸ் கம்பனி பிஎல்சி
26. த ஸ்ராண்டட் கிரடிற் லங்கா லிமிடெட் (*)
27. [illegible] பினான்ஸ் லிமிடெட்
28. நந்தா இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் லிமிடெட்
29. [illegible] பினான்ஸ் பிஎல்சி
30. பிம்புத் லங்கா இன்வெஸ்ட்மன்ட் பிஎல்சி
31. பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் லிமிடெட்
32. பீப்பிள்ஸ் பினான்ஸ் பிஎல்சி
33. மல்டி பினான்ஸ் பிஎல்சி
34. மர்க்கன்டைல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் பிஎல்சி
35. மர்ச்சன்ட் பாங்க் ஒவ் ஸ்ரீலங்கா லிமிடெட்
36. [illegible] பினான்ஸ் லிமிடெட்
37. [illegible] பினான்ஸ் லிமிடெட்
38. லங்கா ஓரிக்ஸ் பினான்ஸ் பிஎல்சி
39. வலிபல் பினான்ஸ் பிஎல்சி
40. ஸ்வர்ணமஹால் பினான்ஷியல் சர்விசஸ் பிஎல்சி

### நினைவில் வைத்துக்கொள்ள வேண்டிய விடயங்கள்

- 1972ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் கண்காணிக்கப்படும் கூட்டுறவுச் சங்கங்களும் மாகாண சபைகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களும் உறுப்பினர்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளன.
- மேற்கூறப்பட்ட நிறுவனங்கள் அவற்றின் வர்த்தக நடவடிக்கைகளை மதிநுட்பமாக நடாத்துவதை உறுதிப்படுத்துவதன் மூலம் பொதுமக்களின் வைப்புக்களைப் பாதுகாப்பதற்காக மத்திய வங்கிக்கு அவற்றை ஒழுங்குபடுத்தி மேற்பார்வை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும், வைப்புக்களுக்கு உத்தரவாதம் அளிக்கவோ அல்லது இதில் ஏதாவதொரு நிறுவனம் ஒருபோதும் முறிவடையாது என்று உறுதிப்படுத்தவோ சட்டரீதியான அதிகாரம் மத்திய வங்கியிடம் கிடையாது. மத்திய வங்கி, அதனால் மேற்பார்வை செய்யப்படும் ஒரு வங்கி அல்லது ஒரு நிதிக் கம்பனி முறிவடையுமிடத்து வைப்பாளர் ஒருவருக்கு அவரின் மொத்த வைப்புக்களின் தொகையில் உயர்ந்த பட்சம் ரூபா 200,000 கொண்ட தொகையினை 2012 ஜனவரி 01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் மீள்கொடுப்பனவு செய்யப்படுவதற்கு உத்தரவாதம் அளிப்பதற்காக வைப்புக் காப்புறுதி திட்டமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.
- மேலுள்ள ஏதாவதொரு நிறுவனமொன்றில் பணம் வைப்பிலிடும்போது தயவுசெய்து உங்கள் வைப்புக்களின் பாதுகாப்பு தொடர்பாக கவனம் செலுத்தல் வேண்டும்.

**இலங்கை மத்திய வங்கி**

தொலைபேசி: 2477100, 2477105, 2477120, 2477[illegible] தொலைநகல்: 2477711, [illegible]@cbsl.lk

நிதி உளவறிதல் பிரிவு · தொலைபேசி: 2477500, 2477504 · தொலைநகல்: 2477738, [illegible]



# ரணில் தரப்போகும் உத்தரவாதம் என்ன?

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவின் யாழ். விஜயம் பல்வேறு விடயங்களைப் பற்றி சிந்திக்க வைத்துள்ளது.

ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணம் மட்டுமல்லாது, வன்னி, முல்லைத்தீவு என யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கும் விஜயம் செய்தார். பொது மக்கள், மீனவர்கள், விவசாயிகள், வர்த்தக சம்மேளனங்கள், சிவில் சமூகத்தினர், சட்டத்தரணிகள், மகளிர் அமைப்புகள் எனப் பலதரப்பட்டவர்களையும் சந்தித்து வடமாகாணத்தின் உண்மையான நிலைவரங்களை நேரடியாகவே கண்டும் கேட்டும் அறிந்து கொண்டார்.

சென்ற இடங்களிலெல்லாம் தமிழ் மக்கள் பட்ட அவஸ்தைகளையும் துன்பங்களையும் பெரிதும் வேதனையுடன் கூறினார். அவர்களுக்கு உடனடியாக நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டும் என்றும் கூறினார். அத்தோடு நின்றுவிடவில்லை. இனப் பிரச்சினைக்கு உறுதியான அரசியல் தீர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் அடித்துக் கூறினார்.

இந்த விஜயத்திற்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் விசேடமாக பாதிக்கப்பட்ட இடங்களில் மூலை முடுக்குகளுக்கு எல்லாம் அழைத்துச் சென்று காட்டினார். விஜயகலாவின் முயற்சி பாராட்டத்தக்கது.

தமிழ் மக்களின் பிரச்சினை நலிப்பட்ட முறையில் உங்களுடைய பிரச்சினை அல்ல என்னுடைய பிரச்சினை. நம்முடைய பிரச்சினை. தமிழர், சிங்களவர், முஸ்லிம் என்று இல்லாமல் ஒன்றிணைந்து போராடுவோம். பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்போம். ஆதரவு தாருங்கள் என்று யாழ். மக்களிடம் வேண்டுகோள் விடுத்தார் ரணில். எதிர்க்கட்சித் தலைவரின் உணர்வுகளை தமிழ் மக்கள் மதிக்கின்றனர்.

ஆனால், ரணில் விக்கிரமசிங்கவின் இந்த உணர்வுகள் உள்ளத்திலிருந்து வந்ததையா அல்லது உதட்டளவில் வந்ததா என்று நாடி பிடித்துப் பார்க்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்க்க வேண்டுமானால் அதற்கு ஒரே வழி ஆட்சி மாற்றம் தான் என்று ரணில் கூறுகின்றார்.

அப்படியானால் ரணில் ஜனாதிபதியாக வேண்டுமானால் வடக்கு கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களின் ஆதரவு கட்டாயம் தேவை.

இம்மக்கள் வாக்களித்தும் ஒருவரை ஜனாதிபதியாக்கலாம். வாக்களிக்காமல் புறக்கணித்தும் மற்றவரை ஜனாதிபதியாக்கலாம். இது கடந்த காலத்தில் கண் கூடாகக் கண்ட உண்மை.

இனப் பிரச்சினைத் தீர்வுக்கு அன்று தான் வைத்த ஆலோசனைகளையும் தீர்வுத் திட்டத்தையும் பிரபாகரன் ஏற்றிருந்தால் இன்று தமிழர்களுக்கு இவ்வளவு பெரிய இழப்பு ஏற்பட்டிருக்காது என்று கூறினார் ரணில்.

ஆனால், புலிகளைத் தோற்கடிக்கச் செய்ததில் சமபங்கு ஐக்கிய தேசியக் கட்சிக்கும் உண்டு. புலிகள் இயக்கத்தில் இரண்டாம் இடத்தில் இருந்த கருணாவுக்கு மூளை சலவை செய்து கட்டுக் கோப்பாக இருந்த இயக்கத்தை இரண்டு மூன்றாக உடைத்துப் பலமிழக்கச் செய்த பெருமை இந்த ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சிதானே என்று தமிழ் மக்கள் முணுமுணுப்பதையும் கேட்க முடிகின்றது.

இவை எல்லாவற்றையும் மீண்டும் மீண்டும் அசை போடுவதால் எந்த நன்மையும் ஏற்பட்டுவிடப் போவதில்லை. அதற்கு மாற்றுப் பரிகாரமும் பிராயச் சித்தமும் காணப்பட வேண்டும்.

ரணில் விக்கிர சிங்க ஜனாதிபதியினால் கீழ்கண்ட விடயங்களுக்கு என்ன பதில் கூறப் போகின்றார்.

★ தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படுமா?
★ தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு உத்தரவாதம் அளிக்கப்படுமா?
★ போர்க் குற்றம் தொடர்பாக சர்வதேச விசாரணைக்கு உடன்படுவாரா?
★ ஒரு காலத்தில் இவரால் முன்வைக்கப்பட்ட சமஷ்டி முறையை தூசு தட்டுவாரா?
★ இவரும் கூட 13பிளஸ் என்று தான் கூறுகின்றார்.

அப்படியானால் காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்குவாரா?

இவற்றிற்கெல்லாம் வெளிப்படையான பதில்கள் தேவை.

இவற்றிற்கெல்லாம் ரணில் விக்கிரம சிங்க உளம் திறந்து பதில் அளிப்பதன் மூலம் அவர் மீதுள்ள நம்பகத் தன்மையைப் பாதுகாக்க முடியும்.

என்ன சொல்லப் போகிறார் ரணில். யாழ். நகரில் நடந்த திட்டமிட்டுள்ள கூட்டு மேதினத்தில் ரணில் வழங்கப்போகும் உத்தரவாதங்களை எதிர்பார்க்கின்றனர் யாழ் மக்கள்.

இரா.புத்திரசிகாமணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர் ஒளி
THE SUDAROLI
வாரமலர்
25 மார்ச் - 31 மார்ச் 2012
85, ஜெயந்த மல்லிமாரச்சி மாவத்தை, கொழும்பு-14. டெலிபோன் 0115738005
பெக்ஸ் 0115517944 - 5
E-mail: editorial@sudaroli.com

## உலக சுயநலன்களுக்கு மத்தியில்...

அமெரிக்கா தலைமையிலான மேற்கு நாடுகளின் நகர்வுகள் குறித்து பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப் படுகின்றன. இலங்கை விவகாரத்தில் அமெரிக்காவின் இரட்டைப் போக்குப் பற்றியும் பல விமர்சனங்கள் எழுந்துள்ளன.

தம்மீது அமெரிக்கா சாத்தும் குற்றச்சாட்டுக்களை இலங்கை அரசாங்கம் கடுமையாக எதிர்த்து வருகின்ற சூழலில், அமெரிக்கா தொடர்பான தமிழர் தரப்பிலிருந்தும் பாதகமான கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன. அமெரிக்காவின் அழுத்தங்கள் இலங்கை அரசிற்கு சில நிர்ப்பந்தங்களை ஏற்படுத்தும் என தமிழரில் ஒருசாரார் தெரிவிக்க, நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறு மட்டும் இலங்கைக்கு அழுத்தம் கொடுப்பதன் மூலம், இலங்கைத் தமிழர்களின் அடிப்படை உரிமைகள் மூடிமறைக்கப்படுவதற்கான ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் சிலர் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

இலங்கை போர்க்குற்றங்களில் ஈடுபட்டிருந்தாலும், அதனைத் தட்டிக் கேட்பதற்கு அமெரிக்காவிற்கு என்ன அருகதை இருக்கின்றது? உலகம் முழுவதும் அமெரிக்கா புரியாத குற்றங்களா? என சில இடதுசாரிகள் கேட்கின்றனர்.

இன்று அமெரிக்கா இலங்கை விவகாரத்தில் தலையிடுவதானது, உண்மையில் தமிழர்கள் மீதான அன்பினாலோ, பட்சாதாபத்தினாலோ அல்லவென்பதை தமிழர்கள் நிச்சயம் புரிந்து கொள்வார்கள்.

ஒவ்வொரு நாடும் தன் நலன் சார்ந்தே செயற்பட்டு வருகின்றது. இன்று அமெரிக்காவாக இருந்தாலும் சரி, இந்தியாவாக இருந்தாலும் சரி அவை இலங்கை விவகாரத்தில் தலையிடுவதானது சுயநலனின் பாற்பட்டதே. உண்மையில் இந்த நாடுகள் தமிழர்களை அழிவிலிருந்து காப்பாற்றியிருக்க முடியும். இறுதிப்போரில் வகைதொகையின்றி தமிழ் மக்கள் கொல்லப்பட்டுக் கொண்டிருந்த வேளையில் கண்களை மூடிக்கொண்டிருந்த இந்த நாடுகள் இன்று மனித உரிமைகள் குறித்தும், போர்க்குற்றங்கள் குறித்தும் உரத்துப் பேசுகின்றன.

இந்து சமுத்திரப் பிராந்தியம் மீதான சீனாவின் நகர்வுகளும், சீனாவிற்கும் இலங்கைக்குமிடையில் ஏற்பட்டுள்ள நெருக்கமும்தான் இதற்கெல்லாம் காரணம்.

இந்து சமுத்திரத்தின் கிழக்கு மற்றும் தெற்கிலுள்ள நாடுகளுடன் உறவுகளைப் பேணிவரும் சீனா, அவற்றின் அபிவிருத்திக்கெனவும் கட்டுமானங்களுக்கெனவும் பல உதவிகளைப் புரிந்து தனது கால்களை அகலப் பதித்து வருகின்றமையானது அமெரிக்காவினதும் இந்தியாவினதும் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது. இதனைத் தடுப்பதற்கான பல்வேறு முயற்சிகளை இவ்விரு நாடுகளும் மேற்கொண்டு வருகின்றன. இலங்கை விவகாரத்தில் இந்தியா ஒரு விதமான மென்போக்கைக் கடைப்பிடித்து அணுக முயல்கின்றது. ஆனால், அமெரிக்கா தீவிரத்தன்மையுடன் இப்போது காய்களை நகர்த்தி வருகின்றது. அதன் ஒரு வெளிப்பாடுதான் தற்போது இலங்கை மீது அமெரிக்கா கொடுத்து வரும் அழுத்தமாகும்.

கடந்த தசாப்தங்களில் உலக ஒழுங்கில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. ஒரு காலத்தில் அமெரிக்காவும், ரஷ்யாவும் உலகின் இரண்டு பெரும் வல்லரசுகளாக இருந்தன. இவ்விரு வல்லரசுகளுக்குமான நேசநாடுகளும் இருந்தன. குறிப்பாக இந்தியா ரஷ்யாவின் சார்பு நாடாகவே அப்போதிருந்தது. அது பனிப்போர் காலத்து உலக ஒழுங்காகும். ரஷ்யாவின் உடைவிற்குப் பின்னர் அமெரிக்கா ஏகவல்லரசானது. அது பனிப்போருக்குப் பின்னான உலக ஒழுங்காகும். அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் ஒசாமா பின்லேடனால் தாக்கப்பட்டதன் பின்னர் பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்ற கொள்கையை அமெரிக்கா உலகம் முழுவதும் பிரகடனம் செய்தது. இது பனிப் போருக்குப் பின்- பின்னான உலக ஒழுங்காகக் கணிப்பிடப் பட்டது. இன்று உலகின் பலம் பொருந்திய நாடாக சீனா வளர்ந்து வருகின்ற நிலையில் மீண்டுமொரு பனிப்போர் உலக ஒழுங்கு தோன்றியுள்ளது. அதாவது அமெரிக்க- சீன பனிப்போர்.

இவ்வுலக ஒழுங்கின் போக்கினைக் கருத்தில் கொண்டே உலக நாடுகள் நகர்கின்றன. இன்று இலங்கைத் தமிழர்கள் அமெரிக்காவையும் இந்தியாவையும் நம்புவதா இல்லையா என்பதல்ல பிரச்சினை. இன்றுள்ள உலக ஒழுங்கில் தமிழர்கள் தாங்கள் நலன்களை அடைவதற்கான சாதகமான வழிகளில் இந்த நாடுகளின் நகர்வுகளைப் பயன்படுத்திக்கொள்வதென்பதே முக்கியமானதாகும்.

இதற்கேற்றவாறு தமிழர்கள் தங்கள் இராஜதந்திர வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டும்.

# நிர்ப்பந்திக்கப்பட்ட ஆர்ப்பாட்டங்கள்!

வலுக்கட்டாயமாக வீதிக்கு மக்களை இழுத்து, பதாகைகளை அவர்கள் கைகளில் திணித்து, கோசங்களை எழுப்புமாறு வற்புறுத்தி ஆர்ப்பாட்டம் நடாத்தும் நிலை இலங்கை அரசுக்கே கைவரப்பெற்றது. தமிழ் மக்களின் இனப் பிரச்சினையை, அவர்களின் இருப்புக்கான கோரிக்கையை அரசியலாக்கி, அதில் குளிர் காயும் நிலையை இலங்கை ஆட்சியாளர்கள் அன்றிலிருந்து இன்றுவரை தொடர்ச்சியாகப் பேணிவருகின்றனர். அதனால் ஏற்படும் சர்வதேச அழுத்தங்களை முறியடிக்க மக்களை பகடைக்காய்களாகப் பயன்படுத்தி அவர்களை வலுக்கட்டாயமாக வீதிக்கு இழுத்து வந்து ஆர்ப்பாட்டம் நடாத்துவதில் இலங்கை ஆட்சியாளர்கள் ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் அல்ல.

அன்றைய நாள்களில் இடம்பெற்ற தமிழர்களின் உணர்வலைகளை வெளிப்படுத்தும் பொங்குதமிழ் நிகழ்வு என்றுமே தமிழரிடம் இருந்தது. உலகின் கவனத்தை ஈர்க்கும் மக்கள் சக்தியின் ஒன்றிணைவாக இப்போராட்டம் விளங்கியது. உரிமை வேண்டி அமைதியான முறையில் வெகுஜனக் கூட்டத்தில் வெள்ளமாய் சிறுவர்கள் முதல் நடக்க முடியாத முதியவர்கள் வரை கலந்து கொண்டனர். அன்றைய ஆர்ப்பாட்டங்கள் எந்தவித கட்டாயங்களும் நிர்ப்பந்தங்களுமின்றி மக்களின் உணர்வைப் பிரதிபலிக்கும் ஒன்றாக விளங்கியது.

அன்றைய போராட்டங்கள் உலக மக்களையே உற்று நோக்கவைத்த பேரெழுச்சிகளாக விளங்கின. ஆனால் இன்றோ தமிழ் மக்கள் எதிர்ப்பினைக் காட்டமுடியாதவர்களாக ஆக்கப்பட்டுள்ளனர். அன்று நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்கள் போன்றில்லாமல் இப்போது மக்களை ஒன்று சேர்த்து தமக்குச் சார்பாக ஆர்ப்பாட்டத்தை நடாத்துவதும், அதனை படம் பிடித்து உலகிற்கு காட்டுவதும்.

ஆனால், தமிழ் மக்கள் கொல்லப்பட்டு அவர்களின் சொத்துக்கள் அழிக்கப்பட்டபின், இப்போது சர்வதேச அழுத்தங்களிலிருந்து தப்பிக்கொள்வதற்காக மக்கள் ஆர்ப்பாட்டங்கள் என்ற ஒரு போலி நாடகத்தை அரசு கையிலெடுத்துள்ளது.

இனப்பிரச்சினைக்கான தீர்வு தேவையில்லை, அவர்களுக்குத் தேவை அபிவிருத்தியே என உலகநாடுகளிற்குக் காட்டுவதற்கு இந்த நாடகம் அரங்கேற்றப்படுகின்றது.

இப்பேரணியில் கலந்து கொண்ட பலருக்கு, யாழ் நகருக்கு பஸ்களில் கொண்டு வந்து இறக்கப்பட்ட பின்னரே தாம் பேரணியில் கலந்து கொள்வதற்காக அழைத்து வரப்பட்டோம் என்ற உண்மை தெரிந்திருந்தது.

அமைச்சர்கள் வந்து உதவிப் பொருள்கள் தரப்போகிறார்கள். வீட்டுக் கூரைகள், தகரங்கள் உட்பட உதவிப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன எனக் கூறி அழைத்துவரப்பட்ட மக்கள் இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொள்ள வைக்கப்பட்டனர்.

இதைவிட விசேடம் என்னவென்றால் இராணுவ முகாம் பொறுப்பதிகாரிகளால் தென்மராட்சி, மிருசுவில், சாவகச்சேரி, கொடிகாமத்தில் உட்பட்ட பகுதிகளில் அன்று நடமாடிய மக்களின் அடையாள அட்டைகள் முதல் நாள் பறிக்கப்பட்டன. ஏன் திடீரென அடையாள அட்டைகள் பறிக்கப்படுகின்றன என்ற அச்சம் அப்பகுதி மக்களிடம் மேலோங்கத் தொற்றிக் கொள்ளத்தவறவில்லை. அடையாள அட்டைகள் பறிக்கப்பட்டவர்களை அடுத்த நாள் இராணுவ முகாம்களுக்கு வந்து அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு உத்தரவுகள் விடப்பட்டன. மறுநாள் அடையாள அட்டைகளைப் பெற இராணுவ முகாம்களுக்குச் சென்ற குறித்த மக்களை அடையாள அட்டைகளைக் கொடுத்து வலுக்கட்டாயமாக வாகனத்தில் ஏற்றி யாழ் நகருக்குக் கொண்டு வந்து இறக்கி ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. குறித்த பகுதி மக்களின் தகவல்கள் இதனை உறுதிப்படுத்துகின்றன.

துரையப்பா விளையாட்டு அரங்கில் இருந்து ஆரம்பமான இப்பேரணியில் பொதுமக்களின் எண்ணிக்கையை விட படைத்தரப்பினர், அரசசார்புக் கட்சியினர், தென்னிலங்கையிலிருந்து கொண்டு வந்து இறக்கப்பட்டவர்கள் எண்ணிக்கையும் இணைந்து கொண்டனர். இப்பேரணி வைத்தியசாலை வீதி ஊடாக வந்து பருத்தித்துறை வீதியூடாகச் சென்று ஸ்ரான்லி வீதியில் திரும்பி கஸ்தூரியார் வீதி ஊடாகச் சென்று யாழ். பஸ் நிலையம் வரை சென்றதை செய்திகள் ஆதாரப்படுத்துகின்றன.

இவ் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் ஜெனிவா பிரேரணைக்கு எதிராகக் குரல் எழுப்பினார்களோ இல்லையோ வீதியில் அடிப்படையும் ஆர்ப்பாட்டம் என்பதற்கான எந்த அடையாளங்களும் இல்லாமல் பேரணி நடாத்துவதிலேயே அக்கறை காட்டினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மற்கலேயே ஜனாதிபதிக்கு அருளாசி வேண்டி ஆலய மணிகளை ஒலிக்குமாறு வற்புறுத்திய சம்பவமும் அண்மையில் இடம்பெற்றது. இதனை விட ஜெனிவா மாநாட்டிற்கு எதிரானது என்ற போர்வையில் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் வலுக்கட்டாயத்தில் அரச ஊழியர்கள் ஆலயத்திற்குச் செல்லுமாறும் பூசைகளை நடாத்துமாறும் வற்புறுத்தப்பட்டனர். ஆட்சியிலிருப்பவர்கள் என்ற மமதையில் மக்களையும் அவர்களுக்குச் சேவை செய்யும் அரச உத்தியோகத்தர்களையும் பகடைக்காய்களாக்கி அவர்களின் வெறுப்பிலும் அவஸ்தையிலும் குளிர்காய்வதில் என்றுமே இலங்கை அரச தரப்பும் படைத்தரப்பும் முன்னணி வகிக்கின்றது என்பதை அண்மைய ஆர்ப்பாட்டங்கள் வெளிக்காட்டுகின்றன.

இவ்வாறு வலுக்கட்டாயமாக மக்களைக் கலந்து கொள்ளச் செய்து ஆட்சியாளர்கள் சாதிக்கப்போவது என்ன? மக்களை வலுக்கட்டாயமாக அழைத்துச் செல்வது அடிப்படை மனித உரிமை மீறல் என்பதை அதிகாரத் தரப்பு புரிந்து கொள்ளாதது ஏன்? இதுதான் எல்லோர் மத்தியிலும் எழுந்துள்ள கேள்வியாகும்.

■ ஜனநாயகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவியைக் காதலியுங்கள்





எதிர்பாலினர் மீது அன்பு, ஆசை கலந்த இளமையில் உருவாகும் ஈர்ப்பின் பெயர் 'காதல்!' - இப்படி அறிவியல்பூர்வமாக பார்த்தால் காதல் என்பது பசி, தாகம், கோபம் போன்ற ஓர் இயல்பான உணர்வு! உடல் ரீதியாக பார்த்தால் காதல் என்பது சுரப்பிகளின் விளையாட்டு. ஆண்ட்ரோஜன், ஈஸ்ட்ரோஜன், அட்ரினலின் போன்ற சுரப்பிகளின் இயக்கத்தில் ஏற்படும் மாற்றங்கள். 'காதல் என்பது அப்பட்டமான சுயநலத்தின் வெளிப்பாடு' என்கிறார்கள் உளவியல் அறிஞர்கள்!

காதல் செய்யும் மனிதர்களில் சுமார் பத்து சதவீதம் பேர்கூட திருமணம் செய்து கொள்வதில்லை என்பதே நிதர்சன உண்மை! சுமார் 90 சதவீத காதல் திருமணம் என்ற பேச்சினை எட்டும் முன்னரே கலைந்து போய் விடுகிறது. இதற்கு அடிப்படைக் காரணம் இருவருமே முதன்முறையாக காதலில் விழும்போது அவசரப்பட்டு விடுவதுதான். பின்னர் இது காதல் இல்லை. நம் வாழ்க்கைக்கு இது சரிப்படாது என்று பிரிந்து விடுகின்றனர்.

பருவ மாற்றம் காரணமாக இரண்டுங்கெட்டான் பருவத்தில் எதிர்பாலினத்தவரை பார்த்ததும் ஈர்ப்பு உண்டாகிறது. அதை காதல் என்று தவறாக நினைத்து விடுகிறார்கள். அது வெறும் இனக்கவர்ச்சி. ஆகவே திருமணத்திற்குப் பின் கணவன் மனைவிக்குள் ஏற்படும் ஈர்ப்புதான் உண்மையான காதல் என்று துணிந்து சொல்லலாம்.

காமம் என்பதில் காதல் இருக்க வேண்டிய அவசியமில்லை. காமம் என்பது காதல் ஆகாது. ஆனால் காதலில் காமம் என்பது ஒரு சிறு பகுதி மட்டுமே. அது ஒரு சிலருக்கு பெரும்பகுதியாகவும், சிலருக்கு முழுப் பகுதியாகவும் அமையலாம். திருமணத்திற்குமுன் ஏற்படும் காதல் பெரும்பாலும் காமத்தை நோக்கியே நகரும். இல்லையென்று சிலர் மறுத்தாலும் உண்மை அதுதான் என்பது யதார்த்தம்.

அன்பு, நட்பு, நம்பிக்கை, பொறுப்பு ஆகிய நான்கு தூண்களின் மீது கட்டப்படும் அழகிய மாளிகை போன்ற காதலே உன்னதமானது. இந்த உன்னதமான காதலை மனைவிமேல் கொள்வதுதான் நூற்றுக்கு நூறு சரியான செயலாக இருக்கும். அதற்குத் தகுதியுடையவளும் அவளே. காரணம் உங்களுக்காகவே இறைவனால் படைக்கப்பட்ட ஒரு ஜீவன் அவளே. இறைவன் படைத்த மனிதப்படைப்பில் முதல் உறவே கணவன் மனைவி உறவுதான்.

கல்லூரி மற்றும் அலுவலகங்களில் அன்றாடம் வேலை பார்க்கும் இடங்களில் தன்னுடன் படிக்கும், வேலை பார்க்கும் ஆண்கள் பெண்களுடனும், பெண்கள் ஆண்களுடனும் தீவிர நட்புடன் பழகுவதுண்டு. இந்த நட்பில் நல்ல நம்பிக்கை இருக்கும். இதில் எல்லோருக்கும் காமம் இருக்கும் என்று சொல்ல முடியாது. ஒரு சிலரிடமே மட்டும் இருக்கலாம். பெரும்பாலானவர்களுக்கு அன்பு, நட்பு, அளவுகடந்த பாசம் போன்றவற்றிற்கும் காதலுக்கும் உள்ள வித்தியாசம் என்ன என்று தெரியாமலே எல்லாவற்றையும் காதல் என்ற பெயரில் போட்டுக் குழப்பிக்கொள்கிறார்கள்.

குடும்பத்தைப் பற்றி அக்கறை இல்லாமல் சிலர், முழுக்க முழுக்க காதலையே நினைத்துக் கொண்டிருப்பார்கள். எதிர்கால வாழ்வு பற்றிய எவ்வித பொறுப்பும் இருக்காது. அதனால் இதுவும் உண்மையான காதலாக இருக்க முடியாது. ஆனால் வெளிப்பார்வைக்கு இவர்கள் தீவிர காதலர்கள் போல் தோன்றுவார்கள்.


பொழுதுபோக்கிற்காக பலர் காதலிப்பது உண்டு. கல்லூரி மற்றும் தாம் பணியாற்றும் இடங்களில் தன்னை பற்றி மற்றவர்கள் பெருமையாக நினைக்க வேண்டும் அல்லது பேச வேண்டும் என்பதற்காக யாரையாவது காதலித்துக்கொண்டிருப்பார்கள். இவர்களுக்கு காமம்தான் அடிப்படை. இவர்களுக்குள் ஓரளவுதான் நம்பிக்கை இருக்கும். ஆனால் கொஞ்சம்கூட பொறுப்பே இருக்காது. ஆனால் இவர்கள் ஒன்றாக இணைந்து ஊர் சுற்றுவார்கள். பலர் முன்னிலையில் தீவிரமாக காதலிப்பது போல் நடிப்பார்கள். இதை தேறாத காதல் என்று கூறிவிடலாம்.

சினிமா நட்சத்திரங்கள் மீது சிலருக்கு காதல் ஏற்படும். சிலர், தனது காதலை சொல்லாமலேயே தான் மட்டுமே தனியே காதலித்து ஒருதலையாக அலைந்து கொண்டிருப்பார்கள். சிலர் வயது வித்தியாசமின்றி காதலிப்பார்கள். இவையெல்லாம் நடைமுறைக்கு ஒத்துவராத காதல்கள். இதை மூடத்தனமான காதல் என்றும் பொருந்தாக் காதல் என்றும் சொல்லலாம். ஆனால் முரட்டுத்தனமான நம்பிக்கையும், குருட்டுத் தனமான பொறுப்பும் கொண்டிருப்பார்கள். 'டீன்ஏஜ்' பருவத்தில் உடலும், மனமும் புதுமையைத் தேடும் ஏக்கத்தில் இருக்கும். கண்ணுக்கு அழகாக இருப்பவர்கள் அல்லது வசதியாக முன்வந்து பேசுபவர்களை மனது விரும்பும். அதைக் காதல் என்று பெரும்பாலானவர்கள் தவறாக எடுத்துக்கொள்கிறார்கள். எதிர்பாலினரின் உருவம் தவிர வேறு எதையும் அறியாமல் காதலில் விழும்போது அங்கே காமம் மட்டுமே இருக்கும்.

இயல்பான காதல் என்பது முதலில் நம்பிக்கையில் தொடங்கும். பொறுப்புணர்வு முழுமையாக இருக்கும். அதன் பின்னரே காமம் வரும். நம்பிக்கை, பொறுப்புணர்வு, காமம் இவை மூன்றும் சரியான விகிதத்தில் கலந்திருப்பதே உண்மையான காதலாகும். காமத்திற்கும் காதலுக்கும் பெருமளவு தொடர்பில்லை. காமம்தான் காதல் என்று சிலர் சொல்வது அவர்களின் அறியாமையே. இருவரும் ஒருவரை ஒருவர் முழுமையாகப் புரிந்து கொள்வதே இயல்பான காதலின் ஆணிவேர். காதலில் விழுந்த பிறகு, ஒரு ஆணுக்கு, தாம் நேசிக்கும் பெண்தான் உலகிலேயே அழகியாகத் தெரிவாள். (அது உங்கள் மனைவியாக இருக்கட்டுமே) பிறரது விமர்சனங்களைப் பற்றி கண்டு கொள்ளவோ, ஏற்றுக் கொள்ளவோ மாட்டார்கள். அதுபோலவே ஓர் ஆணின் புற அழகை பார்த்தே பெண்கள் காதலுக்குரியவர்களை தேர்ந்தெடுக்கிறார்கள். ஆனால் அந்த அழகு அவர்களுக்கு பிடித்திருக்கும் அவ்வளவுதான். இவையெல்லாமும் போலியான காதல்.

உண்மையான காதல் என்பது கணவன் மனைவிக்குள் இருப்பது. இருக்க வேண்டியது. உங்கள் உண்மையான காதலி உங்கள் மனைவியாகவே இருக்கட்டும். உன்னதமான காதலை மனைவிமேல் கொள்வதுதான் நூற்றுக்கு நூறு சரியான செயலாக இருக்கும்.

# வண்ணங்களில் குளிக்கும் ஹோலி பண்டிகை



ஹோலி பண்டிகை இந்துக்களால் கொண்டாடப்படும் ஒரு வண்ணமயமான பண்டிகை ஆகும். பனி காலத்திற்கு விடையளித்து, வெயில் காலத்திற்கு வரவேற்புரை வழங்கும் காலத்தில் கொண்டாடப்படும் ஒரு பண்டிகை ஆகும். விவசாயிகள் அறுவடை முடித்து, நிறைந்த மனத்துடன் இதை கொண்டாடுவார்கள். இந்த பண்டிகை பங்குனி மாதம் பௌர்ணமியன்று (மார்ச் மாதம்) கொண்டாடப்படும்.

கிருஷ்ண பகவான் தன் குழந்தை பருவத்திலும், பால்ய பருவத்திலும் கோபியர்களுடன் விளையாடியதுதான் இந்த ஹோலி பண்டிகை. இப்பொழுதும் ஹோலிப் பாடல்களில் கிருஷ்ணரின் லீலைகளையும், குறும்புகளையும் விவரித்து பாடுவர். இந்த பண்டிகை ராதாவும் கிருஷ்ணரும் விளையாடிய விளையாட்டு. இந்த பண்டிகையில் மிக முக்கியத்துவம் வாய்ந்தது, 'பிச்காரி' என்னும் வண்ண நீரை பீய்ச்சி அடிக்கும் குழாயில், 'குலால்' என்னும் பல வண்ண நிறங்களில் இருக்கும் சிறுசிறு துகள்களை கலந்து ஒருவர் மீது ஒருவர் தெளித்து விளையாடி மகிழ்வர்.

இரணியன் என்னும் அரக்கன், தன்னையே எல்லோரும் கடவுள் என தொழ வேண்டும் என்று எண்ணினான். இரணியனின் மகன் பிரகலாதன் அதை எதிர்த்தான். பிரகலாதன் மகாவிஷ்ணு ஒருவரையே கடவுள் என்று போற்றி, பூஜித்து வந்தான். இதையறிந்த இரணியன், மகனென்றும் பாராமல் பிரகலாதனை பல வகையில் துன்புறுத்தி, தன்னையே கடவுள் என பூஜிக்கும்படி வற்புறுத்தினான். இதற்கு ஒரு வழி காண நினைத்த இரணியன் தன் சகோதரி ஹோலிகாவின் உதவியை நாடினான்.

ஹோலிகா, நெருப்பினால் எரியாத தன்மை படைத்தவள். எனவே, தன் மகன் பிரகலாதனை அழிக்கும் பொருட்டு இரணியன், பிரகலாதனை தன் மடியில் அமர்த்திக் கொண்டு ஹோலிகாவை நெருப்பின் நடுவில் அமரும்படி கூறினான். இதனால், பிரகலாதன் நெருப்பில் எரிந்து விடுவான் என்றும் இரணியன் நினைத்தான். ஆனால் மகாவிஷ்ணுவை மனதில் நினைத்தபடி ஹோலிகாவின் மடியில் அமர்ந்தான் பிரகலாதன். மகாவிஷ்ணுவின் கருணையால் பிரகலாதன் நெருப்பிலிருந்து மீண்டான். ஆனால் ஹோலிகா நெருப்பில் எரிந்து சாம்பலானாள். இதை குறிக்கும் வகையில் ஹோலி பண்டிகையன்று வெட்ட வெளியில் தீயை மூட்டி, அதன் [illegible] மகிழ்வர்.



ஹோலிகா அழிந்த தினத்தையே ஹோலி என்று கொண்டாடுகின்றனர்

இந்தப் பண்டிகையின் சிறப்பாக 'குஜியா' என்ற இனிப்பை எல்லோரும் சாப்பிடுவார்கள். உள்ளே பூரணமாக பால்கோவாவுடன் முந்திரி, திராட்சை, வெள்ளரி விதை, கொப்பரை முதலியவற்றை சேர்த்திருப்பார்கள். அதே போல் 'பாங்க்' என்று ஒருவகை கீரையை பாலிலோ, அல்லது பக்கோடா போன்றோ ஏதோ ஒரு வகையில் அன்றைய தினம் உணவில் சேர்த்துக் கொள்வார்கள். இந்தக் கீரையின் சிறப்பு என்னவென்றால் அதைச் சாப்பிட்டவுடன் ஒன்று சிரித்துக் கொண்டே இருப்பார்களாம். அல்லது அழுது கொண்டே இருப்பார்களாம். அதே போல் 'பாப்பட்' என்று சொல்லப்படும் மசாலா அப்பளத்தைச் சுட்டும் சாப்பிடுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பேரரசனாகும் ஆசை வந்தது!

அடுத்தடுத்து ஏற்பட்ட கொலை முயற்சிகள். எந்தப் பக்கம் திரும்பினாலும், யாரேனும் நெப்போலியனைக் கொல்லப் போகிறோம் என்று முறைத்துக் கொண்டு நின்றார்கள். இந்தக் கொலை முயற்சிகளில் பெரும்பாலானவை பிரெஞ்சுக் காவலர்களால் முன்கூட்டியே கண்டறியப்பட்டு, முறியடிக்கப்பட்டுவிட்டமை வேறு விஷயம்.

ஆனால், தன்னைக் கொல்வதற்கு இத்தனை பேர் ஆவேசத்தோடு முயற்சி செய்கிறார்கள், அவர்களுடைய முயற்சிகளை எத்தனை தூரம் முடக்கினாலும், திரும்பத் திரும்ப எழுந்து வந்து கொல்லப் பார்க்கிறார்கள் என்பது நெப்போலியனுக்குப் பெரிய கவலையாகவே இருந்தது.

நெப்போலியன்மீது தொடர்ச்சியாக இத்தனைக் கொலை முயற்சிகள் நடக்க முக்கியமான காரணம், அப்போது பிரான்ஸில் நெப்போலியனைத்தவிர, பெயர் சொல்லுமாறு எந்தத் தலைவரும் உருவாகியிருக்கவில்லை. நெப்போலியனுடன் ஆட்சிக் குழுவில் இடம்பெற்றிருந்த மற்ற இரண்டு தலைவர்களும்கூட, சும்மா பெயரளவில்தான் ஆட்சியில் இருந்தார்களே தவிர, அவர்களுக்கு எந்தவிதமான முக்கியத்துவமும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

இதனால், நெப்போலியனைக் கொன்றுவிட்டால், பிரான்ஸ் ஆட்சி நகர்ந்துவிடும் என்று அவருடைய எதிரிகள் கணக்குப் போட்டார்கள். இவர்களுடைய கொலை முயற்சிகளுக்குச் சில அக்கம்பக்கத்து நாடுகளின் ஆதரவும் இருந்தது.

இந்தச் சதித்திட்டங்களை எப்படிச் சமாளிப்பது என்று நெப்போலியன் யோசனையில் ஆழ்ந்திருந்த நேரம், இங்கிலாந்து, பிரான்ஸ் மீது போரை அறிவித்தது (1803). ஆமியன்ஸ் சமாதான ஒப்பந்தத்தை மீறி, அவர்கள் பிரான்ஸுக்கு எதிராகக் கொடி தூக்கினார்கள்.

ஐரோப்பாவின் பலம் வாய்ந்த இரு நாடுகளான இங்கிலாந்தும் பிரான்ஸும் தங்களுக்குள் சண்டை போட்டுக்கொண்டால், மற்றவர்கள் அதைப் பார்த்துக்கொண்டு, சும்மா உட்கார்ந்திருக்க முடியாது. அவர்களும் ஏதேனும் ஒருபக்கம் சாய்ந்தே ஆக வேண்டும். இப்படி ஆளாளுக்குச் சண்டையில் இறங்கிவிட்டால், அந்தப் பிரதேசத்தின் அமைதி கெட்டுப்போகும்.

இதனால், தயவுசெய்து நீங்கள் மீண்டும் சமாதானமாகப் போய்விடுங்கள் என்று இங்கிலாந்துக்கும் பிரான்ஸுக்கும் இடையே சமரசம் செய்து வைக்கச் சிலர் முயன்றார்கள். இருதரப்பினரின் குறைகளைக் கேட்டு, அதற்கேற்ற மாற்று நடவடிக்கைகள் சிபாரிசு செய்யப்பட்டன.

ஆனால், இங்கிலாந்து முன்வைக்கும் யோசனைகள் பிரான்ஸுக்குப் பிடிக்கவில்லை. பிரான்ஸ் சொல்வது இங்கிலாந்துக்குப் பிடிக்கவில்லை, இருவருக்கும் பொதுவாக ஏதேனும் சொன்னால், அது எதிராளிக்குச் சாதகமாக இருக்கிறது என்று சொல்லி, இருவருமே மறுத்தார்கள்.

இதனால், கொஞ்சம் கொஞ்சமாக இங்கிலாந்து, பிரான்ஸ் உறவு முறிந்தது. பிரான்ஸுக்கு எதிரான தனது இராணுவ நடவடிக்கைகளைப் பகிரங்கமாக நிகழ்த்தத் தொடங்கியது இங்கிலாந்து.

இதற்குப் பதிலடியாக, பிரான்ஸில் இருக்கும் இங்கிலாந்துக் குடிமக்களின் பாஸ்போர்ட்களை முடக்கியது நெப்போலியன் அரசு. அவர்கள் அனைவரும் கிட்டத்தட்ட கைதிகளைப்போல்தான் நடத்தப்பட்டார்கள்.

இப்படி பிரச்சினைகள் புகைந்துகொண்டே இருந்தன. ஆனால் உடனடியாகப் போர் மூண்டுவிடவில்லை. காரணம், அப்படி ஒரு போர் நிகழ்ந்தால், யார் ஜெயிப்பார்கள் என்பது குறித்து இரண்டு நாடுகளுக்குமே லேசான சந்தேகம் இருந்தது. ஆகவே, யாரும் ஆபத்தில் வலியச் சென்று இறங்க விரும்பவில்லை.

ஆனால், இரண்டு ஆண்டுகளுக்கு முன், நெப்போலியன் பாடுபட்டுச் சேர்த்த ஐரோப்பிய அமைதி, இப்போது நடுத்தெருவில் நின்றுகொண்டிருந்தது. அநேகமாக எல்லா நாடுகளும் நெப்போலியனுக்கு எதிராக ஆயுதம் திரட்டத் தொடங்கியிருந்தார்கள். சிலர் பகிரங்கமாக, சிலர் ரகசியமாக.

எனக்கு மட்டும் ஏன் இப்படி நடக்கிறது? என்னுடைய ஆட்சியை மட்டும் சுற்றியிருக்கிறவர்கள் எப்போதும் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்களே, ஏன்? என்னதான் மெனக்கெட்டாலும், அமைதியை நாலு நாள்கூட கட்டிக்காக்க முடிவதில்லையே, ஏன்? இந்தக் கேள்விகளை, நெப்போலியனே தனக்குள் பலவிதமாகக் கேட்டுக்கொண்டிருந்தார். நீண்ட யோசனைக்குப் பிறகு, மற்ற ஐரோப்பிய நாடுகளை அவர்களுடைய வழியில் சென்றுதான் அடக்க வேண்டும் என்று முடிவெடுத்தார் அவர்.

இங்கிலாந்தினரும் மற்றவர்களும் என்னை ஏன் எதிர்க்கிறார்கள்? நான் பிரான்ஸின் ராஜா இல்லை, என்னுடைய இடத்தில் ஒரு பதினான்காவது லூயியோ, பதினைந்தாம் லூயியோ உட்கார்ந்திருந்தால், இப் போது இப்படி வாலாட்டுவார்களா? மாட்டார்கள்.

"சரி. போகிறது. உங்களுக்குக் கிரீடம் சூடிய அரசர்தானே வேண்டும்? நானே கிரீடம் சூடிக் கொண்டுவிடுகிறேன்" என்று முடிவெடுத்தார் நெப்போலியன். அரசராக இல்லை, பேரரசராக, சக்கரவர்த்தியாக!

> "உங்களுக்குக் கிரீடம் சூடிய அரசர்தானே வேண்டும்? நானே கிரீடம் சூடிக் கொண்டுவிடுகிறேன்" என்று முடிவெடுத்தார் நெப்போலியன். அரசராக இல்லை, பேரரசராக, சக்கரவர்த்தியாக!

சரித்திரத்தின் மிக விநோதமான நகைமுரண் அது. மன்னராட்சி வேண்டாம் என்று வருடக்கணக்காகப் போராடி ஜெயித்து, அதே காரணத்துக்காக ஏகப்பட்ட நாடுகளைப் பகைத்துக்கொண்டு ஆட்சி நடத்திய நெப்போலியன், கடைசியில் பிரெஞ்சுச் சாம்ராஜ்ஜியத்தின் பேரரசராக முடிசூட முடிவெடுத்தார்.

பிரான்ஸ் என்றால் அது ஒரு தேசத்தை மட்டும்தான் குறிக்கிறது. பிரெஞ்சுப் பேரரசு என்று சொல்லிக்கொண்டால், ஐரோப்பாவில் நெப்போலியன் ஆதிக்கம் செலுத்திய சகல பகுதிகளுக்கும் அவர்தான் மஹாராஜா என்று அர்த்தம்.

நெப்போலியனுக்குத் திடுதிப்பென்று இப்படி மஹாராஜாவாகிற ஆசை வந்ததற்குப் பல்வேறு காரணங்கள் சொல்லப்படுகின்றன. அவற்றுள் சந்தேகங்கள், வதந்திகள், இன்னபிற கச்சடாக்களையெல்லாம் ஒதுக்கிவிட்டுப் பார்த்தால், ஒரு சில விஷயங்களை நிச்சயமாகக் குறிப்பிட முடிகிறது.

முதலாவதாக, என்னதான் நெப்போலியன் 'வாழ்நாள் முழுக்க' தலைமைக் குடிமகனாக இருந்தாலும், அது ஓர் அரசாங்கப் பொறுப்பு மட்டுமே. அவருக்குப்பிறகு, வேறொருவர் கைக்குப் போய்விடும்.

நெப்போலியனைக் கொன்றுவிட்டால், பிரான்ஸ் அநாதையாகிவிடும் என்பது எதிரிகளின் கணக்கு. அதை முறியடிப்பதற்கு ஒரே வழி, தனக்குப் பிறகு ஆட்சி செய்யக்கூடிய ஒரு வம்சத்தை உருவாக்குவதுதான்.

ஆனால் அதற்கு, வெறும் அரசாங்கப் பதவியெல்லாம் போதாது. நெப்போலியனுக்குப் பிறகு அவருடைய வாரிசுகளுக்குப் பென்ஷன் கொடுப்பார்களே தவிர, வம்சாவளி பதவியெல்லாம் சாத்தியமே இல்லை.

ஆகவே, தனக்குப்பிறகு தன்னுடைய வம்சம் ஆட்சியில் தொடர வேண்டும். அதற்காக, பிரெஞ்சுப் பேரரசின் சக்கரவர்த்தியாகப் பட்டம் சூட்டிக் கொள்வது என்று தீர்மானித்தார் நெப்போலியன்.

பிரெஞ்சுப் பேரரசாகப் பட்டம் சூட்டிக் கொள்ள அவர் நாள் குறித்தார்.

இதில் இன்னொரு வேடிக்கை. நெப்போலியனின் வம்சம் என்று சொல்லிக்கொள்வதற்கு, அப்போது அவருக்கு (அதிகார பூர்வமாக) ஒரு மகனோ, மகளோ கூட இல்லை.

அதனால் என்ன? இப்போது குழந்தை இல்லாவிட்டால் என்ன, இனிப்பிறக்கும். வரப்போகிற இளவரசரைப்பற்றிக் கவலைப்பட்டுக்கொண்டிருக்காமல், இந்தப் பேரரசரைக் கவனியுங்கள் என்றார் நெப்போலியன்.

இதன்மூலம், மற்ற ஐரோப்பிய ராஜாக்களுக்கு இணையாகத் தன்னுடைய மதிப்பும் உயர்ந்துவிடும், பிரான்ஸுக்கும் பிறநாடுகளுக்கும் இடையிலான ராஜ்ஜிய உறவுகள் மேம்படும் என்றெல்லாம் அப்பாவித்தனமாக நம்பினார்.

மக்களாட்சிக் கொள்கைகளை, மன்னராக இருந்தும் தன்னால் நிறைவேற்ற முடியும் என்று உறுதியாக நம்பினார் அவர்.

என்னதான் முழுநீளத் தர்க்க வாதங்கள், விளக்கங்களை அடுக்கினாலும் கூட, நெப்போலியன் பிரெஞ்சுச் சக்கரவர்த்தியாகத் தன்னை அறிவித்துக்கொண்டதை நியாயப்படுத்துவது அத்தனைச் சுலபமில்லை.

1804-ம் ஆண்டு இறுதியில், நெப்போலியனின் முடிசூட்டு விழாவுக்கான ஏற்பாடுகள் பிரம்மாண்டமான முறையில் தொடங்கின. அரசியலில் மதகுருமார்களின் தலையீடு இருக்கக்கூடாது என்று வலியுறுத்திய அதே நெப்போலியன், தன்னுடைய முடிசூட்டு விழாவுக்கு அப்போதைய போப் ஆண்டவர் பியஸை (Pius VII) அழைத்திருந்தார். அவரும் கலந்து கொண்டார்.

முடிசூட்டு விழாவுக்குச் சற்று முன்னதாக, இன்னொரு சுவாரஸ்யமான நாடகம் நடைபெற்றது. என்னதான் பிரெஞ்சு அரசாங்கம் கத்தோலிக்கக் குருமார்களின் அதிகாரங்களைப் பிடுங்கிக்கொண்டிருந்தாலும், அதன் தலைவரான நெப்போலியனுக்கு முடிசூட்டுவதில் போப் ஆண்டவருக்கு ஆட்சேபணை இல்லை. சக்கரவர்த்தினி விஷயத்தில்தான் அவருக்குக் கொஞ்சம் தயக்கம்.

நெப்போலியன் சக்கரவர்த்தியானால், அவருடைய மனைவி ஜோசஃபின்தானே சக்கரவர்த்தினி?

பிரச்சினை என்னவென்றால், நெப்போலியனின் திருமணம் தேவாலயத்தில் முறைப்படி நடைபெறவில்லை. ஆகவே, போப் ஆண்டவரைப் பொறுத்தவரை, நெப்போலியனுக்கும் ஜோசஃபினுக்கும் இன்னும் திருமணமே நடக்கவில்லை என்றே அர்த்தம்.

ஆகவே, அவர்கள் இருவரும் புதிதாகத் திருமணம் செய்துகொண்டால்தான், ஜோசஃபினுக்குத் தன்னால் 'முடிசூட்ட' முடியும் என்று தெரிவித்துவிட்டார் போப்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைச் சம்பவம்

# இந்தோனேசியாக் காட்டில் தொலைந்தவர்கள்

அயர்லாந்து ஆஷ்லியின் தாயகம். 23 வயது நிரம்பிய அவன் லண்டன் பல்கலைக்கழகத்தில் புவியியல் துறையில் படித்துக்கொண்டிருந்தான். பெற்றோர்களும் அவனது சகோதரிகளான சுசந்தா மற்றும் சாராவும் அயர்லாந்திலேயே வசித்துவந்தனர்.

பிரிட்டிஷ் அரசாங்கத்தினால் உலகளாவிய ரீதியில் பல்கலைக்கழக மாணவர்களுக்கான ஓர் சிறப்புத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. விஞ்ஞான ஆராய்ச்சி மற்றும் சமுதாய மேம்பாடு என்பவற்றை குறிக்கோள்களாகக் கொண்டது இத்திட்டம். இத்திட்டத்தின் மூலமாக இதுவரையில் உலகின் பலநாடுகளையும் சேர்ந்த 3500 மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

இப்பயிற்சித் திட்டத்தின் கீழ்தான் ஆஷ்லியும் வேறு பலரும் தற்பொழுது இந்தோனேசியாவிற்குச் சொந்தமான நூற்றுக்கணக்கான தீவுகளில் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தனர்.

முதல் நான்கு வாரங்கள் மட்டில் சேரம் எனும் சிறிய தீவில் சேவைபுரிந்தான் ஆஷ்லி. அங்குள்ள பாமரமக்களுக்கு அவர்களின் சிரமதானப் பங்களிப்புடன் ஓர் சிறுவர் பாடசாலையை அமைத்துக்கொடுத்ததுடன் அக்கிராமத்தவர்களுக்கு உயரமான பெரிய மரங்களை அறுத்து வீழ்த்தும் நவீன இயந்திர சாதனத்தை இயக்கும் விதத்தையும் பழக்கி விட்டிருந்தான்.

அங்கு அவனது சேவைக்காலம் முடிந்ததால் அடுத்ததாக இந்தோனேசியாவின் உயரமான மலைச் சிகரமாகிய 'பினாஜா' இருக்கும் தீவிற்கு ஏற்கனவே அங்கு ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும் தனது மாணவர் குழுவுடன் இணைவதற்காக வந்து சேர்ந்தான்.

இந்தோனேசியா அரசாங்கத்தில் தொழில் நுட்பவியலாளராகப் பணிபுரிந்து கொண்டிருந்தவர் போல் கிளாக்ஸ்டன். 40 வயதானவர். அந்நாட்டு மலைப் பிரஜை. தற்காலிக விடுமுறையில் மலையில் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும் ஆஷ்லி குழுவினருக்குப் பாதுகாப்பாளராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார்.

குழுவினர் அம்மலைப்பிராந்தியத்தில் பறக்கும் பூச்சியினங்கள் பற்றிய ஆராய்ச்சியில் முழுமையாக ஈடுபட்டிருந்தனர். பினாஜா மலைச்சிரகம் 9930 அடி உயரமுடையது. ஆஷ்லி குழுவினர் தரையிலிருந்து 8200 அடி உயரத்தில் முகாமிட்டுத் தங்கியிருந்து ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தனர்.

பினாஜா சிகரத்தின் உச்சியிலிருந்து சூரிய உதயத்தைப் படம் எடுக்க வேண்டுமென்ற ஆசையின் நிமித்தம் ஆஷ்லி கமராமென் போலுக்கு முதலிரவே மறுநாள் காலையில் புறப்படவேண்டும் எனக் கூறியிருந்தான். அதிகாலையிலேயே போலும் ஆஷ்லியும் தமது முகாமிலிருந்து மேலேயுள்ள பினாஜா சிகரத்தின் உச்சியை நோக்கித் தமது பயணத்தைத் தொடங்கினார்கள்.

சூரிய உதயத்தைப் படம்பிடிக்க வேண்டுமென்ற ஆவல் இருவர் மனதிலும் தகித்துக்கொண்டிருந்தது. போலும், ஆஷ்லியும் மேலே பாறைகளின் மீது உரத்து ஒலி எழாத வகையிலும் மெதுவாகவும், வழுக்கிவிடாமல், அவதானத்துடனும் பாறைத்துண்டுகள் உடைந்து நொருங்கலாமெனும் முன்னெச்சரிக்கையுடனும் இருவரும் மேலே சிகரத்தை நோக்கி ஏறிக் கொண்டிருந்தனர்.

ஆஷ்லி ஒரு தடவை மேலே அண்ணாந்து பார்க்கையில் போல் தான் இருந்த இடத்திற்கு மேலே ஏறக்குறைய 300 அடி உயரத்தில் இருப்பது பார்வையில் விழுந்தது. இருவரும் அங்குலம் அங்குலமாக மேலேறிக் கொண்டிருந்தனர்.

திடீரென போல் "எனது கையின் பிடி தவறிவிட்டது" என்று கத்தினான். பாறையில் பிடித்திருந்த ஒரு கையின் பிடி தவறிய அதே சமயத்தில் அவன் கால் வைத்திருந்த சுண்ணாம்புப் பாறையின் துண்டும் உடைந்து நொறுங்கவே அவன் தலைகீழாக குப்புற மலையடிவாரத்தை நோக்கி விழுந்தான்.


போலின் அவலக் குரல் கேட்ட வேளையில் தாமதமேதுவும் இன்றி மேலே நோக்கிய ஆஷ்லியின் கண்களுக்கு போலின் உருவம் தலைகீழாகக் கீழ் நோக்கி விழுவது தென்பட்டது. ஆஷ்லி அதிர்ந்து போய்விட்டான். போலின் உடல் விழுந்த முறையில் இருந்து அவனை உயிருடன் மீட்க முடியாதென்பது புரிந்துவிட்டது ஆஷ்லிக்கு. எனினும் பல தடவைகள் அங்கிருந்த படியே "போல் போல்" எனக் குரல் கொடுத்தான். பதில் எதுவும் இல்லை.

தொடர்ந்து மேலே ஏறுவதால் பயன் எதுவும் இல்லை எனத் தெரிந்ததால் ஆஷ்லி திரும்பி மெதுவாகக் கீழே வாரத்தை நோக்கி இறங்கத் தொடங்கினான். ஒரு 300 அடிகள் வரையில் மட்டுமே கீழிறங்கியிருப்பான். பாவம் ஆஷ்லி அவன் கால் வைத்திறங்கிய கற்பாறை வழுக்கியதால் தடாலெனக் குப்புற விழுந்தான். காற்றிலே விழுந்தபடி வந்த ஆஷ்லியின் உடம்பு சாய்வாக இருந்த ஓர் சுண்ணாம்புப் பாறையின் விளிம்பில் மோதிக் கீழே விழாது அவ்விடத்திலேயே பாறை இடுக்கில் அகப்பட்டுக் கொண்டுவிட்டது. தலையில் அடிபட்டதால் அவன் அந்த இடத்திலேயே மூர்ச்சையாகிவிட்டான்.

சிறிது நேரத்தில் மயக்கத்திலிருந்து விழித்தான். வாயில் வந்த உமிழ்நீரைத்துப்பிய பொழுது அதனுடன் இரத்தமும் சேர்ந்து வந்தது. நுரையீரலில் துவாரங்கள் ஏற்பட்டதால் அவ்விதம் இரத்தம் வந்திருக்கலாம் எனக் கருதினான். எழுந்து நிற்பதற்கு முயன்றான். ஆனால் கணுக்கால்கள் இரண்டிலும் ஏற்பட்ட தாங்கொணாத வலி அவனை நிற்கவிடாமல் செய்துவிட்டது.

அந்நேரம் இலேசான மழைத்தூறல் இருந்தது! அங்கிருந்து மேலே பார்த்த வேளையில் அவனருகே இருந்த 100 அடி அளவில் உயரமான பாறையின் சரிவில் முன்பு தவறி விழுந்த போலின் உடல் அசைவற்ற நிலையில் கிடப்பது தெரிந்தது. தன்னாலான மட்டும் குரலெழுப்பி "போல் போல்" எனக் கத்தினான். பதிலேதும் வரவில்லை. ஆஷ்லியின் உடல் நிலை இருந்த நிலைமையில் போலின் உடல் கிடந்த அந்தச் செங்குத்தான பாறையில் ஏறுவதற்கான மார்க்கமெதுவும் அவனுக்குப் புரியவில்லை.

அவன் மலையேறும் போது முதுகில் கொளுவியிருந்த அவசியப்பொருள்கள் அடங்கிய தோற்பை அப்படியே இருந்தது. ஆனால் நலைகுப்புற விழுந்ததில் அதிலிருந்த பொருள்கள் வெளியே சிதறி விழுந்து விட்டன. அவற்றில் சில அவன் கிடந்த இடத்தின் அருகே கிடந்தன. திறந்த நிலையில் முதலுதவிப் பெட்டி வெறுமையாகக் கிடந்தது. மீதமாக அங்கே கிடந்தது சில மாற்றுடைகள், உணவுக்காக வைத்திருந்த கடலைப்பைகள் அத்துடன் கொஞ்சம் முந்திரிகை வற்றல் மட்டுமே.



ஒருவாறு இடறியடித்துக் கொண்டு மிகவும் பிரயாசையுடன் மீதமாக எஞ்சியிருந்த பொருட்களை ஒருவாறு எடுத்துத் தோள்பையில் போட்டுக் கொண்டான். எனினும் இரத்தம் வெளியேறியமையாலும், உடல் வலியினாலும், மனக்கிலேசத்தினாலும் சோர்வுற்ற நிலையில் மீண்டும் தூக்கத்தில் ஆழ்ந்து விட்டான்.

அவனிருக்கும் நிலையில் போல் கிடக்கும் இடத்தை அடைவதென்பது சாத்தியமற்றதென்பதைப் புரிந்து கொண்டான் ஆஷ்லி. எனினும் தேடுதல் பணிக்கு வருபவர்கள் தன்னை அடையாளங் கண்டு கொள்ளும் விதத்தில் எங்காவது உயரமான இடத்தில் இருக்க வேண்டுமென்பதை உணர்ந்து கொண்டான்.

**தமிழில் - ஜெகன்**

ஒருவாறு கணுக்கால்களின் வேதனை மற்றும் காயங்களின் வலி உபாதைகளைத் தாங்கிக் கொண்டு மலையின் மேற்பகுதி நோக்கி மெதுவாக நகரத் தொடங்கினான். 300 அடிகள் வரை ஏறியவனால் அதற்கு மேல் ஒரு இஞ்சி கூட நகரமுடியவில்லை. அவ்விடத்திலேயே அசதியினால் படுத்துறங்கிவிட்டான். தூங்கியவனுக்கு அவனுள் இருந்து "ஆஷ்லி குளிரில் விறைத்துச் சாகப்போகிறாய், நீ விரைவில் மீட்கப்பட்டால் தான் உயிர்தப்ப வாய்ப்புண்டு அல்லது இறக்க நேரிடும்" என ஏதோ ஒன்று எச்சரிப்பது போல் தோன்றியது.

திடுக்கிட்டு விழித்த ஆஷ்லி எடுத்த தீவிர முயற்சியின் பயனாக மேலும் ஓர் 200 அடி உயரம் வரை ஏறிவிட்டான். முதல் நாள் அதிகாலையில் மலையேறப் புறப்பட்டு முகாமில் இருந்து கிளம்பிச் சென்ற போலும் ஆஷ்லியும் அன்று மாலையாகியும் தமது இடத்துக்குத் திரும்பாதமை அவர்களுக்கு ஏதோ விபரீதம் நடந்துவிட்டதென்பதை அங்குள்ளவர்களுக்கு உணர்த்தியிருந்தது. [illegible] மீட்புப்பணியாளர்களுக்கும் தகவல் அனுப்பப்பட்டது.

பொழுது விடிந்தது. தாகம் நாவை வறட்டியது. குடிப்பதற்கு நீரில்லை. வயிற்றுப் பசிக்கு மீதமாக இருந்த கடலையில் சிறிதளவையும் முந்திரிகை வற்றலில் கொஞ்சத்தையும் வாயில் போட்டுக் கொண்டு, சிறிது தெம்பினை வரவழைத்துக் கொண்டான். அவ்விடத்தில் இருந்தவாறு தேடுதல் பணியில் ஈடுபட்டு வருபவர்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் இடையிடையே கத்திக் குரல் கொடுத்துக் கொண்டிருந்தான்.

மதியமாகியது. சூரிய ஒளியின் வெப்பத்தினால் மலைமீது படிந்திருந்த மூடுபனி விலகி எங்கும் தெளிவாகத் தெரியும் விதத்தில் இருந்தது. மீட்புப் பணி முழு அளவில் முடுக்கி விடப்பட்டிருந்தது. மீட்புக் குழுவின் தலைவனாக 32 வயதான முன்னாள் அரசகடற்படையில் பயிற்சி பெற்ற சிறந்த ஆற்றலுடைய ஸ்ரீபன் ஒலிவர் நியமிக்கப்பட்டிருந்தான். பாரசூட்டில் இறங்குதல், மலையேறுதல் மற்றும் மனித நடமாட்டத்தின் தடயங்களைக் கண்டுபிடித்தல் போன்றவற்றில் திறம்படப் பயிற்சி பெற்றவர். இவருடன் குழுவில் 6 பேர் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். தேடும் பணியில் ஈடுபட்டவர்கள் அடிவாரத்திலிருந்து சுமார் 5000 உயரம் வரையில் தேடுதல்களினூடாக அடைந்து விட்டபோதிலும் காணமற்போனவர்கள் குறித்த ஏதுவித தடயமும் கிடைக்கவில்லை.

ஆஷ்லியின் கணுக்கால் ஒன்று வழமையை விட மும்மடங்கு வீங்கியிருந்தது. நெஞ்சில் சளி பிடித்து ஓயாது இருமிக் கொண்டிருந்தான். நம்பிக்கையீனமும் கோபமும் அவனை முழுமையாக ஆட்கொண்டு விட்டது. மழையும் இல்லை. குடிக்க நீரும் இல்லை. அநாதரவான நிலை. அந்நேரத்தில் அவனுக்கு நியூயோர்க்கில் வசிக்கும் அவனது காதலி ஜேனின் நினைவு மனதில் வந்தது. அயர்லாந்தில் வசிக்கும் பெற்றோர் மற்றும் சகோதரிகளின் ஞாபகமும் கூடவே வந்தது. இவர்களையெல்லாம் இனிமேல் காணும் சந்தர்ப்பம் கிடைக்குமா என ஏங்கினான்.

திடீரென யாரோ கத்தும் குரல் ஒலி அவன் காதில் வீழ்ந்தது. பதிலுக்கு அவனும் கத்தினான். சிறிது நேரம் அமைதி நிலவியது. திரும்பத் திரும்பக் கத்தினான். ஆனால் அவனது குரல் வர வரத் தளர்வடைந்து, தொலைவிற்குக் கேட்க முடியாத அளவில் தளர்வடைந்து இருந்தது. மலைப்பகுதி எங்கும் அமைதியாக இருந்தது. தேடுதல் குழுவினர் அந்நேரத்தில் தரையிலிருந்து 6800 அடி உயரத்தில் இருந்தனர். ஆஷ்லியின் உடலில் இருந்து அதிகளவில் நீர் வெளியேற்றப்பட்டமையால் (DEHYDRATION) டிகைட்ரேசன் எனும் நோய்த்தாக்கத்துக்குள்ளாகியிருந்தான். எந்த நேரத்திலும் உயிரிழக்க வேண்டி நேரிடும்.

இறுதியில் ஓர் இந்தோனேசியன் அவன் கிடந்த இடத்திற்கு 30 யார்களுக்குக் கீழே தென்பட்டான். ஆஷ்லியைக் கண்டுவிட்ட அவன் தட்டுத்தடவி ஏறி அவனுக்குகிட்ட வந்தான். அவனால் ஆங்கிலத்தில் பேச முடியாவிட்டாலும் ஆஷ்லியின் சைகையைப் புரிந்து கொண்டு அவனிடமிருந்த தண்ணீர்ப் போத்தலைக் கொடுத்தான். ஆஷ்லி ஒரே மூச்சில் அவ்வளவையும் குடித்து முடித்தான். தகவல் அனுப்பப்பட்டது. ஸ்ரீபன் ஒலிவரும், டாக்டர் கில்லும் நான்கு மணித்தியாலங்களில் ஒருவாறு சம்பவ இடத்தை அடைந்தனர்.

டாக்டர் கில் அவனது காயங்களைத் துப்பரவு செய்து முதலுதவி வழங்கியதுடன் உடல்நிலையைப் பரிசோதனை செய்தார். அவர் முகம் இறுக்கமடைந்தது. ஸ்ரீபனிடம் "நாமழிக்கும் ஒவ்வொரு கணமும் ஆபத்தானது" என டாக்டர் கில் மெதுவாகக் கூறினார். ஸ்ரெச்சரில் வைத்துக் காவிச் செல்லப்பட்ட ஆஷ்லி உலங்கு வானூர்தியில் ஏற்றப்பட்டு இந்தோனேசியாவின் தலைநகரமாகிய ஜகார்த்தாவில் உள்ள மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டான்.

அங்கு மருத்துவர்கள் ஆஷ்லியின் கணுக்கால்கள் உடைவடைந்து இருப்பதையும் சில இடங்களில் எலும்பு சிறிது சிறிதான முறிவுகள் ஏற்பட்டிருப்பதையும் அத்துடன் வலது காலில் தசைநார்கள் கிழிந்திருப்பதையும் உறுதி செய்துகொண்டனர். அதுமட்டுமன்றி இடதுபக்க விலாவில் நான்கு எலும்புகளும் வலதுவிலாவில் ஓரெலும்பும் முறிவடைந்து விட்டதையும், கண்டுபிடித்தனர். நுரையீரலிலும் ஒரு பகுதி சேதமுற்றிருந்தது.

நான்கு நாட்களின் பின்னர், ஆஷ்லி விசேட மருத்துவ சிகிச்சைக்காக லண்டனுக்குக் கொண்டு செல்லப்பட்டான். மூன்று மாதங்கள் சிகிச்சை பெற்றதன் பின்னர் வீடுசெல்ல அனுமதிக்கப்பட்டான். அன்று அவனது 24 வது பிறந்தநாள். பரிபூரண குணமடைய ஆஷ்லிக்கு ஒரு வருடம் பிடித்தது. அவன் அடுத்தமாதமே மற்றுமொரு சிறப்பு ஆராய்ச்சிப் பணிக்கான நீண்ட பயணத்தை மேற்கொண்டு கமெரூனுக்குப் புறப்பட்டுச் சென்றான்.

ஆஷ்லி தனது அனுபவத்தினூடாக எவருக்கும் வழங்கும் அறிவுரை இதுதான் "எந்த நிலையிலும் நம்பிக்கையை மட்டும் இழந்து விடக்கூடாது".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு எவரும் மனிதனின் மரணம்

-டானியல் அன்ரனி-

சிறுகதை

கீழே சலசலத்து ஓடும் வெள்ளம். அதகல் வீச்சில் துள்ளித்துவண்டு எங்கேயோ அமிழ்ந்து போகும் செழுமைத்து மீன்குஞ்சுகள். அவற்றைப் பிடித்துவிடும் ஏக்கவிப்பில் கரையின் இருமருங்கிலும் தூண்டில் தடியுடன் காத்திருக்கும் சிறுவர் கூட்டம்.

அந்த மதகுக் கற்களுக்கு மேல் குந்தி இருந்து கொண்டு அவற்றையே வேடிக்கை பார்த்துக் கொண் டிருந்தான் சின்னவன்.

'களுக்...களுக்...' என ஒரு இழுப்பு. தூண்டிலில் ஏதோ ஒன்றின் கனப்பு. நீரின் சுழிப்பையும் எதிர்த்து தங்கூசி எங்கேயோ நகர்ந்தது. மறுபடியும் வெடுக்கென ஒரு வெட்டு. தூண்டில் தடிகள் மேல் எழுந்தன. தூண் டிலில் அகப்பட்டுக் கொண்ட மீன் குஞ்சுகள் அந்தரத் தில் உடலைப்போட்டு அடிக்க கரையிலே....கூய்.... கூய்... என ஆரவாரித்தது.

மகிழ்ச்சியில் விரிந்த முகங்கள் மறுபடியும் தூண் டில் கயிற்றை அகல எறிய எதுவுமே அகப்படாத சிலர் ஏமாற்றத்துடன் இன்னும் தான் ஒரு இழுப்புக்காகக் காத்து நின்றனர்.

"வீட்ட சாருக்குள்ள ஒழிச்சு வைச்சிருக்கிற தூண் டிலைக் கொண்டு வந்து நாலும் ஒருக்கா மீன் பிடிச்சா என்ன" எப்போதோ ஒருநாள்! "தூண்டிலைக் கையா லதொடக் கூடாதுடா வடுவா... என்னைப்போல நீயும் உடப்புத்தண்ணியுக்கை கஷ்டப் பட்டோட இழுக்கப்போற போல இருக்கு...." என்று அப்பன் அடித்த கையோடு அந்த ஆசையை விட்டவன் தான் அவன்.

ஆனாலும் என்ன! நீர் நிறைஞ்ச மீன்கள். ஒன்றின் மேல் ஒன்று புரள அவனுக்கோ இருப் புக் கொள்ளவில்லை. கையில் கவர்ந்து கொண்டிருந்த புத்தகப் பைக்குள் கல் ஒன்றின் மேல் வைத் தான். நனைந்த மண்ணில் புதைந்து கிடந்த சிப்பிகளைத் தேடிக் கிண்டி எடுத்தான்.

'ஸ்' என்று பறந்தது ஒரு சிப்பி. அப்பொழுது தான் புரண்டு நீரின் மேல் எழுந்து கொண்டிருந்த மீன் குஞ்சின் மேல் விழுந்திருக்க வேண்டும். ஆனாலும் என்ன ஒரு மீன் தன்னும் செத்து விழவில்லை. அவன் மீண்டும் மீண்டும் சிப்பி களைக் கையில் எடுத்து எறிந்து கொண்டிருந்தான்.

அந்தச் சூழ்நிலையிலேயே இழந்து போனவன் திடீ ரென விழித்துக் கொண்டவன் போல் நிமிர்ந்து கண் கள் மிரள விழித்து நாலு பக்கமும் பார்த்தான். அவன் பார்த்துக் கொண்டிருந்த போதே அந்தச் செந்நிற வட்டம் வானத்தின் அடிவயிற்றுள் புதைந்தே போனது. "சடக்" கென ஒளி அழிந்து இருள் முளைத்தது. நீர் நிலையின் பரப்புத்தோல் உரிய வெளிப்பக் கருமை இழுத் துப் போர்த்திக்கொண்டது.

அங்கு நின்றவர்களில் இப்போது ஒருவரும் அங்கு இல்லை. அவன் அந்த இடத்தைவிட்டு எழுந்து கொண்டான். கையில் புத்தகங்களை எடுத்துக் கொண்டே வீட்டைத் தேடி நடந்தான்.

அவன் படலையைத் திறந்த போது முதலில் கண் ணில் பட்டது தகர விளக்கு வெளிச்சத்தில் பாயில் கிடந்த அப்புவும் அவர் அருகே குந்திக் கொண்டி ருந்த ஆச்சியும் தான். இவன் மெதுவாக உள்ளே வந் தான். இப்பொழுது தான் முற்றத்தில் நின்று கொண் டிருந்த அப்புவின் சம்மாட்டி தொம்மையனைக் கண்டு கொண்டான். அவன் எதுவுமே பேசாமல் சாருக்குள் இருந்த 'பக்கீஸ்' பெட்டிக்குள் புத்தகங்களை வைத்து விட்டு பைக்குள் காய்கிட் போயிருந்த படங்களை எடுத்து ஒவ்வொன்றாக அழகழகாக கொப்பியில் ஒட் டத் தொடங்கினான். சிவப்பு, பச்சை, மஞ்சள், ஊதா, நீலம் கலர் கலராக ஏதேதோ மலர்கள். அவன் இது வரை பார்த்திராத மலர்கள். பளபளப்பான காகிதம். இவனுடைய சிநேகிதன் ஏதோவோர் புத்தகத்தில் கத்த ரித்துக் கொண்டு வந்து கொடுத்தவை அவை...

இப்போதுதான் நீண்ட மௌனத்தின் பின் தொம் மையனின் பேச்சுக் கேட்டது. இவன் எப்போதோ இங்கு வந்திருக்க வேண்டும். வெகு நேரமாகப் பேசிக் கொண்டிருந்திருக்க வேண்டும். அவனுடைய கர கரத்த குரலில் களைப்புத் தெரிந்தது.

இந்தா அன்னம்மா... நான் போறன்... நாளைக் கிடையில ஒரு முடிவு தெரியவேணும். என்ர காசக் கொண்டு வந்து வைக்கவேணும். இல்லாட்டி இவன் சின்னவனையாவது என்னோட கடலுக்கு விடவேணும். நீங்கபடுகிற கஷ்டத்தில இவனுக்கு என்ன படிப்பு வேண்டியிருக்கு...

தொம்மையரின் காலடி ஓசை விசுக்...விசுக்... கென்று சென்று மறைந்ததும் தான் ஆச்சியின் குரல் கேட்டது.

"சீ, இப்படியும் ஒரு மனுச னுக்குப் போய் உழைச்சுக் குடுத்தியே... ஒரு ஆயிரத்து ஐநூறு ரூபாக் காசுக்கு.. நோய் வாய்ப்பட்டுக் கிடக்கிற மனுசன் எண்டும் பாக்காமல் வீட்டில வந்து கிடந் திருக்கப் போறானே சீ...இவனும் ஒரு மனுசனா..." சாருக்குள் இருந்த சின்னவனுக்கு எல்லாம் கேட்டுக் கொண்டு தான் இருந்தது. 'சரக் சரக்'...'கென்று படம் ஒட்டிய பக்கங்களைப் புரட்டினான். அழகாகச் சிரித்த மலர்களெல்லாம்... வெறும்... கலர் கலரான கோடு களாக, புள்ளிகளாகத் தெரிந்தன. அவனுக்கு எரிச் சல் எரிச்சலாக வந்தது.

அவனுக்கு நன்றாகவே ஞாபகத்தில் இருந்தது. இப்படித்தான் ஒருமாலை நேரத்தில் அப்பு விடு வலைக்குப் போய்த் திரும்பி வந்திருந்தார். சுக்கிலில வேர்த்தபடி கையில கொண்டு வந்த கொய்மீன்களை அப்படியே திண்ணையில போட்டு விட்டு "அலுப்பாயி ருக்கு அன்னம்மா... கொஞ்சம் சுடுதண்ணி வைச் சுத்தா..." என்று சொல்லிவிட்டுப்படுத்தவர் அதன் பின் எழுந்துகொள்ளவே முடியவில்லை. கைகால்கள் அப்படியே சுரணையற்றுப் போனது. குரலும் நின்று போனது.

இதுவரையும் தொழிலுக்குக் கூட்டிப்போக வந்த தொம்மையர் அன்றிலிருந்து கொடுத்த கடனைப் பெற் றுப்போக வந்து கொண்டிருந்தார். தொம்மையருக்குத் தெரியாதா என்ன! இனி அப்புவிடம் உழைப்புச் சக்தி எதுவும் இல்லை எல்லாமே தேய்ந்து போனது என்பது.

இவனைக் கண்டுகொள்ளும் போதெல்லாம் சின்னவன் என்னவெல்லாமோ சிந்தித்துப் பார்த்துக் கொண்டதுண்டு. அந்த வேலிக் கதியாலோடு சாத்தி யிருந்த அப்புவின் காரன் பிடித்த 'மண்டாவினால்' சதை, பெருத்த அவன் வயிற்றில் ஓங்கி ஒரு குத்து. எப்போதோ ஒரு நாய் இவன் வீதியில் செல்லும் போது வாகனம் ஒன்றில் அடிபட்டு சதை சிதறிக் கிடந்தது போல் ஆசைப்பட்டுப் பார்த்ததோடு சரி. அவ்வளவு



அந்த டபெரிய "மண் பானை நிமிர்த்தித் தூக்கக்கூட முடி யுமோ" என் னவோ.... படக் கொப்பியையும் விறுக் கென்று மூடிவிட்டு அந்த மண் தரையிலேயே விழுந்து படுத்து விட்டான். தூக் கம் வருவது போல் இருந்தது. ஆனால் தூக்கம் வரவில்லை. கண் களில் நித்திரையின் எரிவு. இமைகள் கூட மூடத்தான் செய்தது. ஆனாலும் அவன் உறங்க வில்லை.

திடுமென ஒரு சோர்வில் நித்திரை நிஜமாக வந்த போது யாரோ இவன் தலையைத் தடவிக்கொடுப்பது தெரிந்தது. அந்த ஸ்பரிச சுகம் அவன் பிறந்த திலிருந்தே சாகப் பதமாகி எஞ்சி நிற்கும் ஒன்று.

"தம்பி சின்னவன! எழும்பிச் சாப்பிட்டுப்போட்டு படு மோன..."

"உம்...ஊம்..."

இவன் நினைவு மீளாத நிலையில் ஏதேதோ வாய் புலம்பினான். மறுபடியும் சுருண்டு படுக்கப் போனான். அவள் விடவில்லை. தோள்களை அழுத்தி நிறுத்தி னாள்.

"எழும்பு மோன... சாப்பிட்டுப் போட்டுப்படு... இந்தா கொஞ்சம் வாயைத்திற.."

இவன் அரை வாய் திறந்த நிலையில் ஆச்சியின் கையிலிருந்த சோற்றுக் கவளம் உள்ளே சென்றது. இவன் இருமித் திணறினான். ஆச்சி தலையில் அடித்து செருமிவிட்டுக் கொண்டே தண்ணீரை வாய்க் குள் ஊற்றினாள்.

"தம்பி..."

"ஊ...ம்.."

அடுத்த கவளத்தை உருட்டி வாய்க்குள் திணித்த படியே ஆச்சி கேட்டாள்...

"தம்பி.. நீ தொம்மையற்ற விடு வலைக்குப் போறியா..."

அவனுக்கு மறுபடியும் புரைக்கேறியது. மறுபடியும் தண்ணீரைக் குடிக்கக் கொடுத்தாள். அவன் குறைப் பிரக்ஞையிலேயே எல்லாம் நடந்தது.

"அப்புவும்...இப்படியே படுக்கையில விழுந்திற் றார். இனி எங்களுக்கு உழைக்கிறதுக்கு ஆர் இருக் கினம். தொம்மையற்ற பட்ட கடனை ஆர்குடுப்பினம்"

சின்னவன் இப்போது எழுந்து நன்றாகவே குந்திக் கொண்டு நினைவுடனேயே பேசினான்.

"அப்புவை...ஆர்...கடன் வாங்கச் சொன்னது.... அவ்வளட்ட"

"உங்கட அக்காவுக்கு அவன்ர காசு வந்து தான்ரா கலியாணம் நடந்தது....."

"அதுக்கு நான் என்ன செய்ய....."

"நீ தன்னட விடுவலையில் வந்த... கடன்க் கழிச்சு விடுகிறேனாம்...."

"நான் அவனோட கடலுக்கு போகமாட்டன்.. நான் போகமாட்டன்... எண்டால் போகமாட்டன்" சின்னவன் சோற்றை அப்படியே விட்டுவிட்டு திடுமென எழுந்து விட்டான். செம்பில் நீரை வார்த்து வாயைக் கழுவிக் கொண்டு மறுபடியும் கிடந்த இடத்திலேயே படுத்து விட்டான்.

"கொஞ்சம் எழும்பு மோன... பாய்ப் போட்டுவிடு கிறன்"

"எனக்கு பாயும் வேணாம்...ஒண்டும் வேணாம்... போ.."

ஆச்சி அதற்கு மேல் அரங்கிருக்கவில்லை. எழுந்து விட்டது தெரிந்தது. ஆச்சியின் நீண்ட பெருமூச்சு மாத் திரம் கேட்டது. மறுபடியும் அவன் உறங்கிப் போனான். நிஜமாகவே உறங்கிப் போனான்.

ஏதோ ஓர் கனவின் சோகத்தில் அழுதுகொண்டே திடுமென விழித்துக்கொண்டான் சின்னவன். மெல் லிய முனகல் முழுப்பும், அழுகுரல்களுமாய் பக்கத் திலே கேட்டன. அவன் உணர்வுப்பொறிகள் வையத் துள் வருவதற்கு முன்பே அவை பெரிதாக சப்தித்தன.

இவன் எழுந்து குந்திக்கொண்டான். நித்திரை அழுத்தத்தில் முதலில் முன்னே விரிந்து கிடந்த நிகழ் வுகள் இவனைத் தொடவில்லை. சிலகணங்கள் ஒலித்திரைக்குள் மைமலான சில சலனங்கள். அது மெல்ல மெல்ல... தெளிவாகி புலனைத் தொட்ட போது... வெளியே 'சுர்' என்று எரித்தது வெயில். அதற்குள் விடிந்து விட்டதா.

அப்பு கட்டிலில் நீட்டி நிமிர்ந்து கிடந்தார். அவரு டைய இமைகள் இரண்டும் மூடியபடி கிடந்தன. கைகள் இரண்டும் ஒன்றுடன் ஒன்று பின்னியபடி நெஞ்சில் கிடந்தபடி. விரல் இடுக்குகளில் பெரிய கறுப் புச் செபமாலை ஒன்று செருகியிருந்தது. புது வேட்டியும் சால்வையுமாய் அழகான அப்புவை இதற்கு முன்னம் எப்பொழுதோ பார்த்த நினைவு... பெரியக்காவின் திரு மணத்தின் போது...

தலைமாட்டிலும் கால்மாட்டிலுமாய் நாலு 'கத் திரி சாலில்' பெரிய மெழுகுவர்த்திகள். அப்பால் சற்றுத்தூரத்தில், அதே மங்கலான வெளிச்சத்துடன் அந்த வீட்டின் தகர விளக்கு. அப்புவின் கட்டிலைச் சுற்றி மூத்தக்கா, சின்னக்கா, அண்ணன் பெண்சாதி. மாமி இன்னும் ஊரில் உள்ள என்னென்னவோ உறவு சொல்லிக் கொள்பவர்கள்.

இப்பொழுது அழுகுரல்கள் பலமாகவே கேட்டன. அக்காதான் கீச்சிட்ட குரலில் உச்சஸ்தாயியில் தலையை விரித்துப் போட்டு அழுதாள். ஆச்சி நெஞ்சு... நெஞ்சென்று குத்திக்கொண்டு அழுதாள். எங்கிருந்தோ அழுதுகொண்டிருந்த சின்னக்கா இவ னைப் பார்த்துவிட்டாள். ஓடிவந்து இவனுடைய கழுத்தை அணைத்து இறுகப்பற்றி முகத்தைத் தேய்த்து என்ன என்னமோ சொல்லி அழுதாள். சுருட்டுப்புகையின் நெடியும். மெழுகுவர்த்தியின் கசிவுமாய் அந்தச் சூழ் நிலை அவனுக்கு நினைவு தெரிந்ததிலிருந்து புதுசு தான். யார்யாரோ எல்லாம் பொருத்தமில்லாமல் எதை எதையோ சொல்லி அழுதுகொண்டிருந்த சிலரின் அழுகை இவனுக்கு வேடிக்கையாகக்கூட இருந்தது.

இவனுக்கு அழுகை வரவில்லை. நித்திரையும் கூடத்தான். எங்கேயாவது சப்தம் வராத இடமாகப் படுப்பதற்கு நினைத்துப் பார்த்துக்கொண்டான். முற் றத்தில் போடப்பட்டிருந்த பந்தலின் கீழ் நிறையவே மனிதர்கள். சுருட்டும் வெற்றிலையுமாய்... ஏதே தோ.... பேச்சு... சவப்பெட்டி திறந்த நிலையில் எல்லாமே தயாராகி விட்ட வேளை ...இந்தச் சந்தடிகள். ஆர வாரம் எதுவும் புலன்தொடாமல் எப்படி இவன் நித்தி ரையில் தன்னை இழந்து போயிருக்கிறான்...

கோவில் மங்கிடுத்தாம் திடுமென பந்தலுக்குள் நுழைந்த போது, சிலர் எழுந்துகொண்டு அவரிடம் வந் தனர். மூத்தக்கான் புருசன் தான் நெருங்கிக் கேட்டார்:

"சுவாமி என்னவாம்...வருவாராமா..."

"சுவாமி வரமாட்டாராம். தீர்வைக்காசு பல மாசம் கட்டுப்படாமல் நிலுவையாக நிக்குதாம். நிலுவ முழுக்க கட்டி முடிச்சாத்தான் பிரேதம் எடுக்க வருவா ராம்..."

"செத்தவற்ற தீர்வைக் காச, தொம்மையர் ஒவ்வொரு நாளும் உழைப்பில கழிச்சு எடுத்தவர் தானே..பிறகு என்ன நிலுவ..."

"தொம்மையர் கழிச்ச காசொண்டும் சுவாமியிட்டக் கட்டயில்லப் போல இருக்கு"

"இது ஒரு பெரிய மனுசன் செய்யிற வேலையா... தனக்கு குடுக்குமதிக்கு அந்த மனுசனைப்போட்டு எவ் வளவு பாடுபடுத்தினவர்...ஆனா அவரட உழைப்பில கழிச்சத அப்படியே அமத்திப் போட்டாரே..,"

பந்தல் சல சலத்தது. பேச்சும் வசவுகளுமாய் சனங் கள் மத்தியிலே ஏதேதோ குரல்கள் தொம்மையரைச் சபித்தன. செத்தவனுக்காக அழுத குரல்கள் அதற் குள் அமுங்கிப் போனது.

"அப்ப என்னதான் செய்யிறது, சுவாமி வராட்டா இப்படியே பிரேதத்தை விடுறதா...? கனகாலமாய் பாயும் படுக்கையுமாய்ச் சீரழிஞ்ச உடம்பு..."

அக்காள் புருசனின் பேச்சைப் பலரும் ஆமோதித் தனர். ஆனாலும் ஒரு தீர்மானத்துக்கு வரமுடியாமலே பிரேதம் முற்றத்தில் கிடந்தது.

"தூக்குங்கடா பிரேதத்தை...வாறது வரட்டும்... தூக்குங்க..."

யாரோ ஒருவன் முன்னுக்கு வந்து குரல் கொடுத் தான். எல்லோர் முகங்களும் இவனை நோக்கித் திரும் பவும், இவனை யாரென்று பார்ப்பதற்காகவே முதல் முறையாக இருப்பைவிட்டு எழுந்து வந்தான் சின்ன வன்.

"அப்ப்...சுவாமி...? கோவில்...?"

"அதெல்லாம் பிறகு பார்த்து பேசிக்கொள்ளலாம். முதலில் செத்தவனைக் கொண்டுபோய் மரியாதையா அடக்கம் பண்ணுவம்.தூக்குங்கடா...?"

சனங்கள் முண்டி அடித்து நெருங்கவும், சின்ன வன் எங்கேயோ பின் தள்ளப்பட்டான். அழுகையும் ஒப்பாரியுமாய் பிரேதப்பெட்டி தலைக்குமேல் உயர்ந்து நகர்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு புறத்தில் இளையவனும், ராமையாவும் தேங்காய்களைப் பிடுங்கிச் சேகரித்துக் கொண்டிருக்க, மறுபுறம் சீதேவிப்பாட்டியும், கனகாம்பிகையும் சமையலில் ஈடுபட இன்னொரு புறத்தில் மாமர நிழலில் அடுப்பு மூட்டப்பட்டு கூழ் காய்ச்சப்பட்டுக் கொண்டிருந்தது.

சேனாதி இரண்டு பெரிய மீன்களைக் கறிக்காகச் சீதேவிப்பாட்டியிடம் நாக்கிக் கொடுத்து விட்டு உரப்பை நிறைந்த மீன்களைத் தானே கூழுக்கு ஏற்ற விதமாக வெட்டித் தயார் படுத்தியிருந்தான். சங்கரப்பிள்ளை செத்தல் மிளகாயை அம்மியில் அரைத்து ஒடியல் மாவுடன் கரைத்து ஏனைய தேவையான பொருட்களையும் சேர்த்து அடுப்பில் ஏற்றியிருந்தான். மீன்களையும் போட்டு அகப்பையினால் தொடர்ந்து துளாவப்பட்டு கூழ் தயாராகிக் கொண்டிருந்தது. அதேவேளையில் முட்டிகளில் தயாராக இருந்த தவிப்பனைக் கள்ளும் இடையிடையே அவர்களுக்கு உற்சாகமூட்டிக்கொண்டிருந்தது.

கூழ் நல்ல கொதிநிலையை அடைந்த போது சங்கரப்பிள்ளை வேலிக்கரையில்

**14**

# மௌன மனவெளிகள்

நின்ற வடலிகளில் ஓலை வெட்டிக் கொண்டு வந்து பிளாக் கோல ஆரம்பித்தான். பச்சை ஓலைப் பிளாவில் கூழ் குடிப்பதில் ஒரு தனி ருசி இருப்பதாகவே அவர்கள் கருதியிருந்தனர்.

இப்படியாக ஒவ்வொருவரும் வெவ்வேறு காரியங்களில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது சொர்ணம் மட்டும் ஒரு தனி உலகில் மிதந்து கொண்டிருந்தாள்.

தென்னந்தோட்டத்தில் ஆங்காங்கே இருந்த துரவுகளைச் சுற்றி வந்தாள். அங்கு நின்ற மாமரத்தில் காய்த்திருந்த மாங்காய்களை ஒரு தடியால் தட்டி விழுத்தி அவற்றில் சிலவற்றைக் கையில் எடுத்துக் கடித்தவாறே அந்த மணலில் சுற்றி வந்தாள்.

தான் குடித்த மிகுதி இளநீரை இளையவன் வாங்கிக் குடித்தது அவள் நெஞ்சில் ஏதோ ஒரு விதமான இனம் புரியாத கிளர்ச்சியை ஊட்டியிருந்தது. அவள் அதை நீட்டும் போது அவன் தயங்கியதோ அல்லது அவன் குடித்து விட்டு வெறும் கோம்பையை அவளிடம் கொடுத்து விட்டு எதுவுமே பேசாமல் அவ்விடத்தை விட்டு வேகமாகப் போனதும் அவளுக்கு ஒரு பொருட்டாகவே தெரியவில்லை. ஆனால் அவன் போன பின்பு அந்தக் கோம்பையைக் கவிழ்த்த போது அதில் எஞ்சியிருந்த ஒரு சொட்டு இளநீரால் தனது நாவை நனைத்துக் கொண்டதில் ஏதோ ஒரு விதமான இன்பம் இருந்ததாகவே அவள் உணர்ந்தாள்.

ஆனால், இளையவனின் நிலையோ வேறுவிதமாகவே இருந்தது. அவன் நன்றாகவே குழம்பிப் போயிருந்தான். அவன் சொர்ணத்துடன் ஒரு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே பழக வேண்டும் என மீண்டும் மீண்டும் நினைத்துக் கொண்ட போதிலும் அவளின் முன்பு தான் தன்னை இழந்து விடுவதை உணர்ந்த போது அவனுக்கு அவளிலேயே கோபம் கோபமாக வந்தது. அந்தக் குழப்பத்தில் தென்னையில் ஏறும் போது கூட எங்கே தவறி விழுந்து போகவும் கூடும் எனக் கூட அஞ்சினான். எனினும் மிகவும் சிரமப்பட்டு அந்த எண்ணங்களிலிருந்து விடுபட முயன்ற போதிலும் அது அவ்வளவு இலகுவான விடயமாகத் தெரியவில்லை.

பச்சை ஓலைப் பிளாக்களில் சங்கரப்பிள்ளை அகப்பையால் கூழை அள்ளி விடக் கூழ் குடிப்பு ஆரம்பமாகி விட்டது. கள்ளும் கூழுமாக அவர்களுக்குப் போதையூட்டிக் கொண்டிருந்தது. எனினும் விதானையார் ஏதோ வழமைக்கு மாறாக மந்தமாக இருப்பதாகவே சேனாதிக்குப்பட்டது. கூழில் நண்டும், இறாலும் இல்லாதது காரணமாக இருக்குமோ எனவும் அவன் யோசித்தான். அவன் தான் என்ன செய்ய முடியும்? ஆனையிறவுக் கடலில் ஆடி மாதம் தான் இறால் பட ஆரம்பிக்கும்.

சேனாதி கேட்டான் "என்ன விதானை! சப்பென்டு இருக்கிறாய்? என்ன கூழ் வாய்க்கேல்லையே?"

விதானையார் ஒரு மெல்லிய சிரிப்புடன் சொன்னார் "கூழ் திறமாய்த் தான் இருக்குது.. மனம் தான் எங்கையோவெல்லாம் போய் வருகிறது?"

சங்கரப்பிள்ளை வியப்புடன் கேட்டான் "என்ன உனக்குக் கூடப் பிரச்சினையே?"

"பிரச்சினை எனக்கில்லை. ஊரிலை ஒரு பெரிய பிரச்சினை.. அது எப்படி முடியப் போகுது என்டுதான் யோசிக்கிறன்"

சங்கரப்பிள்ளை வாய்க்குக் கிட்டக் கொண்டு போன பிளாவை மீண்டும் நிலத்தில் வைத்து விட்டு "என்ன அப்படி ஊரிலை?" எனக் கேட்டான்.

"சிங்கன் என்டு.. ஆலடிவெட்டைப் பொடியன் ஒரு தன் சமனில் எண்ட மணியாறன் மூளாய்ப் பெட்டையை விரும்பி அங்கை போய் வரத் துவங்கிவிட்டான்"

சேனாதி சிரித்தவாறே குறுக்கிட்டான் "நீ அவன் சின்னனை வைச்சிருக்கிற மாதிரி"


"மடையா... நான் இறைச்சி தின்னுறனெண்டு காட்ட எலும்பைக் கழுத்திலை கட்டித் தொங்க விடுகிறனே?" அவள் கலியாணமல்லே கட்டியிட்டான் என்றார் விதானை.

"அவங்கள் வெவ்வேறை சாதியல்லே?" எனக் கேட்டான் சங்கரப்பிள்ளை.

'ஓமோம்.. அது தான் இப்ப பிரச்சினை.. அவன் யாழ்ப்பாணக் கச்சேரியிலை போய் கலியாணத்தை எழுதிப் போட்டு, முனியப்பர் கோவிலிலை தாலியையும் கட்டிப் போட்டு கூட்டியந்து பெட்டை வீட்டை இருக்கிறான்"

"ஆலடி வெட்டையான்கள் விடாங்களே!" என்றான் சேனாதி.

"விடாங்கள் தான்! கட்டாயம் ஏதும் செய்வாங்கள்! ஆனால் பெட்டையின்ரை தேப்பன் பொன்னுக் குட்டி



## குறுநாவல்

யும் லேசான ஆளில்லை. அவன் கனகாலம் திருகோணமலையிலை வீரபாகுவின்ரை கப்பல் கொம்பனியில வேலை செய்தவன். அவனுக்கு ஒரு பிரச்சினை என்டால் அவனுக்காக பருத்தித்துறை சண்டியன்கள் எல்லாம் இறங்கிடுவாங்கள். வீரபாகு முதலாளியின்ரை செல்வாக்கிலை பொலிசிலையும் நல்ல அணைவு இருக்குது"

விதானையார் விசயத்தை விளக்கமாகச் சொல்லி விட்டு கூழை எடுத்து உறிஞ்ச ஆரம்பித்தார்.

மீண்டும் அவர் தொடங்கினார். "கலியாணம் நடந்து மூண்டுநாளாய்ப் போச்சுது.. இது வரைக்கும் ஒரு பிரச்சினையும் இல்லை... ஆனால் எதுவும் நடவாமல் விடாது!"

**நா.யோகேந்திரநாதன்**

சங்கரப்பிள்ளை கேட்டான் "அப்ப... என்ன செய்யப் போறாய்?" விதானையார் உறுதியாகச் சொன்னார் "எங்கடை ஊரிலை சாதிச் சண்டை வரக் கூடாது.. அதுக்குத் தக்க மாதிரி வெட்டியாட வேணும்... ம்... நிலைமையைப் பாத்து விளையாடுவம்"

சங்கரப்பிள்ளை மீசையைத் தடவி விட்டுச் சொன்னான் "ம்... தேவையெண்டால் சொல்லு.. அஞ்சாறு துவக்கோடை வாறம்"

விதானையார் சிரித்துக் கொண்டே சொன்னார் "போட்டுப் பேயா! எனக்கு என்ரை பிரம்பே போதும்"

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே இளையவனும், ராமையாவும் வேலையை முடித்துக் கொண்டு வந்து விட்டனர்.

சேனாதி ராமையாவைக் கூப்பிட்டு, கூழை ஒரு சட்டியில் ஊற்றி இருவரையும் குடிக்கும் படி சொல்லிக் கொடுத்துவிட்டான்.

அவர்களும் கூழ்ச் சட்டியுடன் போய் இன்னொரு மாமரத்தடியில் அமர்ந்து கொண்டனர். அவர்களின் களைத்த உடலுக்கு ஒடியல் கூழ் ஒரு புதிய தெம்பை ஊட்டியது.

விதானையார் குழுவின் கூழ் குடிப்பு முடிய இன்னும் வெகு நேரம் எடுக்கும் என்பதைச் சீதேவிப்பாட்டி அனுபவபூர்வமாக உணர்ந்திருந்த காரணத்தால், ராமையாவையும் இளையவனையும் சாப்பிட அழைத்தாள்.

கூழ் குடித்து அரைமணி நேரம் கடந்து விட்டதால் அவர்களும், ஒத்தாப்புக்குள் இருந்த பனம்பாயை விரித்து விட்டு அதில் அமர்ந்து கொண்டனர். சாப்பாடும் அன்று அவர்களுக்குப் பச்சைப் பனையோலைப் பிளாவில் தான். அதில் ஏதோ ஒரு விதமான சுவை இருப்பதாகவே இளையவன் உணர்ந்தான். ஏனோ சாப்பிடும் போது அவனால் சொர்ணத்தை நிமிர்ந்து பார்க்க முடியவில்லை.

உணவு முடிந்து சற்று ஓய்வெடுத்த பின் சீதேவிப்பாட்டி "இளையவன் வீட்டை கொண்டு போக ஒரு இருபது முப்பது தேங்காய் நல்லதாய்ப் பார்த்து உரிக்க விடு" என்றாள். சொர்ணமும் சாக்கு ஒன்றைத் தூக்கிக் கொண்டு அவர்கள் பின்னால் நடந்தாள்.

அதற்கிடையில தேங்காய் வியாபாரியின் உழவு இயந்திரம் வரவே கூழ் குடிப்பில் இருந்த விதானையார் "ராமையா! தேங்காயை எண்ணிக் குடு" என்றார் பலமாக. ராமையா உழவு இயந்திரத்தை நோக்கிப் போக ஆரம்பித்தான்.

இளையவன் அலவாங்கை நிலத்தில் குத்தி விட்டு. நிமிர்ந்து பார்க்காமலே தேங்காய்களை உரிக்க ஆரம்பித்தான்.

சொர்ணம் மெல்லக் கேட்டாள் "என்ன முந்த நாள் கமலி வீட்டிலை கலியாண விருந்தாம்... நீ போகேல்லையே...?"

சில விநாடிகள் அமைதியின் பின் "போனனான்.. அயலுக்கை போகாமல் விட முடியுமே?" என்றான் அவன்.

"ஆலடிவெட்டையார் ஒருதரும் வரவில்லையே...?"

சொர்ணத்தின் கேள்வி அவனை ஒரு முறை நிமிர்ந்து பார்க்க வைத்தது. பின்பு "அவங்கள் விருந்துக்கு வருவாங்களே? அப்படி வாறதெண்டால் வெட்டத்தான் வருவாங்கள்" என்றான் அவன்.

சொர்ணம் உடனடியாகவே கேட்டாள் "ஒரு பொடியனும் பெட்டையும் மனம் விரும்பிக் கலியாணம் செய்தால் என்ன வெட்டுறதும், கொத்துறதும்?" அவளின் குரலில் ஒரு மெல்லிய கோபம் தொனித்தது.

அவன் பதில் எதுவுமே சொல்லவில்லை. தலையைக் குனிந்தவாறே தேங்காய்களை உரித்துக் கொண்டிருந்தான்.

சிறிது நேரம் மௌனம் நிலவியது.

சொர்ணத்தின் கேள்வியில் இருந்த நியாயத்தை அவன் மனம் ஏற்றுக் கொண்டது. ஆனால் சமூகம் அப்படியான நியாயங்களைக் கடும் குற்றங்களாகப் பார்ப்பதை அவள் ஏன் இன்னும் புரிந்து கொள்ளவில்லை என்பதைத் தான் அவனால் விளங்கிக் கொள்ளமுடியவில்லை.

அவன் ஒரு விதமான தயக்கத்துடன் சொன்னான் "பொடியனும் பெட்டையும் விரும்பினால் மட்டும் போதுமே..? ஊர் உறவுகள் ஏற்க வேண்டாமே?"

அவள் குறுக்கிட்டாள்.

"ஊரும் உறவும்...." என்று தொடங்கிய அவள் இடை நிறுத்திவிட்டு பின் திடீரெனக் கேட்டாள் "நீ... ஒரு வேறை சாதிப் பெட்டையை விரும்பினால் ஊருக்குப் பயந்து கைவிடுவியோ இல்லாட்டில் நடக்கிறது நடக்கட்டும் என்டு கலியாணம் கட்டுவியோ?"

அவளின் கேள்வி அவனை அதிரவைத்தது. அவன் எதுவுமே பேசவில்லை! வேகமாகத் தேங்காயை உரிக்க ஆரம்பித்தான்.

சிறிது நேர மௌனத்தின் பின் அவள் சீறினாள் "நீ... இதுக்கு மறுமொழி சொல்ல மாட்டாய்.. ஏனென்டால், கை விட்டிடுவன் என்டு சொல்ல மனம் விடாது... கலியாணம் செய்வன் என்டு சொல்லத் துணிவு வராது?"

சொர்ணம் கையில வைத்திருந்த சாக்கைச் சுழற்றி வீசி விட்டு வேகமாகத் தோட்டத்து வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

இளையவன் செய்வதறியாத நிலையில் திகைத்துப்போய் நின்றான்.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப்புனல்



## உனக்கான சுவாசம்

உயிரே எனக்காக மட்டும்
சுவாசித்த இதயம் - இப்போ
உனக்காகவும் சுவாசிக்கிறது
நீ என்னை விட்டு விலகினாலும் - என்
இதயம் உனக்காக
என் உயிர் உள்ளவரை
சுவாசிக்கும்.

சி.சுகன்யா
மீசாலை (இராமாவில்)


## உண்ணாமல் விடுவது மட்டும் நோன்பல்ல!

உண்ணாமல் இருப்பது மட்டும்
நோன்பல்ல
உண்மை அன்பு கருணையுடன்
உன் உடல் தியாகம் பிறரை
உதாசீனம் செய்யாதிருப்பதே
நோன்பாகும்!

பொய் பேசாதிருப்பதும்
புறம் கூறா திருப்பதும்
புகைத்தல் மது
மச்ச மாமிசம் கொள்ளாதிருப்பதும்
நோன்பு தான்!
திரிகரண சுத்தி
பரிபூரண பக்தி
சுயியாகம் பயன்படுத்தினால்
அது தவம்!
முறை தவறாது நோன்பை
இறைவனோடு மேற்கொண்டால்
நிறைவான பலன் கிடைத்தால்
நிஜம்!

கவிக்குயிலன்
சேனையூர்-06


## கண்ணீர்!



உயிரானவளே!
இறைவா!
உறவுகளைக் கொடுத்தாய்.
உறவுகளைக் கொடுத்து
உணர்வுகளைக் கொடுத்தாய்.
உணர்வுகளைக் கொடுத்து
பிரிவைக் கொடுத்தாய்.
பிரிவைக் கொடுத்து
வலியைக் கொடுத்தாய்.
வலியைக் கொடுத்து
கண்ணீரைக் கொடுத்தாய்.
ஏனோ? அழிக்க முடியாத
ஆயிரம் அர்த்தக் கண்ணீர்...

கொற்றையூர்
வசந்தமதி.

## எதை மறக்க?



ஆடை வாங்கச் சென்ற அண்ணன்
அரை நொடியில் உயிர்பிரிந்தானே
அதை மறப்பதா?
ஆலமரம் போன்ற என் குடும்பம்
அடியோடு சாய்ந்ததே
அதை மறப்பதா?
மூட்டையோடு முள்ளிவாய்க்கால் சென்று
மூன்றாம் பிறையாய் தேய்ந்தோமே
அதை மறப்பதா?
மலத்தோடு மலமாக
தெருவில் உறங்கினோமே
அதை மறப்பதா?
சொப்ப வாழ்வை அகதிகளாக்கி
வவுனியாவில் புதைத்தோமே
அதை மறப்பதா?
மீளகுடியேற்றம் என்று சொல்லி
மிகுதி இருந்ததும் அழிக்கப்பட்டதே
அதை மறப்பதா
அழகிய என் சோதரி
அந்நியரிடம் கற்பிழந்தாளோ
அதை மறப்பதா?
விடுதலை என்று சொல்லி
விடியுமுன் நின்றிருந்த என் அண்ணன்
பூசாவில் கிடக்கிறானே
அதை மறப்பதா... இல்லை
வணங்கொடுக்கும் எம் மைந்தர்கள் -
உங்கள்
வாசல் தலம் ஆனதே...
அதை மறப்பதா?
பிள்ளையார் கோவில்களை
புத்தகோவில்கள் ஆனதே
அதை மறப்பதா?
எதை மறக்க!
இன்னும் மட்டும் சொல்கின்றோம
எல்லாவற்றையும் மறக்கச்
சொல்கிறீர்களே
எம்மை மறந்து விடுங்கள் - நாம்
ஒன்றையும் மறக்கமாட்டோம்.

சாந்தனூர்
இனியவள்.

## தொலைந்தும்! தொலையா நினைவுகள்....

கனவுகளை
வெறுத்த போதும் - என்
கண்ணுக்குள் வர அவை
மறுத்ததில்லை

உன் நினைவுகளை என்னுள்
புறக்கணிக்க நினைத்த போதும்
அவை ஒரு போதும் என்னை
புறக்கணித்ததில்லை

துன்பங்களை மறக்க
முயன்ற போதும் அவை
துயரங்களைத் தர
மறந்ததில்லை

தொலைக்க நினைத்த - உன்
ஞாபகங்கள் கூட
என்னுள் இருந்து
தொலைந்து போக
நினைத்ததில்லை.

ஆயினும்!
வசந்தத்தை தேடிய போது
மட்டும்
பாலைவனம் ஆகின்றன ஏனோ!
அதுவும் எனக்கு
புரியவில்லை.....



க. ஜனுப்பிரியா
திருவையாறு.


## நிரந்தரம் இல்லா எனக்குள்.......

நிரந்தரம் இல்லா எனக்குள்
உன் நினைவுகள் மட்டும்
நிரந்தரமாகிப் போயின
நீண்ட தூரம் நீங்கி
நீ சென்ற போதும்
நீங்க முடியாமல்
நெருங்கி இருப்பவை
உன் நினைவுகள் தான்.
என் செவிகளில்
இன்னமும் சாய்ந்து கொண்டிருக்கும்
உன் குரலிசை என் கண்களை
இன்னமும் ஈரமாக்கிக்
கொண்டிருக்கும்
உன் உருவம் என் மொழிகளை
இன்னமும் முகர்ந்து கொண்டிருக்கும்
உன் பெயர் வாசனை
என் நாசிகளை இன்னமும்
நனைத்துக் கொண்டிருக்கும்
உன் வியர்வைத் துளி
என் உடலை இன்னமும்
உரசிக் கொண்டிருக்கும்
உன் நெருக்கமான சுவாசம்
என் எலும்புகளை இன்னமும்
நொருக்கிக் கொண்டிருக்கும்
உன் அணைப்பு
என் இதயத்தை இன்னமும்
இயக்கிக் கொண்டிருக்கும்
உன் பாசம்
என் உயிரை இன்னமும்
உயிர்ப்பித்துக் கொண்டிருக்கும்
உன் சிரிப்பு
எல்லாமே எனக்குள் நிரந்தரம்
என் மூச்சுக்கு முடிவுரை எழுதப்படும்
கடைசி நிமிஷத்தில்
நீ வராத போது கூட
என்னை அடக்கம்
செய்யப் போவது
உன் நினைவுகள் தான்.

என். அகநிகா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலன்புரி நிலைய நாள்கள்



■ தமிழன்

அது வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வந்திருந்த மக்கள் தங்கவைக்கப்பட்டிருந்த நலன்புரி நிலையம். நாற்புறமும் முட்கம்பிவேலி அடைக்கப்பட்டிருந்தது. முட்கம்பிவேலிக்கரைகளில் ஆயுதம் தாங்கிய படையினர் முழு நேரக்காவல் கடமையில் ஈடுபட்டிருந்தனர். இங்கும் மக்கள் வாழ்விடங்களாக தரப்பாள் கூடாரங்களே அமைந்திருந்தன. குறிப்பிட்ட கூடாரங்களை உள்ளடக்கியதாக ஒவ்வொரு வலயங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு வலயத்திற்கும் பொறுப்பாக ஒவ்வொரு கிராம சேவகர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். கிராமசேவகர்கள் அனைவரையும் நிர்வகிப்பதற்காக உதவி அரசாங்க அதிபர் நியமிக்கப்பட்டிருந்தார். உதவி அரசாங்க அதிபருக்கான செயலகமும் நிறுவப்பட்டிருந்தது. இந்தச் செயலகத்தில் அரச அதிகாரிகள் (ஆண்கள், பெண்கள்) பலரும் கடமையாற்றிக் கொண்டிருந்தார்கள். இருப்பினும் நலன்புரிநிலையத்திற்கென இராணுவ உயரதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். நலன்புரிநிலையத்தை கட்டுப்படுத்துகின்ற முழுஅதிகாரத்தையும் இராணுவ அதிகாரியே கொண்டிருந்தார். கிராமசேவகர்களும் உதவி அரசாங்க அதிபரும் கையொப்பம் இடு கின்ற வரையறுக்கப்பட்ட அதிகாரங்களையே கொண்டிருந்தார்கள்.

இராணுவப் பொறுப்பதிகாரியின் அலுவலகம், உதவி அரசாங்க அதிபர் செயலகம், பொலிஸ் நிலையம், சிவில் அலுவலகம் என்பன ஒரே சூழலில் அமைந்திருந்தன. நலன்புரி நிலையத்திற்கு வெளியே செல்லும்போதும் உள்ளே வரும் போதும் இந்த அலுவலகங்களைக் கடந்துதான் செல்ல வேண்டும். நலன்புரிநிலையத்திலிருந்து நோயாளர்கள் வெளியிடங்களிலுள்ள வைத்தியசாலைகளுக்குச் செல்வதென்பது பெரும்பாடு. நலன்புரிநிலையத்தில் செயற்பட்டுக்கொண்டிருந்த மருத்துவமனை ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்களில் பகல் வேளையில் மாத்திரமே செயற்பட்டுக்கொண்டிருந்தது. இங்கு வெளிநோயாளர் பிரிவு மட்டுமே செயற்பட்டுக் கொண்டிருந்தது. வேறு எந்தவித வசதிகளும் இருக்கவில்லை. இந்த மருத்துவமனைக்குப் பொறுப்பான வைத்திய அதிகாரி பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர். வன்னியில் தாதியர்களாகப் பணிபுரிந்த சிலர் இந்த மருத்துவமனையில் வைத்திய அதிகாரிக்கு உதவியாளர்களாகச் செயற்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

நோயாளர்கள் சொல்கின்ற விடயங்களை சிங்களத்தில் மொழிபெயர்த்து வைத்திய அதிகாரிக்குச் சொல்வதற்கென மொழிபெயர்ப்பாளரும் இருந்தார். இந்த கருத்துப் பரிமாற்றங்களினாலும் நோயாளர்கள் பல அசௌகரியங்களைச் சந்தித்தனர். வைத்திய அதிகாரி நோயாளர்களைப் பார்வையிடுவதற்கென நேரம் வரையறுக்கப்பட்டிருந்ததால் இலக்கச்சிட்டைகள் வழங்கப்பட்டு அந்த ஒழுங்கிலேயே வைத்திய அதிகாரி நோயர்ளர்களைப் பார்வையிடுவதுண்டு.

நாள் ஒன்றுக்கு குறிப்பிட்ட இலக்கச்சிட்டைகள் வழங்கப்படுவதால் அதிகாலை 4.00 மணியிலிருந்து நோயாளர்கள் மருத்துவமனை வாசலில் காத்துக் கிடந்தார்கள். காலை 8.00 மணிக்குப் பின்னர் தான் மருத்துவ உதவியாளர்கள் (தாதியர்கள்) இலக்கச்சிட்டை வழங்குவது வழமையானது. இந்த வைத்திய அதிகாரி சிபார்சு செய்கின்ற நோயாளர்கள் மட்டும் தான் வவுனியா வைத்தியசாலைக்குச் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டார்கள்.

இவ்வாறு நோயாளர்களை ஏற்றிச்செல்லும் பேருந்து நலன்புரிநிலையத்தின் நுழைவாயிலைக் கடந்ததும் ஓரிடத்தில் நிறுத்தப்பட்டு பேருந்திலிருந்து நோயாளர்கள் அனைவரும் இறக்கப்பட்டு அனைவரும் இராணுவ மருத்துவரால் மீள மருத்துவ சோதனைக் குட்படுத்தப்பட்டு அந்த இராணுவ மருத்துவரும் சிபாரிசு செய்த பின்னரே அவர்கள் வவுனியா மற்றும் செட்டிக்குளம் வைத்தியசாலைகளுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர். அந்த இராணுவ மருத்துவர் ஒரு சில நோயாளர்களை அந்த இடத்தில் வைத்தே நலன்புரிநிலையத்திற்கு திருப்பியனுப்பிய சம்பவங்களும் இடம் பெற்றது.

உதவி அரசாங்க அதிபர் செயலகத்தின் ஏற்பாட்டில் பேருந்து ஒன்று நலன்புரிநிலையத்திலிருந்து வவுனியா வைத்தியசாலை வரையிலும் சேவையில் ஈடுபட்டது. அதுவும் வைத்திய அதிகாரியினால் சிபாரிசு செய்கின்ற நோயாளர்களும் உதவியாளர்களும் மட்டும்தான் பேருந்தில் வவுனியா வைத்தியசாலைக்கு சென்று வர அனுமதிக்கப்பட்டது. இந்தப் போக்குவரத்தும் படையினரின் (ஸ்கொட்) பாதுகாப்புடன் தான் இடம்பெற்றது. இது தவிர நலன்புரிநிலையத்திற்கு வெளியே எவரும் சென்று வர அனுமதிக்கப்படவில்லை. தொடக்க நாள்களில் இந்தப் பேருந்தில் வைத்தியசாலைக்குச் சென்று வருபவர்களும் நலன்புரி நிலையத்தின் நுழைவாயிலில் வைத்து சோதனைக்குட்படுத்தப்பட்ட பின்னரே அனுமதிக்கப்பட்டனர்.

மக்கள் தமது தேவைகளுக்காக உதவி அரச அதிபர் செயலகத்திற்குச் செல்கின்ற போதெல்லாம் அங்கு கடமையாற்றுகின்ற உத்தியோகத்தர்களில் குறிப்பாக பெண் உத்தியோகத்தர்களில் சிலர் மக்களைப் பாடாய்ப்படுத்தினர். உறுதிப்படுத்தல் கையொப்பத்திற்கு மாத்திரம் செல்கின்ற மக்களை பல மணிநேரமாகக்காத்திருக்க வைத்தனர். உதவி அரச அதிபர் தனது அலுவலகத்தில் இருக்கின்ற சந்தர்ப்பங்களிலும் மக்கள் அவரைச்சென்று சந்திக்க விடாது தடுத்தனர் அந்த உத்தியோகத்தர்கள். "சேர் பிஸியாக இருக்கிறார். ஆகவே காலையில் வாங்கோ, மாலையில் வாங்கோ, நாளைக்கு வாங்கோ" என மக்களை அலைக்களித்தனர். அந்த உத்தியோகத்தர்களும் அதே நலன்புரிநிலையத்தில்தான் குடியிருந்தார்கள். அவர்களும் வன்னியில் வாழ்ந்தவர்கள் தான். இறுதி யுத்தத்தின் போது துன்பங்களை அனுபவித்தவர்கள் தான் இருப்பினும் தங்களுக்கான உத்தியோகக் கதிரைகள் மீண்டும் கிடைத்தவுடன் தாங்கள் அனுபவித்தவற்றை மறந்து இவ்வாறான பொறுப்பற்ற முறைகளில் நடந்து கொண்டதை அவதானிக்க முடிந்தது. உதவி அரசாங்க அதிபரைப் பொறுத்தவரையிலும் மக்கள் நலன்களில் அக்கறை கொண்டவராகவே இருந்தார். மனிதப்பண்பும் மனிதநேயமும் அவரிடம் தாராளமாகவே இருந்தன. ஆனாலும் அவரின் கீழ் கடமையாற்றிய உத்தியோகத்தர்கள் ஒரு சிலரின் இத்தகைய பொறுப்பற்ற செயற்பாடுகள் பலவிதமான துன்பங்களையும் இழப்புக்களையும் சந்தித்த மக்களின் மனங்களை மேலும் காயப்படுத்தின.

ஒவ்வொரு வலயங்களுக்கும் பொறுப்பாகவிருந்த கிராமசேவகர்களின் உதவியாளர்களென சிலர் கிராம சேவகர்களையே சுற்றித்திரிந்தார்கள். தங்களது வலயங்களில் உள்ள குடும்பங்களின் விபரங்களைப் பதிவு செய்தல், அறுபது வயதிற்கு மேற்பட்டவர்களின் விபரம், ஒரு அங்கத்தவர்களைக்கொண்ட விபரம், காயப்பட்டவர்களின் விபரம், தடுப்புமுகாம்களில் உள்ளவர்களின் விபரம், கர்ப்பிணித்தாய்மார்களின் விபரம், கைக்குழந்தைகள் உள்ள குடும்பங்களின் விபரம். இவ்வாறாக நலன்புரிநிலையத்தில் கிராமசேவகர்களால் மேற்கொள்ளப்பட்ட பதிவுகளென்பது சொல்லிக்கொண்டே போகலாம். இந்த விபரத்திரட்டல்களையெல்லாம் கிராமசேவகரின் உதவியாளர்கள் தான் மேற்கொண்டார்கள். அத்துடன் கிராமசேவகரின் வீட்டுவேலைகளான குழாய்க்கிணற்றில் தண்ணீர் எடுப்பது மற்றும் தண்ணீர்த்தாங்கியில் குடிதண்ணீர் எடுப்பது முதலான வேலைகளையும் இந்த உதவியாளர்களே செய்தார்கள். இந்த உதவியாளர்கள் கிராமசேவகரின் அதிகாரத்தை வைத்துக்கொண்டே பொதுவான நடைமுறைகளையும் மீறிச்செயற்பட்டார்கள். குழாய்க்கிணற்றடியிலும் குடிதண்ணீர்த்தாங்கியடியிலும் வரிசையில் நிற்காது நேராகவே முன்னுக்குச் சென்று தண்ணீர் எடுத்தார்கள். இதையெல்லாம் தட்டிக்கேட்க முடியாதவர்களாகவே மக்கள் இருந்தார்கள். நலன்புரிநிலையத்தின் ஒருபக்கத்தில் மண்குவியல் ஒன்று இருந்தது. மக்களில் சிலர் தங்களின் கூடாரங்களின் தேவைகளுக்கென அந்த மண்குவியலை கிளறமுற்பட்டது போது கிராமசேவகரின் உதவியாளர் ஒருவர் வந்து தனது அதிகாரத்தைக் கொண்டு தடுத்து விட்டார். அன்றைய தினம் இரவு அந்த உதவியாளரும் இன்னும் சிலரும் வந்து அந்த மண்குவியலை முழுமையாகவே அகழ்ந்து உரப்பைகளில் நிரப்பி தங்களது கூடாரங்களுக்கு கொண்டு சென்றதை அவதானிக்க முடிந்தது. இந்த விடயத்திலிருந்தே பொதுநலமாகச் செயற்படவேண்டியவர்களின் முழுமையான சுயநலத்தின் தோற்றப்பாடும் வெளிப்படையாகிறது.

நலன்புரிநிலையத்தின் வாழ்க்கையில் தொடக்க நாள்களில் கூடாரங்களில் உணவு சமைப்பதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. ஒவ்வொரு வலயங்களிலும் ஒவ்வொரு பொதுவான சமையல்க் கூடங்கள் அமைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் அங்கத்தவர்களின் எண்ணிக்கை குறிக்கப்பட்டு டோக்கன் வழங்கப்பட்டிருந்தது. மூன்றுவேளைச்சாப்பாட்டு நேரத்திற்கும் அந்த டோக்கன்களோடு சென்றுதான் சமையல் கூடத்தில் சமைத்த உணவினைப் பெற்றுக்கொண்டார்கள். தொடர்ந்து வந்த நாள்களில் உலக உணவுத்திட்டத்தின் கீழ் நிவாரணப்பொருள்கள் வாரம் தோறும் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து கூடாரங்களில் சமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது. இதன் பின்னர் சமைத்த உணவு வழங்கும் நடைமுறை கைவிடப்பட்டது.

சிவில் அலுவலகம் என்று முன்னர் குறிப்பிட்டிருந்தேன். இது பெயரளவில் தான் சிவில் அலுவலகமாக இருந்தது. இந்த அலுவலகத்தில் கடமையாற்றிய படை அதிகாரிகள் புலனாய்வுப் பிரிவைச் (C.I.D) சேர்ந்தவர்கள். நலன்புரிநிலையத்தில் முன்னாள் போராளிகள் எத்தனை பேர் தடுப்புமுகாம்களுக்குச் செல்லாமல் தங்கள் குடும்பங்களோடு மறைந்து வாழ்கிறார்கள். வன்னியில் விடுதலைப்புலிகளின் துறைசார் அலுவலகங்களில் பணியாளர்களாக கடமையாற்றியவர்களின் விபரங்கள் வன்னியில் விடுதலைப் புலிகளுடன் நெருக்கமான தொடர்புகளை வைத்திருந்தவர்கள் உள்ளிட்ட நலன்புரிநிலையத்தில் வசிக்கின்றவர்களின் செயற்பாடுகளை அவதானிப்பதாகவே இந்த சிவில் அதிகாரிகளின் பிரதான நோக்காக இருந்தது.

இந்த சிவில் அதிகாரிகளுக்குப் பின்னால் இளசுகள் கூட்டமொன்று வால் பிடித்துத் திரிந்தது. இந்த இளசுகளும் வன்னியில் களமுனைகளுக்குச் செல்லத்துணிவில்லாமல் விடுதலைப்புலிகளின் துறைசார் பொறுப்பாளர்களுடன் ஒட்டிக்கொண்டு திரிந்தவர்கள் தான் நலன்புரி நிலையத்திற்கு வந்தவுடன் தங்களின் சுயபாதுகாப்பைத் தக்கவைத்துக்கொள்வதற்காக சிவில் அதிகாரிகளுடன் வால்பிடித்துக்கொண்டு மற்றவர்களைக் காட்டிக் கொடுத்தார்கள். வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டிருந்த முன்னாள் போராளிகள் சிலர் தங்களின் உடல்நிலை தேறியபின்னர் வைத்தியசாலைகளிலிருந்து வெளியேறி நலன் புரிநிலையத்திற்கு வந்து தங்களது குடும்பங்களுடன் சேர்ந்து கொண்டார்கள். அத்தோடு முன்னாள் போராளிகளில் ஊனமுற்றவர்கள் (இடுப்பின் கீழ் உணர்ச்சி அற்றவர்கள், இரண்டு கண்களையும் இழந்தவர்கள், கைகளை இழந்தவர்கள்) சிலர் ஓமந்தையில் படையினரின் மனிதாபிமான நோக்கத்தின் அடிப்படையில் தடுப்புமுகாம்களுக்கு அனுப்பப்படாமல் நேரடியாகவே நலன்புரிநிலையத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டார்கள். சிவில் ( புலனாய்வு) அதிகாரிகளின் வால்பிடிக்கூட்டத்தினர் இந்த ஊன முற்ற போராளிகள் வைத்தியசாலைகளிலிருந்து வந்து நலன்புரிநிலையத்தில் வசித்து வந்த முன்னாள் போராளிகள் அத்தோடு வன்னியில் புலிகளின் துறை சார்ந்த அலுவலகங்களில் பணியாளர்களாக கடமையாற்றியவர்கள் என அனைவரையும் விடுதலைப்புலிகள் உறுப்பினர்களாக அடையாளப் படுத்தியிருந்தார்கள். இந்த வால்பிடிக்கூட்டங்கள் கொடுத்த தகவல்களின் படி அடையாளப்படுத்தப்பட்ட அனைவரும் சிவில் அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டார்கள். இவ்வாறு அழைக்கப்பட்ட அனைவரும் பேருந்துகளில் ஏற்றி அழைக்கப்பட்டு தடுப்புமுகாம்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டார்கள். இதனைத்தொடர்ந்தும் இவ்வாறான களையெடுப்புக்கள் மூன்று தடவைகள் இடம்பெற்றன. தங்களது காரியங்கள் நிறைவேறியதும் மூன்றாவது கட்டத்தில் சிவில் அதிகாரிகள் இந்த வால்பிடிக்கூட்டத்தினரையும் சேர்த்தே தடுப்புமுகாம்களுக்கு அனுப்பி வைத்தமை வேறுகதை.

குடும்ப வறுமைநிலை காரணமாக சிலர் அப்பிள், றம்புட்டான், ஒறேஞ்சு போன்ற பழவகைகளை நலன்புரிநிலையத்தில் பொதுவாக மக்கள் கூடுகின்ற இடங்களில் விற்பனை செய்தனர். இவ்வாறு விற்பனை செய்த சில சந்தர்ப்பங்களில் படை அதிகாரிகள் பழங்களை கூடைகளோடு தூக்கி வீதியில் பழங்களை கொட்டிய துன்பியல் சம்பவங்களும் நடந்தன. கையடக்கத்தொலைபேசிப் பாவனைகளுக்கு எவருக்கும் அனுமதி இல்லை. கையடக்கத்தொலைபேசிகள் வைத்திருப்பதாகச் சந்தேகப்பட்ட சிலரும் புலனாய்வு அதிகாரிகளினால் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். நலன்புரி நிலையத்திலிருந்து சொந்த இடங்களுக்கான மீள்குடியேற்ற நடவடிக்கைகள் தொடங்கிய தொடக்க நாள்களில் உதவி அரச அதிபர் செயலகத்தில் வைத்து பேருந்துகளில் மக்களை ஏற்றும் தவறுவாயிலும் புலிச்சந்தேக நபர்களாகக் கருதப்பட்ட சிலரும் புலனாய்வு அதிகாரிகளால் மீள் குடியேற்றத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டது. பின்னர் அவர்கள் தீவிர விசாரனைகளுக்கு உட்படுத்தப்பட்டார்கள். இன்னும் சிலர் புலனாய்வு அதிகாரிகளால் தாக்கப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றன.

இடம்பெயர்ந்த மக்களில் குறுகிய ஒரு தொகுதியினரைத் தவிர ஏனைய மக்கள் அனைவரும் தங்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்பட்டு விட்டனர். தற்போது வவுனியாவில் கதிர்காமர் நலன்புரிநிலையம் மாத்திரமே இயங்கி வருகின்றது. மற்றைய நலன்புரிநிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டு விட்டன. தமது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்கள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பியுள்ளனர். இருப்பினும் கடந்தகால நலன்புரிநிலைய வாழ்க்கையில் ஏற்பட்ட கசப்பான அனுபவங்களும் அரச அதிகாரிகளும் படை அதிகாரிகளும் ஏற்படுத்தி விட்ட மனக்காயங்களும் மக்கள் மனங்களிலிருந்து ஆறவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாம்புக்கு கிஸ்

மல்லிகா ஷெராவத்துக்கும் பாலிவுட் ஹீரோ இம்ரான் ஹாஷ்மிக்கும் மீண்டும் மோதல் ஏற்பட்டுள்ளது. கடந்த சில வாரங்களுக்கு முன்பு பேட்டி அளித்த இம்ரான் ஹாஷ்மி, மார்டர் இந்தி படத்தில் தன்னுடன் நடித்த மல்லிகா ஷெராவத்துக்கு முத்தக் காட்சியில் நடிக்க தெரியவில்லை என்று விமர்சித்திருந்தார். இது பரபரப்பை ஏற்படுத்தியது.

இம்ரானின் பேட்டியை அறிந்து கோபம் அடைந்த மல்லிகா, இம்ரானுடன் முத்தக்காட்சியில் நடித்ததை காட்டிலும் ஹிஸ்ஸ் படத்தில் பாம்புக்கு முத்தம் கொடுத்து நடித்ததுதான நன்றாக இருந்தது. இம்ரானைவிட முத்தக்காட்சியில் நடிப்பதற்கு பாம்பு தான் சிறந்தது என்றார். இந்த மோதலுக்கு பிறகு அமைதியாக இருந்த இருவரும் தற்போது மீண்டும் மோதலுக்கு தயாராகி இருக்கிறார்கள். பாம்புக்கு முத்தமிட்டதை புகழ்ந்திருந்த மல்லிகாவுக்கு தற்போது பதிலடி கொடுத்திருக்கிறார் இம்ரான். பாம்புக்கு முத்தம் கொடுத்தவர், அடுத்து பாம்பாட்டிக்கு முத்தம் கொடுத்து நடிக்கட்டும். இது இன்னும் நன்றாக இருக்கும் என்று மீண்டும் மல்லிகாவை வம்புக்கு இழுத்திருக்கிறார் இம்ரான்.

இருவருக்கும் படங்கள் இல்லாததால் பப்ளிசிட்டிக்காக இப்படி யோசித்து யோசித்து வம்பளக்கிறார்கள் என பாலிவுட் வட்டாரங்கள் கூறுகின்றன.

## ஜப்பான் மொழியில் கோச்சடையான்

சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடிக்கும் கோச்சடையான் படத்தை, ஜப்பான் மொழியில் திரையிட படக்குழு முடிவு செய்துள்ளது.

சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடித்த முத்து படம் ஜப்பானில் மிகுந்த வரவேற்பை பெற்றது.

இதைத்தொடர்ந்து ஜப்பானில் ரஜினிக்கு ரசிகர் மன்றம் வைத்தார்கள்.

இந்த ரசிகர் மன்றத்திற்கு ஜப்பானியர்களே நிர்வாகிகளாக உள்ளனர்.

மேலும் ரஜினிகாந்த் நடித்த படையப்பா, அருணாச்சலம், சிவாஜி, எந்திரன் போன்ற படங்களும் ஜப்பானில் வரவேற்பை பெற்றன.

இதன்காரணமாக ரஜினிகாந்த் நடித்துவரும் கோச்சடையான் படத்தை ஜப்பானில் திரையிட படக்குழுவினர் முடிவு செய்துள்ளனர்.

கோச்சடையான் படத்திற்காக ரஜினிகாந்த், வைரமுத்து எழுதிய பாடல் ஒன்றை தன்னுடைய சொந்தக்குரலில் பாடியுள்ளார்.

இந்தப் பாடல் வசன நடையில் பதிவு செய்யப்படுகிறது.



# சினி.. பிட்ஸ்

## பில்லா 2 உரிமம் - சன் ரிவி

அஜீத் நடிப்பில் அடுத்து வெளிவர இருக்கும் படம் பில்லா 2. சக்ரி டோல்ட்டி இயக்க, யுவன் இசையமைத்து வருகிறார். படத்தின் இறுதி கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஆனால் இன்னும் இப்படத்தின் புகைப் படங்கள் அதிகாரப்பூர்வமாக வெளியாக வில்லை.

இந்நிலையில், பில்லா 2 படத்தில் அஜீத் இலங்கை அகதியாக நடித்து இருப்பதாக தகவல்கள் வெளியாகின. ஆனால் படத்தில் இலங்கையில் பிறந்த தமிழராக நடித்து இருக்கிறார் அஜீத்.

பில்லா 2 படத்தின் டிவி உரிமைகள் அனைத் தையும் சன் ரிவி பெரும் விலை கொடுத்து வாங்கி இருக்கிறது என்பது பிந்திய தகவல்.

## 8 மணிநேரத்தில் ரூ.8 கோடி சம்பாதிக்கும் சல்மான் கான்!

பிரபல பாலிவுட் நடிகர் சல்மான் கானுக்கு, விளம்பர படத்தில் நடிக்க ரூ.8 கோடி தர, பிரபல நிறுவனம் ஒன்று ஒப்புக் கொண்டுள்ளது. பிரபல ரீ.வி., நிறுவனம் ஒன்றில் ஆரோக்கியம் சம்பந்தமான விளம்பரத்தில் நடிக்க சல்மான் கானை கேட்டிருக்கிறது அந்த நிறுவனம்.

அதற்கு சல்மான் கான் கேட்ட தொகை அந்த நிறுவனத்தை அதிர்ச்சி அடைய செய்துவிட்டது. இருந்தும் அந்த நிறுவனம் சல்மான் கேட்ட தொகையை மறுக்காமல் அப்படியே கொடுக்க முன் வந்திருக்கிறது. விளம்பரமும் இரண்டு-மூன்று நாள் சூட்டிங் எல்லாம் இல்லையாம் வெறும் எட்டு மணிநேரம் தான். அதற்கு தான் இவ்வளவு தொகை.

## ரஷ்ய மொழியை கற்கும் காஜல்

சூர்யா, காஜல் அகர்வால் நடிக்கும் படம், மாற்றான். கே.வி.ஆனந்த் இயக்கும் இந்தப் படத்தை ஏ.ஜி.எஸ் என்டர்டெயின்மென்ட் தயாரிக்கிறது. இதன் ஷூட்டிங் ரஷ்யாவில் ஒரு மாதம் நடந்து வருகிறது. இதையடுத்து, ரஷ்ய மொழியை தீவிரமாக கற்று வருகிறார் காஜல் அகர்வால். படத்திற்கு இந்த மொழி அதிகம் தேவைப்படுவதால் இந்த மொழயைத் தீவிரமாக கற்று வருகிறார்.

## ஒல்லியாக மாறினார் அசின்!

பாலிவுட்டில் நம்பர் ஒன் இடத்தை பிடிப்பதற்கான ரேஸில் ஓடிக் கொண்டிருக்கும் அசின், அடையாளம் தெரியாதவாறு ஒல்லியாக மாறி இருக்கிறாராம். கொழுப்பு நீக்கும் அறுவை சிகிச்சை செய்து கொண்டதால்தான் அவரால் ஒல்லியாக முடிந்தது என்று பாலிவுட் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மீண்டும் வருகிறது வெங்காயம்

தமிழ் சமூகத்தின் மூட நம்பிக்கையின் மீது விழுந்த சவுக்கடி எனப் பாராட்டுக்களைக் குவித்த வெங்காயம் திரைப்படம் மீண்டும் தமிழகம் முழுவதும் இந்த மாதம் இறுதிக்குள் திரைக்கு வருகின்றது. புதுமுகங்கள் நடித்த இந்தப் படத்தில், சத்யராஜ் சிறப்பு வேடத்தில் நடித்திருந்தார்.

மூட நம்பிக்கையால் கற்பிழக்கும் பெண்கள், உயிரிழக்கும் சிறுவர்களின் பரிதாபத்தை நெஞ்சைத் தொடும் வகையில் காட்சிப்படுத்தியிருந்தார் புதிய இயக்குநர் ராஜ்குமார். இந்தப் படம் கடந்த ஆண்டு வெளியிடப்பட்டது. அப்போது, திரையுலகில் நிலவிய சூழலால் இந்தப் படத்துக்கு நல்ல அரங்குகள் கிடைக்கவில்லை. இப்போது சேரனின் சொந்தப் பட நிறுவனம் வெங்காயத்தை தமிழகம் முழுவதும் புதிதாக வெளியிடுகிறது.



## தெலுங்குப் படத்தில் டாப்சி

கொலிவுட்டில் கார்த்தியின் நடிப்பில் சிறுத்தை படத்தை இயக்கிய சிவா இயக்கும் தெலுங்கு படத்தில் நடிப்பது பற்றி டாப்சீ பேசியுள்ளார். தெலுங்கில் வீரா என்ற பெயரில் எடுக்கப்பட்ட படம், தமிழில் வீரய்யா என்ற பெயரில் வெளியாகிறது.

கொலிவுட்டில் இரண்டு முன்னணி நாயகிகள் இணைந்து நடிப்பது இன்றைக்கு பெரும் கனவாக உள்ளது.

ஆனால், தெலுங்கில் டாப்சி, காஜல் அகர்வால் இருவரும் நடித்துள்ளார்கள். இந்தப் படத்தில் ரவி தேஜா, ஷாம் இருவரும் நடித்துள்ளார்கள். ரமேஷ் வர்மா இயக்கியுள்ளார்.

வீரய்யா படத்தின் இசை வெளியீட்டு விழா சமீபத்தில் நடந்துள்ளது. இதில் கொலிவுட் பிரபலங்கள் கலந்து கொண்டார்கள். இந்தப்படத்தை தமிழ் ரசிகர்கள் நிச்சயம் வரவேற்பார்கள் என நினைக்கிறேன் என்று நாயகி டாப்சி கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படம் : வீரய்யா     நடிகை : டாப்சி

## திரைக்கு வரவுள்ள...



**சமரன்**
நடிகர் : விஷால் நடிகை : திரிசா
இயக்குனர் : திரு



**கந்தா**
நடிகர் : கரன் நடிகை : மித்ரா
இயக்குனர் : பாபு.கே.விஸ்வநாத்



**கிளிக் 3**
நடிகர் : ரித்தேஷ் தேஷ்முக்
நடிகை : சதா
இயக்குனர் :சங்கீத் சிவன்



**மாயவரம்**
நடிகர் : ஷெல்வன் நடிகை : இன்பநிலா
இயக்குனர் :நேசம் முரளி



**நடுவுல கொஞ்சம் பக்கத்த காணோம்**
நடிகர் : விஜய் சேதுபதி
நடிகை : காயத்ரி
இயக்குனர் :பாலாஜி தரணிதரன்

## பத்திரமா பாத்துக்குங்க



ஒரு கல்யாணத்தால் தனது சின்ன வயதில் சிதறுண்டு போகும் தங்களது கூட்டுக் குடும்பத்தை, ஒரு காதலால் சேர்த்து வைக்கும் வித்தியாசமான வில்லனின் கதைதான் பத்திரமா பாத்துக்குங்க மொத்த படமும்!


சின்ன வயதில் தானும் - தன் தாயும், தந்தையை இழந்து தன் தாத்தாவின் குடும்பத்தை விட்டு பரியக்காரணமான சொந்தங்களை பழிவாங்க துடிக்கும் வில்லன், அவரையும் அறியாமல் மொத்த குடும்பத்தையும் ஒரு காதலின் மூலம் ஒன்று சேர்ப்பது தான் இதுவரை நாம் பார்த்திராத பத்திரமா பாத்துக்குங்க படத்தின் வித்தியாசமும், விறுவிறுப்புமான கதைக்களம். பொதுவாக இதுமாதிரி நல்ல காரியங்களை நம் தமிழ் படங்களில் ஹீரோக்கள் தான் செய்வார்கள். ஆனால் இந்தப்படத்தில் அதுதான் வித்தியாசம். இந்த வித்தியாசத்திற்காகவே இயக்குநர் வி.சி.சோமசுந்தரத்தைப் பாராட்டலாம்.

ஷரண் குமார், ஸ்மிதா ஸ்ரீ, சம்பத்ராம், வையாபுரி, செந்தில் குமார், தினேஷ், சத்யா, பீர்பால், ஹரிஷ் ஜோஸ்வான், ராஜ்குமார், சாந்தி, ஜோதி, ராஜா, ராஜேஷ், ஷோபாராணி என இப்படத்தில் நடித்திருக்கும் நட்சத்திரங்கள் ஒவ்வொருவரும் தங்கள் பாத்திரமறிந்து பளிச்சிட்டிருக்கின்றனர்.

ஜித்துவின் ஒளிப்பதிவும், சிவாஜி ராஜாவின் இசையும், படத்திற்கு பெரிய பலம்! எல்லோரும் பெற்றத்தாயை பத்திரமா பாத்துக்குங்க சொல்லும் க்ளைமாக்ஸ் மெசேஜ் எதிர்பாராதது. அதுவே புதிரானது - புதியது! - ஆகமொத்தத்தில் பத்திரமா பாத்துக்குங்க பார்க்கலாம்!!

விமர்சனம்





## ஆசியத் திரைப்பட விழாவில் தெய்வத் திருமகள்

கொலிவுட்டில் விக்ரம் நடித்த தெய்வத் திருமகள் ஒசாகா ஆசிய திரைப்பட விழாவில் திரையிடப்பட இருக்கிறது. விஜய் இயக்கத்தில் விக்ரம், அனுஷ்கா, அமலாபால், குழந்தை சாரா ஆகியோர் நடிப்பில் கடந்த ஆண்டு வெளியான வெற்றிப்படம் தெய்வத்திருமகள்.
இப்படம் ஒரு ஆங்கிலப் படத்தின் தழுவல் என்றாலும் அதை மிக நேர்த்தியாக இயக்குநர் விஜய் எடுத்து இருந்தார்.
அதிலும் குறிப்பாக விக்ரம் மற்றும் குழந்தை சாராவின் நடிப்பு ரொம்ப பிரமாதமாக வந்திருந்தது. அனைவராலும் பாராட்டப்பட்டது.
இந்நிலையில் இப்படம் ஒசாகா ஆசிய திரைப்பட விழாவில் திரையிடப்பட இருக்கிறது. இதுகுறித்து இயக்குநர் விஜய் கூறுகையில், ஒசாகா ஆசிய திரைப்பட விழாவில், உலகத் திரைப்பட பிரிவில் தெய்வத்திருமகள் படம் தெரிவாகி இருக்கிறது.
ஏற்கனவே தெய்வத்திருமகள் படம் தென் கொரியாவில் நடந்த பூசன் சர்வதேச திரைப்பட விழாவிலும் பங்குபெற்றது குறிப்பிடத்தக்கது.



இரு கில்லாடிகள்
நடிகர் : பயாஸ், நடிகை : சுவாதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலிலியோ விண்கலம்

கலிலியோ(Galileo) என்பது வியாழன் (ஜுபிட்டர்) கோளையும் அதன் சந்திரன்களையும் ஆராய்வதற்காக நாசாவினால் விண்ணுக்கு அனுப்பப்பட்ட ஆளில்லா விண்கலம் ஆகும். வானியலாளர் கலிலியோ கலிலியின் நினைவாக அவரின் பெயர் சூட்டபட்ட இவ்விண்கலம் அக்டோபர் 18, 1989 இல் அட்லாண்டிஸ் மீள்விண்ணோடத்தினால் அனுப்பப்பட்டது. இது ஏவப்பட்டு கிட்டத்தட்ட ஆறு ஆண்டுகளின் பின்னர் பூமி, மற்றும் வீனஸ் கோள்களைத் தாண்டி 1995, டிசம்பர் 7 ஆம் நாள் வியாழனை அடைந்தது.



முதன்முதலாக ஒரு சிறுகோளை அண்டிச் சென்ற விண்கலம் கலிலியோ ஆகும். முதலாவது சிறு கோள் சந்திரனைக் கண்டுபிடித்தது. வியாழனின் சுற்றுவட்டத்தைச் சுற்றிவந்த முதலாவது விண்கலமும் இதுவாகும். அத்துடன் வியாழனின் வளிமண்டலத்துள் சென்ற முதலாவது விண்கலமும் இதுவே.




படத்தில் இரண்டு கொடிகள் ஒரே மாதிரி உள்ளன. அவற்றைக் கண்டுபிடியுங்கள்.



இந்தப் பறவை குஞ்சிடம் செல்ல வழிகாட்டுங்கள்

## பழமொழிகள்

01. உள்ளது சொல்ல ஊரு மல்ல நல்லது சொல்ல நாடுமல்ல.
02. உள்ளது போகாது இல்லாது வாராது.
03. உள்ளம் தீயெரிய உதடு பழஞ் சொரிய.
04. உறவு போகாமல் கெட்டது கடன் கேட்காமல் கெட்டது.
05. உறியிலே வெண்ணெய் இருக்க நெய்க்கலைவானேன்.
06. ஊசியைக் காந்தம் இழுக்கும் உத்தமனைச் சிநேகம் இழுக்கும்.
07. ஊண் அற்றபோது உடலற்றது.
08. ஊணுக்கு முந்துவான் வேலைக்குப் பிந்துவான்.
09. ஊமையாய் இருந்தால் செவிடும் உண்டு.
10. ஊர் உண்டு பச்சைக்கு, குளம் உண்டு தண்ணீருக்கு.
11. ஊர் வாயை மூட உலைமூடி இல்லை.
12. ஊழி பெயரினும் ஊக்கமது கைவிடேல்.



படத்தில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புக்களின்படி வண்ணம் பூசுங்கள் மறைந்திருப்பவர் வெளிப்படுவார்.

1. பச்சை
2. றோஸ்
3. மஞ்சள்
4. பிரவுண்



# சிறுவர் சுடர்

## பக்தி

பகவான் கிருஷ்ணரின் நினைவு எந்நேரமும் நம் நினைவில் இருந்தால் போதும். உலகில் எதையும் சாதிக்கலாம். பக்தனின் உண்மை அன்புக்கு அவன் உடனே கட்டுப்படுவான்.

ஒருசமயம், கிருஷ்ணர் தனக்கு தலைவலி வந்தது போல நடித்தார். அவரது மனைவி சத்யபாமாவுக்கு விசயம் தெரிந்து மருந்துடன் ஓடோடி வந்தாள். அடுத்து ருக்மணி வந்தாள். அவர்கள் தங்களால் ஆன வைத்தியத்தை எல்லாம் செய்து பார்த்தார்கள். கிருஸ்ணர் வலியால் துடிப்பது போல நடித்தார்.

அந்த சமயத்தில் நாரதர் அங்கு வந்தார். ஊரையே ஏமாற்றும் நாரதரை உலகளந்த பெருமான் ஏமாற்றிவிட்டார். உண்மையிலேயே, சுவாமிக்கு தலைவலிதான் போலும் என்று நம்பிவிட்டார். இதற்கான மருந்தை அந்த பரந்தாமனைத் தவிர வேறு யாரால் சொல்லமுடியும் என நினைத்து, ஐயனே! எங்களைப் போன்ற ஜடங்களுக்கு வியாதி வந்தால் வைத்தியர் மருந்தளிப்பார். நீயே உலகம். உனக்கு ஒன்று என்றால், அதற்கு மருந்தும் உன்னிடம் தானே இருக்கும். என்ன மருந்து எனச் சொல். வரவழைக்க ஏற்பாடு செய்கிறேன், என்றார்.

கிருஷ்ணர் அவரிடம், என் மீது அதிக பக்திகொண்டவன் யாரோ, அவனது பாதத்தில் படிந்த மணலை உதிர்த்து தண்ணீரில் கலக்கிக் கொண்டு வாருங்கள். அந்த பாததுளி தீர்த்தம் என்னைக் குணமாக்கி விடும் என்றார். நாரதரும் தேடிப்பார்த்தார். யாரும் சிக்கவில்லை. எல்லாரும் தங்கள் பக்தியில் ஏதோ ஒரு குறை இருப்பதாகவே கூறினர்.

கிருஷ்ணரிடமே திரும்பிய நாரதர், மருந்தைச் சொன்ன நீங்கள் மருந்து எங்குள்ளது? என்பதையும் சொல்லி விடுங்கள், என்றார்.

அதற்கு, கிருஷ்ணர் சொன்ன பதிலைக் கேட்டு, நாரதர் [illegible]



கோபியர்களின் கால் தூசைக் கொண்டு வரச்சொல்கிறாயே! எங்களைப் போன்றவர்கள் யாகம், பூஜைகளால் உன்னை ஆராதிக்கிறோம்.

அப்படிப்பட்ட நாங்களே எங்கள் பாத தூசை தருவதற்கு யோசிக்கிறோம். கல்வியறிவற்ற கோகுலத்துப் பெண்களின் கால் தூசை கேட்கிறாயே! என்ன விளையாட்டு இது, என்றார்.

சொன்னதைச் செய், என்றார் கிருஷ்ணர்.

நாரதர் கோகுலம் சென்றார்.

கோபியரே! கிருஷ்ணனுக்கு உடல் நிலைசரியில்லை, என்றார்.

இதைக் கேட்ட மாத்திரத்திலேயேபல கோபிகைகள் மயங்கி விழுந்துவிட்டனர். சிலர் அரைகுறை மயக்கத்தில், கண்ணா! உனக்கு என்னாயிற்று! கிருஷ்ணா! நீ பிழைக்காவிட்டால் நாங்களும் பிழையோம். இந்த உலகில் வாழமாட்டோம், என்று உயிர்போகும் நிலைக்கு ஆளாகிவிட்டனர். சிலர், பித்துப் பிடித்ததைப் போல தயிர் பானைகளை கீழே போட்டு விட்டு அங்குமிங்குமாக ஓடினர்.

கிருஷ்ணா! உனக்கு என்னாயிற்று? இப்போதே உன்னைப் பார்க்க வேண்டும்! என்று அரற்றினர். அவர்களின் பக்தியைப் பார்த்து நாரதர் அசந்து போனார்.

தேவலோகத்திற்கு போய், கிருஷ்ணனுக்கு உடல் நிலை சரியில்லை, உங்களில் பக்திமிக்கவர் பாதத்தூசியைக் கொடுங்கள் என்றபோது, நாங்கள் ஒன்றும் அவர் நினைக்குமளவு பக்தி செலுத்தவில்லையே! என்றார்களே தவிர, ஒருவராவது இப்படி வருத்தப்பட்டார்களா! ஏன்! நாராயணா! நாராயணா! என்று அவன் திருநாமத்தை எந்நேரமும் உச்சரிக்கும் நான் கூட அப்படி ஒரு நிலையை அடையவில்லையே! இந்தக் கோபிகைகளோ, கிருஷ்ணனின் உடல்நிலை சரியில்லை எனக் கேட்டதுமே கலங்கித் துடிக்கிறார்களே! உயிரையே விடுமளவு பக்தி செலுத்துகிறார்களே! இவர்களின் பாதத்தூசியே கிருஷ்ணரின் வியாதியைக் குணப்படுத்தும் என்று நினைத்த நாரதர், அவர்கள் பாதம்பட்ட கோகுலத்து மண்ணில் சிறிதளவு நீரில் கரைத்து கொடுத்தார். கிருஷ்ணருக்கு சுகமாகிவிட்டது. அந்தக்கண்ணனை நாமும் கிருஷ்ணா! கிருஷ்ணா [illegible] பக்தியுடன் நினைப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராசி-பலன்

25.03.2012 - 31.03.2012




**அஸ்வினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்**

தலைமையின்றி எப்போதும் பொது நலனையே நினைக்கும் நீங்கள், ஆர்ப்பாட்டம் இல்லாமல் அமைதியாக சாதிப்பீர்கள். புதன் சாதகமாக இருப்பதால் நிர்வாகத்திறமை, அழகு, அறிவு கூடும். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். இழுபறியான பணிகளை விரைந்து முடிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும். சம்பளப் பிரச்சினை தீர்வுக்கு வரும்.





**கார்த்திகை 2, 3, 4 ஆம் பாதங்கள்,**
**ரோகிணி, மிருகசீரிடம் 1, 2-ஆம் பாதங்கள்**

நல்லது கெட்டது நான்கையும் அறிந்து வைத்திருக்கும் நீங்கள், மற்றவர்களின் மனதை நொடிப்பொழுதில் ஆராயும் ஆற்றல் உடையவர்கள். முன்கோபத்தை தவிர்க்கப்பாருங்கள். சோம்பல், அசதி நீங்கும். சுப காரியங்கள் ஏற்பாடாகும். மேலதிகாரியின் ஆதரவு கிடைக்கும். கலைத் துறையினர்களுக்கு அயல்நாட்டிலிருந்து வாய்ப்புகள் தேடி வரும். மன நிறைவுடன் செயல்படும் வாரமிது.




**மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள்,**
**திருவாதிரை, புனர்பூசம் 1,2, 3-ஆம் பாதங்கள்**

பொதுவுடைமைச் சிந்தனையுள்ள நீங்கள், மற்றவர்கள் மனம் கோணாதபடி பழகுவீர்கள். எதிலும் கவனமுடன் செயல்படப்பாருங்கள். வெளிநாட்டிலிருப்பவர்களின் உதவி கிடைக்கும். வேலையாட்கள் பொறுப்புணர்ந்து நடந்து கொள்வார்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மேலதிகாரியின் பார்வை உங்கள்மேல் விழும். கலைஞர்களின் எண்ணங்கள் பூர்த்தியாகும். மூத்த கலைஞர்களின் பாராட்டுதலைப் பெறுவீர்கள்.





**புனர்பூசம் 4-ஆம் பாதம் , பூசம், ஆயில்யம்**

சமயம் சந்தர்ப்பம் பார்த்து சில காரியங்களை முடித்துக் காட்டும் நீங்கள், எப்பொழுதும் மனசாட்சிக்கு கட்டுப்பட்டு செயல்படக்கூடியவர்கள். சவால்களில் வெற்றி காண்பீர்கள். புதிய எண்ணங்கள் மனதில் தோன்றும். கௌரவப் பதவிகள் தேடிவரும். எதிர்பார்த்த பணம் தக்க சமயத்தில் வரும். கணவன் - மனைவிக்குள் மனம் விட்டுப்பேசுவீர்கள். சக ஊழியர்களால் அன்புத் தொல்லைகள் வந்து விலகும். கலைஞர்கள் உற்சாகத்துடன் காணப்படுவார் கள்.




**மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்**

எதிர்க்கும் நல்லதே நினைக்கும் மனப்பான்மை படைத்த நீங்கள், எப்போதுமே ஒற்றுமை உணர்வுக்கு உரமளிப்பவர்கள். இழுபறியாக இருந்த வேலைகள் உடனே முடியும். அரசியல்வாதிகளே! கட்சிக்குள் நடக்கும் கோஷ்டி பூசலில் சிக்கிக் கொள்ளாதீர்கள். வியாபாரத்தில் சிந்தித்து செயல்படுவதன் மூலம் வெற்றி பெறவாய்ப்புண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும். உற்சாகம் ததும்பும் வாரமிது.




**உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள்**
**அத்தம், சித்திரை 1, 2-ஆம் பாதங்கள்**

பழமையில் புதுமையை புகுத்துவதில் வல்லவர்களான நீங்கள், பாரம்பரியமான கலாச்சாரத்திற்கு வித்திடுபவர்கள். புண்ணிய ஸ்தலங்களுக்கு குடும்பத்துடன் சென்று வருவீர்கள். வியாபாரத்தில் தடைப்பட்ட ஒப்பந்தங்கள் மீண்டும் வரும். வேலையாட்கள், வாடிக்கையாளர்களிடம் நயமாகப் பேசுங்கள். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள்.




**சித்திரை 3, 4 ஆம் பாதங்கள்**
**சுவாதி, விசாகம் 1,2,3-ஆம் பாதங்கள்**

நாடிவந்தவர்களுக்கெல்லாம் நல்லது செய்யும் குணமுடைய நீங்கள், யாருக்கும் தீங்கு எண்ணமாட்டீர்கள். கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். பிரபலங்களின் சந்திப்பால் உதவிகள் கிட்டும். உத்தியோகத்தில் மேலதிகாரிக்கு நெருக்கமாவீர்கள். சக ஊழியர்களின் ஆதரவு உண்டு. கலைத்துறையினர்களின் நீண்டநாள் எண்ணங்கள் பூர்த்தியாகும்.




**விசாகம் 4-ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

ஆழ்ந்த சிந்தனையும், பிரச்சினைகளை கண்டு பின்வாங்காமல் அந்த இடத்திலேயே பதிலடி கொடுக்கும் ஆற்றலும் உடையவர்கள் நீங்கள் தான். மற்றவர்களை நம்பி முக்கிய முடிவுகள் எடுக்க வேண்டாம். உத்தியோகத்தில் மேலதிகாரியின் ஆதரவு உண்டு. சக ஊழியர்களிடம் கவனமாகப் பழகுங்கள். கலைஞர்கள் உற்சாகத்துடன் காணப்படுவார்கள். சிந்தித்து செயல்பட வேண்டிய வாரமிது.




**மூலம், பூராடம், உத்திராடம் 1-ஆம் பாதம்**

கிடைக்கும் சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்தி சாதிப்பதில் வல்லவர்களான நீங்கள், மற்றவர்களை உற்சாகப்படுத்தி மகிழ்வீர்கள். குரு வலுவாக இருப்பதால் தைரியமாக முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். அரசாங்க காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். குடும்பத்தில் சந்தோஷம் குடி கொள்ளும். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வெளிவட்டாரத் தொடர்புகள் அதிகரிக்கும். குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள்.




**உத்திராடம் 2,3,4 ஆம் பாதங்கள் , திருவோணம்,**
**அவிட்டம் 1,2-ஆம் பாதங்கள்**

கலகலப்பாகப் பேசி அனைவரையும் ரசிக்க வைப்பதுடன், மற்றவர்களின் துக்கங்களிலும் சமமாகப் பங்கேற்கும் குணமுடையவர்கள் நீங்கள் தான். புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள். தந்தை வகையில் உதவியுண்டு. அரசு காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். உத்தியோகத்தில் தவிர்நபர் விமர்சனத்தை தவிர்க்கப் பாருங்கள்.




**அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள்**
**சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்**

மலர்ந்த முகத்துடன் வந்தாரை உபசரித்து உதவும் குணமுடைய நீங்கள், தடைப்பட்ட பணிகளை விரைந்து முடிப்பீர்கள். குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் மற்றவர்களின் வேலைகளையும் சேர்த்துப்பார்க்க வேண்டிவரும். முகமலர்ச்சியுடன் செயல்படும் வாரமிது.




**பூரட்டாதி 4-ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

மென்மையான மனசும், விட்டுக்கொடுத்துப் போகும் குணமும் உடைய நீங்கள், யார் மனதும் புண்படும்படியாக நடந்துகொள்ளமாட்டீர்கள். கடன்கள் கட்டுப்படும். பிரபலங்களுக்கு நெருக்கமாவீர்கள், சகோதர, சகோதரிகளின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். நீண்டநாள் புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று வருவீர்கள், வியாபாரத்தில் புது முதலீடுகளை தவிர்ப்பீர்கள்.

## பாபாவின் அருளுரையிலிருந்து...



இன்று மனிதன் கவலையின் கைதியாக இருக்கிறான். மன நிறைவின்மையே கவலைக்குக் காரணம். கவலை வேகத்தை விளைவிக்கிறது. இதய நோய்களுக்கு காரணம் கவலை. பயமே நோய்க்கு பெருங்காரணம்.

ஆரோக்கியத்தின் இன்னொரு பகைவன் கோபம். அது ரத்த ஓட்டத்தில் விஷத்தை செலுத்திவிடுகிறது. சாத்வீக உணவை உட்கொள்ளுங்கள். கொழுப்பு சேர்த்த, வறுத்த உணவே இதயநோய்க்கு காரணம். கனிகள், முளைதானியங்கள் ஆகியவை உடலுக்கு மிகவும் சிறந்தது.

ஒவ்வொரு நாளும் உணவு உண்ணும்போது, உணவுப் பொருள்களை, ஜீரணமாவதற்கென கடவுள் அளித்துள்ள நெருப்பில் அர்ப்பணிக்கிறோம். இறைவனுக்கு நன்றி பாராட்டி வழிபடும் வகையில் சாப்பிடவேண்டும். உணவை சமைக்கும் நெருப்பை கடவுள் என கீதை சொல்கிறது. உண்பதன் நோக்கம், கடவுள் நமக்கு அளித்த கடமைகளைச் செய்வது. அல்லது அவனை மகிழ்விப்பதாகும். இதன் விளைவு கடவுளை நோக்கி முன்னேறுவது.

ஒருவன் உன்னை குற்றம் கூறியோ, அவதூறாக பேசியோ, துன்புறுத்தினாலும், அதனையே அவனுக்கு திருப்பாதே. சகிப்புத்தன்மையுடன் நடந்துகொள். ஒருவனை நாய் கடித்தால் அவன் அதை திரும்பக் கடிப்பதில்லை.

# கலியுகத்தில்...

## இப்படியெல்லாம் நடக்குமாம் !

**கலியுகத்தில் திருடர்கள், கருணையற்றவர்கள் மற்றும் அயோக்கியர்கள் போன்றவர்களே அரசாள்வார்கள்! மக்களுடைய பணங்களை அரசர்களே திருடிக்கொள்வார்கள்! அவர்களால் கஷ்டப்பட்டு மக்கள் மலைகளிலும் காடுகளிலும் ஒளிந்து வாழ நேரிடும். பிராமணர்களுக்கு பூநூல் அடையாளமாக மட்டுமே இருக்கும்.**

சூரியனின் முதல் கதிர்கள் பூமியைத் தொடும் நேரம் (உதயம்) நாள் ஆரம்பிக்கும். நாள் என்றால் சூரியனும், பூமியும் சேருவது. மாதம் என்றால், சூரியனும், சந்திரனும் சேர்ந்தவுடன் ஆரம்பிப்பது. வருடம் என்றால், பூமி சூரியனை சுற்றும் ஒரு முழுச்சுற்று. இப்படிப்பட்ட காலக்கணக்கின் படி தான் பஞ்சாங்கம் மற்றும் ஜோதிட சாஸ்திரங்கள் கணிக்கப்பட்டுள்ளது என்கிறார்கள்.

இப்படியே வருடங்கள் சுற்றி சுற்றி லட்சக்கணக்கான வருடங்கள், ஆனால் அதை யுகம் என்கிறார்கள். சரி அப்படி எத்தனை வருடங்கள் சுற்றினால் ஒரு யுகம் வருகிறது என்றும் என்னென்ன யுகங்கள் எத்தனை வருடங்கள் என்றும் பார்க்கலாம்!

★ கிருதயுகம் 17 லட்சத்து 28 ஆயிரம் ஆண்டுகள்

★ திரேதாயுகம் 12 லட்சத்து 96 ஆயிரம் ஆண்டுகள்.
(ஸ்ரீ ராமர் வாழ்ந்த யுகம் )

★ துவாபரயுகம் 8 லட்சத்து 64 ஆயிரம் ஆண்டுகள்.
(ஸ்ரீ கிருஷ்ணர் வாழ்ந்த யுகம் )

★ கலியுகம் 4 லட்சத்து 32 ஆயிரம் ஆண்டுகள்.

கலியுகத்தில் அசுரர்களும் தேவர்களும் ஒரே மனிதனுக்குள் வாழத் தொடங்குவார்களாம். (50 இற்கு 50), சில நேரம் தேவர் பல நேரங்களில் அசுரர். கடவுள் பாதி மனிதன் பாதி. அதனால் தான் இந்தக் காலத்தில் யாரையும் நிரந்தரமான நல்லவர் கள் என்று முழுமையாக நம்ப முடிவதில்லை.)

கலியுகம் முடிந்ததும் மீண்டும் கிருதயுகம் அடுத்து திரேதாயுகம், துவாபரயுகம், மீண்டும் கலியுகம் இவ்வாறு மீண்டும் மீண்டும் வந்துகொண்டேயிருக்கும்.

இவற்றில் கலியுகத்தில் தர்மங்கள் சார்ந்த வாழ்க்கை சீர்குலையுமென்றும் கலியுகத்தின் முடிவில் அதர்மவாதிகளே உச்சமாக ஆட்சி செய்யும் தருணத்தில் அவதாரம் நிகழும் என்றும் கூறப்படுகிறது.

கலியுகத்தில் சத்யம், தர்மம், சாந்தி, பிரேமை இவைகள் நாளுக்கு நாள் குறையும்.

பணமுள்ளவனே மேலான குலத்தில் பிறந்தவன் ஆவான். பணமுள்ளவன் எவனோ அவனே போற்றப்படுவான். ஏழையாக இருப்பவர்களே பழிபாவங்களுக்கு ஆளாவார்கள்.

பலமுள்ளவன் எவனோ அவன் மட்டுமே தர்மம், சத்தியம் போன்றவற்றை தீர்மானிப்பான்.

மணம் செய்து கொள்பவர்கள் அவரவர் சொந்த விருப்பத்தின் படியே இயங்குவார்கள். குலம் மறைந்து போகும். ஆணும் பெண்ணும் சம்மதித்து புணர்ந்தாலே விவாகம் செய்து கொண்டதாகக் கருதப்படும். விவாகம் தேவையற்றதாகும். (விவாகத்தை வரவேற்கும் பெரிய கூட்டமும் திருமணம் தாலி போன்றவற்றை அவமதித்து வெளியேறத்துடிக்கும் கூட்டமுமே இதற்கு அறிகுறியாகிறார்கள் என்று தோன்றுகிறது)

ஆண்களுக்கு பெண்டாட்டி வீட்டுப் பந்தங்களே முக்கியமானவர்களாகிப் போவார்கள், மச்சினி, மைத்துனர்களிடம் பிரியமாகப் பழகுவார்கள். சொந்த தந்தை, சகோதர சகோதரிகளிடம் பிரியம் வைக்கமாட்டார்கள்.

வீடுகள் மகிழ்ச்சியற்று சூனியமாகவே காட்சியளிக்கும்.

மனிதர்கள் அவர்களின் குணங்களைக் கொண்டு சிறந்தவர்களாகப் போற்றப்பட மாட்டார்கள்.

பிராமணர்களுக்கு பூநூல் அடையாளமாக மட்டுமே இருக்கும்.

அதிகமாகப் பேசுபவனே பண்டிதன் என்ற புகழை அடைவான்.

(மேடைக்கு மேடை பேசியே மயக்கும் அரசியல்வாதிகளைப் பார்த்தாலே தெரிகிறதே!)

மனிதர்கள் அதிகம் காமவெறி கொண்டவர்களாகவும், தீய எண்ணங்களைக் கொண்டவர்களாகவுமே இருப்பார்கள்.

மனிதர்கள் பூமியைத் தங்களுடையது என்று சொல்லிக்கொள்வார்கள். பூமியை சொந்தம் கொண்டாட தந்தை, சகோதரங்களுடன் சண்டையிடுவார்கள்.

அருகிலிருக்கும் கோயிலை விட தூரதேசத்தில் இருக்கும் கோயிலே புண்ணிய தலமாகக் கருதப்படும்.

கலியுகத்தில் இருபது, முப்பது வயதே பரம ஆயுளாகும்.

புகழுக்காக மட்டுமே தானங்கள் செய்யப்படும்.

பருவகாலங்கள் மாறிப்போகும். மக்கள் குளிர், காற்று, வெயில், மழை, பசி, தாகம், வியாதி, கவலை இவைகளால் கஷ்டப்படுவார்கள்.

இப்படியெல்லாம் நடக்குமாம் கலியுகத்தில்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியுலக விருந்தினர்கள்

5



"ரொம்பவும் அழகாக இருக்கிறது" அன்ஸார் இங்காயியின் வாலை மெதுவாக வருடினான்.

"எவ்வளவு நல்ல தலைமுடி...!" ஆமினாக்குட்டி அவளுடைய முக்காட்டை டங்காயியின் தலையில் அணிந்திருந்தாள். "இதை வெட்டவேண்டாம். கேட்டாயா டங்காயி"

"நாம் விளையாடப் போகவேண்டாமா?" இங்காயி கேட்டது. "என்ன விளையாட்டு நாம் விளையாடப் போகிறோம்?"

"கபுட்போல்" அன்ஸார் சொன்னான்.

"நல்ல விளையாட்டு" என்றது டங்காயி. பூமியில் நடக்கும் கபுட்போல் விளையாட்டைப் பற்றி அவர்கள் கேள்விப்பட்டிருக்கின்றனர்.



"அப்பா வேலைக்குச் சென்று விட்டார். மாமாவும் வெளியே போயிருக்கிறார். ஏதோ வேலையாக இருக்கிறா அம்மா. வெளியே செல்வதற்கு ஏற்ற சமயம் இதுதான்" அம்முக்குட்டி சொன்னாள்.

"வெளியே சென்றால் பெரியவர்களெல்லாம் எங்களைப் பார்த்து மயங்கி விடுவார்கள்" என்று தயங்கியது டங்காயி.

"அதற்கொரு வழி இருக்கிறது" ஜோசப் சொன்னான் "நாங்கள் எல்லோரும் சேர்ந்து உங்கள் இருவரையும் தோளில் தூக்கிக் கொள்கிறோம். நீங்கள் பொம்மைகளைப் போல அசையாமல் உட்கார்ந்திருந்தால் போதும்".

"அது சரிதான். மாமா வாங்கித் தந்த புதிய பொம்மைகள் என்று நான் சொல்லிக்கொள்கிறேன்" சரவணனுக்கு ஜோசப்பின் தந்திரம் மிகவும் பிடித்துவிட்டது.

அவர்கள் எல்லோரும் சேர்ந்து பின்வாசல் வழியாக வெளியே வந்தார்கள். மைதானம் கொஞ்சத் தூரத்தில் இருக்கிறது. பகல்பொழுதில் அதிகமாக அங்கே ஆட்கள் இருக்கமாட்டார்கள். விளையாட வருகின்ற பிள்ளைகள்தான் இருப்பார்கள்.

நண்பர்களின் தோளில் ஏறி டங்காயியும் இங்காயியும் மைதானத்திற்குச் சென்றார்கள். பெரியவர்கள் யாரும் அவர்களைப் பார்க்கவே இல்லை. பார்த்தவர்களும் அவர்களைக் கவனிக்கவுமில்லை.



பெரிய மாளிகையின் மேலிருந்து இரண்டு பிள்ளைகள் எட்டிப் பார்த்தனர். டங்காயி அவர்களைக் கைகாட்டி அழைத்தது.

"அவர்கள் வரமாட்டார்கள் டங்காயி" பாபு சொன்னான்.

"ஏன் அப்படி...?"

"எங்களுடன் விளையாட அவர்களை விடமாட்டார்கள்" என்று ஆமினாக்குட்டி சொன்னாள்.

"அவர்களுக்கு விளையாட கம்ப்யூட்டரும் வீடியோவுமெல்லாம் உண்டு" என்றான் கண்ணன்.

"அப்புறம், காரும் குதிரையும் உண்டு"

"காரும், குதிரையும், கம்ப்யூட்டரும் இல்லையென்று உனக்கு வருத்தமாக இருக்கிறதா?" இங்காயி கண்ணனிடம் கேட்டது.

"உம்" கண்ணன் முனகினான்.

"ஆனாலும் எங்களுக்கு நிறைய நேரம் மைதானத்தில் விளையாடலாம் அல்லவா. அவர்களால் அது முடியாது"

"ஆனால் நாம் இன்று அவர்களையும் விளையாட்டில் சேர்த்துக்கொள்ள வேண்டும்" என்றது டங்காயி.

அது இங்காயியையும் அழைத்துக்கொண்டு மாளிகை வீட்டின் வெளிச் சுவற்றில் தாவி ஏறியது.

"டங்காயி, பெரிய மனிதர்களோ மிருகங்களோ எதிர்ப்பட்டால் என்ன செய்வது?" இங்காயி அச்சத்துடன் கேட்டது.

"சரிதான். பெரிய மனிதர்களெல்லாம் நம்மைக் கண்டு பயந்து அலறுவார்கள். பட்டப்பகலில் பிரச்சினை ஏற்பட்டு விடும். பிறகு நடப்பதைப் பற்றி நினைத்துப் பார்க்க முடியாது. ஆனால், பூமியில் பாவப்பட்ட குழந்தைகள் இப்படி வருத்தப்படக்கூடாது அல்லவா. அவர்கள் ஒன்றாக விளையாடட்டும்"

அப்போது பிள்ளைகள் இருவரும் மாளிகையின் மாடியிலிருந்து இறங்கி வாசலுக்கு வந்திருந்தனர். டங்காயியும் இங்காயியும் சுவரிலிருந்து வாசலில் தாவி இறங்கினார்கள்...

"நீங்கள் ஹக்கியும் நிக்கியும்தானே?"

இல்லை. நான் இங்காயி, இது டங்காயி. உங்கள் பேரென்ன?"

"நான் சிந்து"

"என் பெயர் சுருதி"

"நீங்கள் ஹக்கியும் நிக்கியுமா என்று கேட்டீர்களே, அது யார் ஹக்கி நிக்கி?" என டங்காயி கேட்டது.

"கம்ப்யூட்டர் விளையாட்டில் உள்ள நண்பர்கள், இயந்திர மனிதர்கள்"

"நாங்கள் இயந்திர மனிதர்கள் அல்ல. தூரத்துக் கிரகத்திலிருந்து வந்த நண்பர்கள்"

"நீங்கள் எங்களுடன் விளையாட வருகிறீர்களா? எங்களுடன் நிறைய நண்பர்களும் இருக்கிறார்கள்"

சிந்துவும் சுருதியும் உற்சாகமடைந்தார்கள். டாடியும் மம்மியும் வெளியே சென்றிருக்கின்றனர். மைதானத்திற்குச் சென்று நண்பர்களுடன் விளையாடினால் எவ்வளவு சுவாரஸ்யமாக இருக்கும்!

"நாங்களும் வருகிறோம்" சிந்துவும், சுருதியும் ஒன்றாகச் சொன்னார்கள்.

சிந்துவையும் சுருதியையும் அழைத்துக்கொண்டு டங்காயியும் இங்காயியும் வருவதைக் கண்டபோது, மற்ற நண்பர்கள் கைதட்டினார்கள். கண்ணன் ஓடி வந்து அவர்களைக் கட்டிப்பிடித்தான்.

மைதானத்திற்குப் பக்கத்தில் நீர்க் குழாயின் அருகில், நாலைந்து பிள்ளைகள் சேற்றிலும் தண்ணீரிலும் விளையாடிக்கொண்டிருந்தனர். மெலிந்து வறண்ட உடல். அழுக்குப்பிடித்து நாற்றமெடுத்த உடுப்புகள். பரிதாபமான தோற்றம். அவர்கள் டங்காயியையும் இங்காயியையும் ஆர்வத்துடன் பார்த்தார்கள்.

"நாங்கள் கபுட்போல் விளையாடப் போகிறோம்... வாருங்கள்" டங்காயி அவர்களையும் அழைத்தது.

"அய்யோ!" சிந்து வெறுப்புடன் முகம் திருப்பிக் கொண்டாள்.

"அசிங்கம் பிடித்த பிள்ளைகள்" கண்ணன் காறித் துப்பினான்.

"அவர்கள் வேண்டாம் டங்காயி" அன்ஸாரிக்கும் அவர்களைப் பிடிக்கவில்லை.

"தீண்டத்தகாதவர்கள். இவர்களுடன் சேர்ந்து விளையாடினோம் என்று வீட்டுக்குத் தெரிந்தால்...." சரவணனும் மற்றவர்களுடன் சேர்ந்து கொண்டான்.

டங்காயியும் இங்காயியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

"சரவணா...." டங்காயி அழைத்தது.

"ரயிலில் பொலிஸ்காரர்கள் மயங்கி விழ்ந்தது எதனால் என்று தெரியுமா?"

"உங்களைப் பார்த்து பயந்ததால் தான்"

"ஆமாம்...அவர்கள் பொம்மைகள் விற்கவந்த மாமாவைக் கீழே தள்ளிவிட்டார்கள். அப்பம் விற்க வந்த மாமாவை அடித்து விரட்டியவர்கள். மனம் நிறைய வெறுப்புடையவர்கள், எல்லோருடனும் அன்பாகப் பழக அவர்களால் முடியவில்லை, அதனால்த்தான் எங்களைக் கண்டு அவர்கள் பயந்துபோனார்கள். எங்களைப் பார்த்து நீ பயந்தாயா?



"இல்லை"

"பெரியவர்கள் எல்லாம் பயந்தார்கள். பயந்தானபோது அவர்களெல்லாம்... நாம் பிள்ளைகளெல்லாம் மனம் நிறைய அன்புடையவர்கள் அல்லவா? நன்மைகள் உடைய நண்பர்கள் அல்லவா? களங்கமற்றவர்கள் அல்லவா? அதனால்த்தான் நீங்கள் யாரும் எங்களைக் கண்டு பயப்படவில்லை".

"கண்ணா..." இங்காயி அழைத்தது.

"சிந்துவையும், சுருதியையும் உங்களுடன் விளையாட விடாதபோது உனக்கு வருத்தமாயிருந்தது அல்லவா?"

"ஆமாம்..." என்றான் கண்ணன்.

"எங்களுக்கும் வருத்தமாக இருந்தது" சிந்துவும் சுருதியும் ஒன்றாகச் சொன்னார்கள்.

"சேர்ந்து விளையாட முடியாதபோது நல்ல நண்பர்கள் மனம் வருந்துவார்கள்" டங்காயி சொன்னது.

"அந்த நண்பர்களைப் பார்த்தீர்களா? அவர்கள் அன்புடைய நண்பர்கள். மனதில் அன்பு இல்லாதவர்கள் தான் அசிங்கமானவர்கள்!"

சட்டென்று அம்முக்குட்டி விம்மி அழுதாள்.

"என்ன?...என்ன ஆயிற்று?"

"நாம் அவர்களையும் சேர்த்துக்கொள்ளலாம் இங்காயி. நாம் தனியாக விளையாடும் போது அவர்கள் வருந்தப்படுவார்கள்"

"நாம் அவர்களையும் விளையாட்டில் சேர்த்துக் கொள்வோம்" எல்லோரும் ஒன்றாகச் சொன்னார்கள்.

நண்பர்கள் ஒரே ஓட்டத்தில் தெருவில் விளையாடிக்கொண்டிருந்த குழந்தைகளை நெருங்கினார்கள். அவர்கள் குழாயில் நீர் பிடித்து தெருப்பிள்ளைகளின் கைகால்களைச் சுத்தப்படுத்தினார்கள். பிறகு மகிழ்ச்சியுடன் அவர்களை அழைத்துக்கொண்டு மைதானத்திற்கு ஓடினார்கள்.



"நாம் விளையாடப் பந்து வேண்டாமா?" இங்காயி கேட்டது.

சரிதான் கபுட்போல் விளையாட வேண்டுமென்றால் பந்து வேண்டும். டங்காயியும் இங்காயியும் நண்பர்களாகக் கிடைத்த உற்சாகத்தில் பந்தை எடுத்துவர மறந்துவிட்டார்கள். எப்படி இப்போது கபுட்போல் விளையாடுவது?

"நாம் மைதானத்தின் காவல்காரனிடம் பந்து கேட்கலாம்?" ஜோசப் சொன்னான்.

மைதானத்திற்கு மிகப் பக்கத்தில் உள்ள கட்டடத்தில்தான் காவல்காரன் வசித்து வருகிறான். மைதானத்தை மட்டுமல்ல, விளையாட்டுப் பொருட்களைப் பாதுகாப்பதும் அவன்தான். கபுட்போல், பாஸ்கட்போல், வொலிபோல், ஷட்டில்காக் எல்லாம்...கிரிக்கெட் விளையாடுவதற்கான பந்தும் பேட்டும் ஸ்டெம்புமெல்லாம் அந்தக் கட்டடத்தின் உள்ளே பத்திரமாக வைக்கப்பட்டிருப்பதை ஜோசப் பார்த்திருக்கிறான்.

எல்லாம் பெரியவர்கள் விளையாடுவதற்கானவை. குழந்தைகள் விளையாட அவன் பந்தைத் தருவானா?

"தராமலிருக்கமாட்டான்" டங்காயி சொன்னது:

"பிள்ளைகள் விளையாடுவதற்குத்தானே விளையாட்டுப் பொருட்கள் இருக்கின்றன?"

ஜோசப்பும் அன்ஸாரும் சேர்ந்து, பந்து வாங்குவதற்காக கட்டடத்தின் உள்ளே சென்றார்கள். டங்காயியும் இங்காயியும் மற்ற நண்பர்களும் பக்கத்தில் உள்ள ஒரு மரத்தினடியில் காத்திருந்தனர்.

"டங்காயி, உங்கள் கிரகத்தில் நீங்கள் கபுட்போல் விளையாடுவீர்களா?" கண்ணன் கேட்டான்.

"பூமியில் மனிதர்களும் மிருகங்களும் விளையாடுகின்ற எல்லா விளையாட்டுகளையும் நாங்களும் விளையாடுவோம்" என்றது டங்காயி.

"மிருகங்கள் விளையாடுகின்ற விளையாட்டா? மிருகங்கள் விளையாடுமா?"

"எல்லா உயிரினங்களும் விளையாடும், கண்ணா...விளையாட்டு மனதிற்கும் உடலுக்கும் புத்துணர்ச்சியைக் கொடுக்கும்"

"நீங்கள் விளையாட்டுகளில் போட்டி வைப்பீர்களா?" ஆமினாக்குட்டி கேட்டாள்.

"இங்கே நாங்களெல்லாம் விளையாட்டுப் போட்டி நடத்துவோம் தெரியுமா? நாடுகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் மூர்க்கப் பிடிவாதத்துடன் நடக்கும். பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையில் கிரிக்கெட் அல்லது ஹொக்கி போட்டி நடக்கும்போது அது யுத்தம் நடப்பது போலவே இருக்கும்"

"அட...விளையாட்டு என்றால் விளையாட்டுதானே ஆமினாக்குட்டி..." இங்காயி சொன்னது "விளையாட்டு ஒருபோதும் யுத்தமல்ல"

அப்போது அன்ஸார் கட்டடத்திற்குள்ளிருந்து வெளியே வந்தான்.


"சரவணா...." கட்டடத்தின் வாயிலருகில் நின்று அன்ஸார் அழைத்தான். "கிரிக்கெட்...ஓடிவா..."

"கிரிக்கெட்.....கிரிக்கெட்..." நண்பர்கள் துள்ளியெழுந்தனர். அவர்கள் ஆவேசமாக அன்ஸாரை நோக்கிப் பாய்ந்தோடினார்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழன் பத்திரிகையில்
ஏ.பி.விஜயக்கோன் எழுதிய
கட்டுரையின் இறுதிப் பகுதி
தமிழில் ஜவ்ஹர்



# எதையும் செய்யக்கூடிய நிறைவேற்று அதிகாரம்

**தாங்கமுடியாத பெரும் செலவு பிடிக்கும் அமைப்புகள்.**

பெரும்பாலான மக்கள் தமது அன்றாட வாழ்வாதாரத்திற்கே திண்டாடும் நிலையில் உள்ள சிறீலங்கா போன்ற நம் நாட்டில் பெருஞ் செலவில் பேணப்படும் சில அமைப்புகள் உருவாகியுள்ளன. இவ்வமைப்புகளின் சொத்துக்களைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டவர்களுக்கும் அது குறித்த உணர்வும் சிக்கனத்தன்மையும் சற்றேனும் இல்லை. இவர்கள் உண்மையில் தேசிய நிதித்துறைக்குச் சுமையானவர்களேயாவர்.

**நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி அலுவலகம்:**

சிறீலங்கா உள்ளது போன்று சகல நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிப் பதவியுடைய ஓர் ஜனநாயக அரசாங்கத்தை உலகில் வேறெந்த நாட்டிலும் காணமுடியாது. நாட்டினை நேர்மையுடனும் கௌரவத்துடனும் ஆட்சிசெய்து மக்களின் நன்மதிப்பைப் பெற்றுக்கொள்ளும் விதத்திலேயே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை வழங்கப்பட்டது.

அரசியலமைப்பு அவசியமான சூழலை உருவாக்கியிருப்பினும் இன்றைய ஜனாதிபதி ஓர் அரசியற்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி அத்துடன் அதன் நிமித்தம் அதிகாரத்திற்கான பேராசை மற்றும் அரசியலில் ஒருதலைச்சார்பான நடுநிலையற்ற நிலைப்பாட்டினையே தலைமைத்துவத்திற்கு வழங்குகிறார்.

சுதந்திரமாகவும் கீழ்நிலைப்படுத்தப்படாமலும் இருக்க வேண்டிய சட்டமன்று நீதித்துறை என்பன தலைமைப்பதவி மூலம் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. சுதந்திரமாகச் செயற்படும் எந்தவொரு குழுக்களும் இங்கு இல்லை.

ஓர் அரசாங்கத்தின் முக்கிய சிறப்பு மிக்க பொறுப்புகளாக வரவு செலவுக்கான திட்டமிடுதல் மற்றும் செலவுகளுக்கான பணமளித்தல் என்பன உள்ளன. அவ்வாறான செயற்பாட்டிற்கு எதிர்மறையான விதத்தில் ஜனாதிபதி அவர்களால் நிதிவிடயம் பொறுப்பெடுக்கப்பட்டு பொதுமக்களின் பணம் பெருமளவில் ஊதாரித்தனமாகச் செலவு செய்வதைக் கண்டுகொள்ள முடிகின்றது. இன்று ஜனாதிபதி தலைமைப்பதவியென்பது ஓர் மட்டுமீறிய செலவுடையதாக மாறிவிட்டது.

ஜனாதிபதி ஓர் சர்வாதிகாரி போல நடந்து கொள்ள முடியும். எந்த மோசமான தவறுகளையும் செய்ய முடியும். அத்துடன் அவற்றிற்காக நீதிமன்றத்திற்கு அழைக்கப்படாமலே தடுக்கும் ஆற்றலையும் கொண்டுள்ளார்.

இவ்வளவு குறைபாடுகள் இருந்தும் கூட இன்னமும் சிறீலங்கா போன்ற ஒரு நாட்டிற்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை பொருத்தமானதாகவே உள்ளது. அத்தியாவசியமான திருத்தியமைத்தல்களுடன் இம்முறையை நாம் தொடர்ந்து கைவசம் வைத்திருத்தல் வேண்டும்.

**2. அமைச்சரவையின் அமைச்சர்கள்:**

பிரதம அமைச்சரின் ஆலோசனையுடன் தான் அமைச்சர்களின் நியமனங்கள் இடம்பெறல் வேண்டும் என்ற நியதி இருப்பினும் கூட, ஒருபோதும் அவ்விதம் நடைபெறுவதில்லை. ஜனாதிபதி தன் உசிதப்படியே அமைச்சர்களை நியமிக்கிறார். அவர் விரும்புவது போல மட்டுப்படுத்தப்படாத எண்ணிக்கையில் அவரால் அமைச்சர்களை நியமிக்க முடியும்.

அதன்படி முன்னைய அரசாங்கத்தில் பொது நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் அமைச்சர்கள, பிரதி அமைச்சர்களாக 113 பேர் அமைச்சுப் பதவிகளில் இருந்தனர். தற்போதுள்ள அமைச்சரவை 55 பேர்களைக் கொண்டுள்ளது. இதில் 10 சிரேஷ்ட அமைச்சர்கள் அதிகாரம் மற்றும் பொறுப்புகள் ஏதும் வழங்கப்படாத நிலையிலும் அப்பதவிகளுக்கான சகல அனுகூலங்களையும் சிறப்புரிமைகளையும் அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். இதனைவிட 34 பிரதியமைச்சர்களும் அத்துடன் ஏனைய மேற்பார்வை செய்யும் அமைச்சர்களும் உள்ளனர்.

இவ்வாறு பெருமளவில் அமைச்சர்களை நியமிக்கும் செயலானது மக்கள் மத்தியில் கேலிக்குரியதாகவும் கேள்விக்குரியதாகவும் விளங்குவது மட்டுமன்றி பொதுமக்களின் நிதியை முழுமையாகச் சூறையாடும் ஓர் செயலாகும். இது பொதுமக்கள் அரசு மீது கொண்டுள்ள நம்பிக்கையை அலட்சியப்படுத்துவதற்கு ஓர் உதாரணமாகும்.

மற்றுமொரு சிக்கலான பிரச்சினை யாதெனில் இவ்வளவு தொகையான அமைச்சர்கள் இருக்கையில் இவர்களின் அமைச்சுகளுக்குச் செயலாளர்களாக நியமிப்பதற்கு நல்லனுபவமும், அறிவும், திறனும் தகுதியுமுடைய சிரேஷ்ட அரச ஊழியர்களைக் கண்டுகொள்வதென்பதேயாகும்.

சில அமைச்சுகளின் செயலாளர்களாக இருப்பவர்கள் அவ்வமைச்சுகளின் பிரதம கணக்காளர்களாகவும் உள்ளனர் எனும் இந்நிலைமை மிகவும் கண்டனத்துக்குரிய தொன்றேயாகும். அண்மையில் கோப் (COPE) அறிக்கைகளின் வாயிலாக இவை வெளிப்பட்டுள்ளன. சிறீலங்காவிற்கு 20 அமைச்சர்களுக்கு மேல் இருக்கக்கூடாது.

**3. சட்டமன்றம்:**

சிறீலங்கா நாடாளுமன்றத்தில் 225 உறுப்பினர்கள் உள்ளனர். இவ்வளவு பெரிய எண்ணிக்கையில் இருப்பது அவசியம் தானா? அயல் நாடான இந்தியாவின் சனத்தொகையான 1100 மில்லியனுடன் ஒப்பிடுகையில் எமது நாட்டின் சனத்தொகை வெறும் 21 மில்லியன் மட்டுமேயாகும். எமது அளவுகோலின் படி பார்ப்போமேயாயின் இந்தியாவில் 12000 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றம் இருத்தல் வேண்டும். ஆனால் இந்தியாவின் அளவுகோலுக்கேற்ப அது 543 உறுப்பினர்களை மாத்திரமே கொண்டுள்ளது. எவ்வளவு தூரம் நடைமுறைகளுக்கு ஒத்த வரவுகளும் மதிப்பீடுகளும் செய்யும் உலகியல் அறிவும் ஆற்றலுமுடையது இந்தியா!

நாடாளுமன்றத்தையும் அதன் உறுப்பினர்களையும் பராமரிப்பதற்கே நாடு பல மில்லியன்களைச் செலவு செய்ய வேண்டியுள்ளது. இச்சிறிய தீவிற்கு ஆகக் கூடியது 100 அளவிலான உறுப்பினர்களே போதுமானது.

**4. மாகாணசபைகள்**

அரசியல்வாதிகளால் உருவாக்கப்பட்ட தேசிய இனப்பிரச்சினை பயங்கரவாதத்தினால் மேலும் உக்கிரமடைந்து மோசமானதாகவும் கவலைக்குரியதாகவும் ஆகியதால் அதற்கான ஓர் தீர்வினைக் காணும் நோக்கில் இந்தியாவினால் அரசியலமைப்பில் 13 வது திருத்தச்சட்டத்தின் கீழ் நிர்ப்பந்தப்படுத்தித் திணிக்கப்பட்டவையே இந்த மாகாணசபைகள் என்பன.

எது எப்படியிருப்பினும், மாகாணசபை முறைமை தீர்வினைக் காண்பதற்கும் அத்துடன் பயங்கரவாதத்தை வேருடன் அழிப்பதற்கும் தவறிவிட்டது. அதுமட்டுமல்ல, அவை நாட்டின் மேம்பாட்டிற்கான சமூக, பொருளாதார மாற்றங்களைக் கொண்டு வருவதற்கும் தவறிவிட்டன. அத்தோடு அவையாவும் நாட்டிற்குச் சுமையாக மாறிவிட்டது மட்டுமல்ல ஒட்டுண்ணிகளாகவும் அமைந்துவிட்டன.

மாகாணசபைகள் ஒழிக்கப்பட்டு அதிகாரப் பகிர்வுக்கான மாற்றுவழிகள் கண்டுபிடிக்கப்படல் வேண்டும். அனைத்து மக்களும் தமது மனப்பான்மையை மாற்றிக்கொண்டு யோசித்தால் சகலரையும் திருப்தி செய்யும் செலவில்லாத மாற்றீடான ஓர் முறைமையினைத் தமது புதிய எண்ணக்கருக்களின் மூலமாக ஆக்கிக் கொள்ள முடியும்.

சிறீலங்கா மீதான மேற்கத்தைய கருத்துக்களும் அமைப்புகளின் ஆதிக்கமும் இலங்கையின் ஒழுக்கம் தொடர்பான உரிமைக்கு மாசு ஏற்படுத்தி விட்டன. அரசியலமைப்பு நாட்டிற்குப் பயனேதும் அளிக்காத சில நிலைமைகளை உருவாக்கிவிட்டது.

அத்தியாவசியத் தேவைகளாக விளங்கும் தேசிய ஒற்றுமை, நல்லாட்சி இவை இரண்டும் அற்றே இல்லாமற் போனமையே முக்கியமான காரணிகளாகும். உண்மையைக் கூறின் தற்போதுள்ள அரசியலமைப்பின் மூலம் இவற்றினைப் பெறவே முடியாது. தற்போதுள்ள அரசியலமைப்பை அமுலாக்கும் போதினில் தான் அதிலுள்ள சில பலவீனங்கள், குறைபாடுகள், தவறுகள் என்பன வெளிச்சத்திற்கு வந்துள்ளன.

எனவே, உண்மையில் எமது மிகமிக அவசரமானதும் அவசியமானதுமான தேவை யாதெனில் விரைவாகவும் பாரபட்சமற்ற ரீதியிலும் தற்போதுள்ள அரசியலமைப்பில் உள்ள குறைபாடுகள் மற்றும் பின்னடைவுகள் குறித்து நன்காராய்ந்து நல்லதோர் அரசியலமைப்பை உருவாக்கி உருவமைப்புச் செய்தலேயாகும்.


அவுஸ்திரேலியா
5 வருட குடும்ப விசா

(பிறைவேட்) லிமிட்டெட்
(PV87703)

தற்போது கொழும்பில்...
தொலைபேசி: 021 22...
Web: www...
தொலைபேசி: 0112360185, 0778436553
115A, ... வீதி, ...
தொலைபேசி: 021 2285544




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோல் நோய்களைக் குணப்படுத்தும் முள்ளங்கி

முள்ளங்கிக் கிழங்கின் இலை, கிழங்கு, விதை முதலியவை மருத்துவத்தன்மை நிறைந்தவை. பசியைத் தூண்டும் இயல்புடையவை. இவற்றை உட்கொண்டால் உடல் முழுவதும் சுத்தமான இரத்தம் எப்போதும் பாய்ந்தோடிக் கொண்டிருக்கும். இந்த இரு குணங்களுக்காகவே முள்ளங்கிக்கிழங்கை உலகம் முழுவதும் விரும்பிச் சாப்பிடுகிறார்கள்.

சுத்தமான இரத்தத்தால் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கிறது. இதனால் தொடர்ந்து உடல் நலப் பாதுகாப்புடன் வாழ முடிகிறது.

மலச்சிக்கல், இரைப்பைக் கோளாறுகள், நெஞ்சுவலி, சிறுநீரகம் சம்பந்தப்பட்ட நோய்கள், மூலக்கடுப்பு, மஞ்சள் காமாலை, முகம் கருப்பாக மாறுதல் போன்றவைகளை யும் முள்ளங்கிக்கிழங்கும், அதன் இலைகளும் நன்கு குணப்படுத்திவிடுகின்றன.

மேற்கு ஆசியாவைத் தாயகமாகக் கொண்ட முள்ளங்கிக்கிழங்கின் தாவர விஞ்ஞானப் பெயர், ராபனஸ் சாட்டிவஸ் என்பதாகும்.


பண்டைக்காலத்தில் எகிப்து, கிரீஸ், ரோம் போன்ற நாடுகளில் முள்ளங்கி அதிகம் பயிர் செய்யப்பட்டுள்ளது. தற்போது இந்தியா உட்பட உலகில் உள்ள வெப்பமண்டலப் பிரதேச நாடுகள் அனைத்திலும் முள்ளங்கிக் கிழங்கு நன்கு பயிர்செய்யப்படுகிறது.

100 கிராம் முள்ளங்கிக் கிழங்கில் ஈரப்பதம் 9.4%ம் மாவுச்சத்து, 3%ம் உள்ளன. மீதியில் சிறிதளவு புரதம், கொழுப்பு, தாது உப்புகள், நார்ச்சத்து முதலியவை உள்ளன. விட்டமின் சி, விட்டமின் பி கொம்ப்ளக்ஸ் ஆகியவற்றுடன் இரும்புச்சத்தும் (0.4 மில்லி கிராம்), கல்சியமும் (35 மில்லி கிராம்), பொஸ்பரஸும்(22 மில்லிகிராம்) இருக்கின்றன. இதனால் கிழங்கைப் பச்சையாகவோ சாறாகவோ உணவில் சேர்த்துக்கொண்டால் நன்மைகள் அதிகம் கிடைக்கும். 100 கிராம் கிழங்கில் கிடைக்கும் கலோரி அளவு 17தான். சாப்பிட்டவுடன் செரிமானம் ஆகவும் முள்ளங்கிக்கிழங்கு சாப்பிடுவது நல்லது.

மூலநோய் குணமாகக் காலையும், மாலையும் 50 முதல் 100 மில்லி வரை முள்ளங்கிக் கிழங்கின் சாறு அருந்திவர, மூலம் கட்டுப்படும்.

ஒரு கப் முள்ளங்கிக் கீரைச் சாற்றை அருந்தினால் சிறுநீர் கழிக்கும்போது ஏற்படும் எரிச்சல் உட்பட அனைத்துச் சிறுநீரகக் கோளாறுகளும் குணமாகும். குணமாகும் வரை தினமும் ஒரு கப் அருந்தி வர வேண்டும்.

மஞ்சள் காமாலை உடனே கட்டுப்பட முள்ளங்கிக் கீரையின் சாற்றை மெல்லிய வெள்ளைத் துணியில் வடிகட்டி, அதில் சிறிதளவு சர்க்கரை சேர்த்து அருந்த வேண்டும். வயதானவர்கள் தினமும் அரைக்கிலோ முள்ளங்கிக் கீரையைச் சேகரித்து இந்த முறையில் அருந்தினால் மிக விரைவில் மஞ்சள் காமாலை நோயிலிருந்து குணமாகிவிடுவார்கள்.



இருமல், நெஞ்சு சம்பந்தமான நோய்கள் (இதயவலி) வயிற்று உப்புசம் தொண்டைப்புண், தொண்டைக்கட்டு முதலியவை குணமாக ஒரு தேக்கரண்டி முள்ளங்கிக் கிழங்குச் சாறுடன் அதே அளவு தேனையும் கலந்து சாப்பிட வேண்டும். சிறிது உப்பும் இதில் சேர்க்கப்படவேண்டும். தினசரி மூன்று வேளை இது போல் சாப்பிட்டால் மேற்கண்ட கோளாறுகள் குணமாகும். இது மிக உயர்தரமான நன்மையைத் தரும் மருத்துவமுறையாகும்.

தோலில் வெண்புள்ளி உள்ளவர்கள் முப்பது முதல் ஐம்பது கிராம் வரை முள்ளங்கி விதையை இடித்து, வினிகர் மூலம் பசையாக்கி, வெண்புள்ளி உள்ள இடங்களில் தடவ வேண்டும். தொடர்ந்து தினசரி தடவினால் இந்த விதைப் பசை தோலின் நிறத்தை மாற்றி பழைய நிலைக்குக் கொண்டு வந்துவிடும்.

படர்தாமரை நோய், முகத்தில் உள்ள கரும்புள்ளிகள், தவிட்டு நிறமுள்ள புள்ளிகள், எண்ணெய் வடிதல் ஆகியவற்றின் மீதும் முள்ளங்கி விதைப்பசையைத் தடவினால் குணமாகும். முள்ளங்கி விதையில் ஒரு வகையான பிளீச்சிங் பொருள் இருக்கிறது. அதுவே, தோல் தொடர்பான நோய்களையும் குணமாக்குகிறது.

முள்ளங்கிக் கிழங்கையும், கீரையையும் அடிக்கடி உணவில் சேர்த்துக்கொண்டால் ஆரோக்கியமான உடல் நலத்துடன் திகழலாம் என்பது நிச்சயம்.

முள்ளங்கிக் கிழங்கைச் சமைத்துச் சாப்பிட்டால் விட்டமின்களும், தாது உப்புகளும் அழிந்துவிடுவதுடன் நோய் எதிர்ப்பு பாக்டீரியாக்களும் கூடவே சிதைந்துபோய் விடுகின்றன.

எனவே, பச்சையான முள்ளங்கித் துண்டுகளுடன் காரட், பீட்ரூட் துண்டுகளையும் கலந்து, அவற்றில் எலுமிச்சைச் சாற்றைப் பிழிந்து, உப்பு சேர்த்து, சாலட் போல் சாப்பிட்டால் உடலுக்கு அதிக அளவு ஆரோக்கியம் கிடைக்கும்.

இதே போல், முள்ளங்கிக் கீரையையும் சமைக்காமல், சிறு துண்டுகளாக நறுக்கிப் பச்சையாகச் சாப்பிட வேண்டும். அல்லது மேற்கண்ட சாலட் (Salad)டில் சேர்த்துக் கொள்ளலாம். கிழங்கைவிடக் கீரையில் கால்சியம், பாஸ்பரஸ், வைட்டமின் சி முதலியவை அதிகம் உள்ளன. 100 கிராம் கீரையில் கிடைக்கும் கலோரி அளவு 28 ஆகும்.

எனவே, கீரையையும், கிழங்கையும் பச்சையாகவே பயன்படுத்துங்கள். அதன் மூலம் அதிக நன்மைகளைப் பெறுங்கள்.

சிறுநீர் நன்கு கழியவும், எரிச்சல் நீங்கவும் சிறுநீரில் கற்கள் சேராமல் இருக்கவும் முள்ளங்கிச் சாம்பார் செய்து சாப்பிடலாம். (துண்டுகள், பெரியனவாக வெட்ட வேண்டும்)

வெள்ளை, சிவப்பு ஆகிய நிறங்களில் தான் முள்ளங்கிக்கிழங்கு கிடைக்கிறது. மற்ற நிறங்களிலும் சில இடங்களில் பயிராகிறது.

இருவகை முள்ளங்கியிலும் மருத்துவக் குணங்கள் ஒரே மாதிரிதான் உள்ளன. நன்கு சாப்பிட்ட திருப்தி வேண்டும் என்பவர்களும், தாம்பத்திய வாழ்வில் அதிக ஈடுபாடு வேண்டும் என்பவர்களும் மட்டும் சிவப்பு முள்ளங்கிக் கிழங்கை அதிகமாகப் பயன்படுத்துங்கள்.

குழந்தைகள் மந்தபுத்தி இல்லாமல் சுறுசுறுப்பாய் இருந்து படிக்கவும், நன்கு உடலுறுதியுடன் வளரவும் முள்ளங்கிக் கிழங்குடன் முள்ளங்கிக்கீரையையும் அடிக்கடி உணவில் சேருங்கள். காரணம், கீரையில் பொஸ்பரஸ், சுண்ணாம்புச்சத்தும் அதிக அளவில் உள்ளன.

வாத நோய்க்காரர்கள் முள்ளங்கிக்கிழங்கைச் சாப்பிடலாம். ஆனால், முள்ளங்கிக் கீரையைச் சாப்பிடக் கூடாது.


# கண்களிலும் புற்றுநோய் வரும்

உடலில் எந்த ஒரு பகுதியிலும் புற்று நோய் வரும். ஏன், கண்களில் கூட புற்று நோய் வரும் என்கின்றனர் கண் மருத்துவர்கள்.

புற்றுநோய் வருவதற்கு பல காரணங்கள் உள்ளன. கண்களில் புற்று நோய் ஏற்பட முக்கிய காரணம் பரம்பரை. மற்றொன்று மரபணு மாற்றம் என்று சொல்லலாம். கண்களில் ஏற்படும் புற்றுநோய் ரெடினோ பிளாஸ்டோமா என்று கூறப்படுகின்றது..

இது பெரும்பாலும் சின்னக் குழந்தைகளைப் பாதிக்கும். இவர்களின் கருவிழியில் வெள்ளைப் படலம் படர்ந்து, இரவில் மிருகங்களின் கண்கள் ஒளிர்வது போல் இருக்கும். மாறுகண் பாதிப்பு இருப்பது போல் தோற்றமளிக்கும்.

சில குழந்தைகளுக்கு கண்கள் சிவப்பாக இருக்கும். இந்த புற்றுநோய் மிகவும் ஆபத்தானது. கண்களில் வரும் இந்த புற்றுநோய் குறித்து கவனிக்காமல் இருந்தால், நாள்பட அது மற்ற உறுப்புகளையும் பாதித்து, கண் பார்வையை முற்றிலும் இழக்க நேரிடும்.



இதனை மூன்று வழி முறைகளில் குணப்படுத்தலாம்.

அறுவை சிகிச்சை மூலம் புற்றுநோய்க் கட்டியை அகற்றுவதனால் சில சமயம் கண் பார்வை இழக்கும் அபாயம் உள்ளது.

இன்ட்ரா ஆட்ரியல் கீமோ தெரபி மூலம் கண்பார்வைக்குப் பாதிப்பு இல்லாமல் புற்றுநோயைக் குணப்படுத்த முடியும். இன்ட்ரா கீமோதெரபியில், லேசர் கதிர்கள் கண்களுக்கு வெளியே செலுத்தப்படுகின்றது. அது புற்று நோய் கட்டியில் ஊடுருவி சென்று அதனை அழிக்கும்.

அடுத்து பிராகி தெரபி: கண்களுக்கு மேல் சின்ன வட்டமான பிளேட் வைத்து அதன் வழியாக கண்களுக்கு செலுத்தப்படுகிறது. இது புற்றுநோய் கட்டியை மட்டும் தாக்கும். முகத்தில் மற்ற பாகங்களை பாதிக்காது. அதே சமயம் கண் பார்வையும் காப்பாற்ற முடியும்.


இந்த நோய் குழந்தைகளுக்கு மட்டுமல்லாமல் பெரியவர்களையும் பாதிக்கும். பெரியவர்களைப் பொறுத்தவரை, நாற்பது வயதுக்கு மேல் இந்த பாதிப்பு ஏற்படும். 'மெலனோமா' புற்றுநோய் என்று அழைக்கப்படும் இந்த நோயின் பாதிப்பு கருவிழி முழுதும் வெள்ளை படலம் படர்ந்து இருக்கும்.

பார்வை குறைவது மட்டும் இல்லாமல் பக்கவாட்டில் உள்ள பொருட்களை பார்க்கும் திறனும் குறையும். இவர்களுக்கு பிராகி தெரபி சிகிச்சை மூலம் புற்றுநோயை குணப்படுத்தலாம் என்கின்றனர் மருத்துவர்கள்.

# நலம் தரும் ஜாதிக்காய்

ஜாதிக்காயை சந்தனத்துடன் அரைத்து பருக்கள் மீதும், முகத்தில் உள்ள கரும் தழும்புகள் மீதும் பூசிவந்தால் அது நாளடைவில் மறையும்; முகம் பொலிவடையும் என்று கூறுகிறது சித்த மருத்துவம். ஜாதிக்காயினை அரைத்து தயாரித்த பசை தேமல், படை போன்ற தோல் வியாதிகளில் பயன்படுத்தப்படுகிறது.

அம்மை நோயின் போது ஜாதிக்காய், சீரகம், சுக்கு போன்றவற்றை பொடி செய்து உணவிற்கு முன் சிறிது எடுத்துக் கொண்டு வந்தால் அம்மைக் கொப்புளங்கள் தணியும் என்று சித்த மருத்துவம் கூறுகிறது. ஜாதிக்காய் அதிகம் சாப்பிட்டால் மலச்சிக்கல் உண்டாகும் என்பதையும் கருத்தில்கொள்ள வேண்டும்.



ஜாதிக்காயின் விதை வாந்தியை தடுக்கக் கூடியது. ஜீரணத்தை தூண்டவல்லது. தசை வலியினைப் போக்குகிறது. விதையில் இருந்து எடுக்கப்படும் எண்ணெய் மூட்டுவலி பக்க வாதம் ஆகியவற்றிற்கு பயன்படுகிறது. காலரா நோயின் பொழுது ஏற்படும் தசைப் பிடிப்பு வலியினைப் போக்க மேல் பூச்சாக உதவுகிறது. ஜாதிக்காய் தூளை 200 மில்லி நீர்விட்டு காய்ச்சி 100 மில்லியாக வற்றியதும் அடிக்கடி குடிக்க கொடுத்து வர வாந்தி - பேதி நிற்கும். இதனுடைய வடிநீர் காலரா நோயாளிகளின் தண்ணீர் தாகத்தினைச் சரிப்படுத்தும். ஜாதிக்காய்த் தூளை சிறிது நீரில் போட்டு ஊற வைத்து குடித்து வந்தால் நா வறட்சி சரியாகும்.

ஜாதிக்காயின் விதைகளின் மேல் சூழ்ந்துள்ள சிவப்பு நிற திசு ஜாதிபத்ரி எனப்படுகிறது. ஜாதிக்காய் மற்றும் ஜாதிபத்ரி வயிற்றுப் போக்கு, உப்புசம், குடல் வலி, ஆகியவற்றினை போக்க உதவுகிறது. பிறந்த குழந்தைகளுக்கு வயிறு உப்புசம் ஏற்படாமல் இருக்க ஜாதிக்காய் விதையை அரைத்து குடிக்க கொடுப்பார்கள். ஜாதிக்காய், சுக்கு மற்றும் ஓமம் மூன்றின் பொடி ஜீரணத்திற்கு சிறந்த மருந்தாகும்.

ஜாதிக்காய், சீரகம், சுக்கு இவை மூன்றையும் தூளாக்கி வைத்துக் கொண்டு உணவிற்கு முன் ஓரிரு சிட்டிகை அளவு உட்கொண்டு வர, வயிற்றில் உள்ள வாயுவை நீக்கி ஜீரண சக்தி அதிகரிக்கும். ஜாதிக்காய் தூளை 2 கிராம் அளவு பாலில் கலந்து குடித்து வர பேதியை நிறுத்தும்.


ஜாதிக்காயை நீர்விட்டு உரைத்துத் தொப்புளை சுற்றிலும் பற்றுப் போட பேதி நிற்கும்.

ஜாதிக்காய், ஏலம், சுக்கு, மிளகு, திப்பிலி, இஞ்சி இவற்றை ஒன்றிரண்டாக நசுக்கி கஷாயம் வைத்து வடிகட்டி தேன் கலந்து குடித்து வர வயிற்றுப் பொருமல், செரியாமை குணமாகி நன்கு பசியெடுக்கும்.

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூடங்குளம் அணுமின் நிலையத் திறப்புக்கு ஜெயலலிதா ஒப்புதல்



## நிர்வாகத்தில் திறமையை மீண்டும் நிரூபித்தார் முதல்வர்



தமிழகத்தில் சில மாதகாலமாக எரியும் பிரச்சினையாக இருந்து வந்த கூடங்குளம் அணுமின் நிலைய விவகாரத்தில் இவ்வாரம் இறுதியான உறுதியான முடிவொன்றை எடுத்து தமிழக முதல்வர் ஜெயலலிதா தனது நிர்வாகத்திறமையை மீண்டும் ஒருமுறை நிரூபித்துக் காட்டியுள்ளார். மின்நிலையம் திறந்தால் சுற்றியுள்ள கிராமச்சூழல் வாழ்வாதாரம் பாதிக்கும் எனக்கூறி ஒருதரப்பினர் மட்டுமே போராட்டம் நடத்தினர். ஆனால் ஏழைக்கிராம மக்கள் போராட்டமாகக் காட்டப்பட்ட இப்போராட்டத்தில் பணம் சரளமாகப் புரண்டமை சந்தேகத்தை ஏற்படுத்தியது. வெளிநாட்டு உளவு நிறுவனத்தின் பின்புலத்திலேயே போராட்டம் நடப்பதாக தொடர்ந்து குற்றச்சாட்டுகள் இருந்து வந்தன. ரஷ்ய தொழில்நுட்ப உதவியுடன் தான் இந்நிலையம் உருவாக்கப்பட்டு வந்தது. எனவே, ரஷ்ய எதிர்ப்பு நாடுகளின் கைவரிசை என்ற கருத்தும் நிலவியது. தமிழகத்தின் தென் மாவட்டங்களில் கணிசமாக உள்ள கத்தோலிக்க மத குருமாரின் ஆதரவைப் போராட்டக்காரர்கள் ஆரம்பத்தில் பெற்ற போதும் மத்திய அரசு இந்த அணு உலையைத் திறப்பதில் தீவிரமாக இருந்தது. கத்தோலிக்கக் குருமாரை மத்திய அரசுப் பிரதிநிதிகள் சந்தித்து விடயத்தை விளக்கியதும் அவர்கள் பின்வாங்கினர். ஆரம்பத்தில் ஜெயலலிதா மத்திய அரசை இது விடயத்தில் கண்டித்தாலும் பிரதமர் ஜெயலலிதாவை மரியாதை வழங்கி அணுகி விடயத்தை விளக்கியிருந்தார். ஜெயலலிதாவின் கடிதம் கிடைத்த மறுநாளே மத்திய அமைச்சர் நாராயணசாமியை பிரதமர் ஜெயலலிதாவிடம் அனுப்பி கௌரவம் வழங்கினார். இதைக் கண்டு தி.மு.க தரப்பு கூட முகஞ்சுளித்தது.

இதற்கிடையே போராட்டக் குழுவிற்கு வெளிநாட்டுப் பணம் வருவதும் மத்திய அரசின் விசாரணையில் தெளிவாயிற்று. மேலும் முன்னாள் ஜனாதிபதியும் அணுவிஞ்ஞானியுமான அப்துல் கலாமின் உதவியையும் பிரதமர் நாடினார். நேர்மையானவர் எனக் கருதப்படும் கலாம் காங்கிரசின் பரம எதிரி என்றாலும் இது விடயத்தில் நாட்டு நலனே முக்கியமெனக் கருதிய கலாம் இந்த அணு உலையில் பாதிப்பில்லை எனத் தீவிர ஆராய்வின் பின் பகிரங்கச் சான்றிதழ் வழங்கினார். அப்போதே போராட்டக்காரர்கள் பாதித் தோல்வியை அடைந்துவிட்டனர் எனக் கருதப்பட்டது. இதைச் சாட்டாக வைத்து மத்திய அரசுடன் மோதல் போக்கைக் காண்பித்த ஜெயலலிதாவும் கலாம் அறிவிப்பை அடுத்து பின்வாங்கினார். எனினும் போராட்டக் குழுவின் முக்கிய உறுப்பினர்களைக் கைதுசெய்யாது ஜெயலலிதா மௌனம் காத்தார். சங்கரன் கோவில் இடைத்தேர்தலின் பின் ஜெயலலிதா சாட்டையைச் சுழற்றுவார் என்று கூறப்பட்டது. சங்கரன் கோவிலும தென்பாண்டித்தில் கூடங்குளம் அருகில் இருப்பதால் தேர்தலை முன்னிட்டு ஜெயலலிதா மௌனம் காத்தார் என்பது இன்று தெளிவாகிவிட்டது. மின்சாரத் தட்டுப்பாட்டால் முழுத்தமிழகமும் பரிதவித்து வரும் நிலையில் இந்தக் கூடங்குளம் மின்சாரம் இப்போது வரப்பிரசாதமாக வரும் எனத் தமிழகத்தில் பலதரப்பும் ஜெயலலிதாவின் நடவடிக்கையை வரவேற்றுள்ளனர். பி.ஜே.பி, காங்கிரஸ், தி.மு.க, பா.ம.க, தே.மு.தி.க, அ.தி.மு.க என சகல கட்சிகளும் அணு உலையைத் திறக்க எதிர்ப்பு தெரிவிக்காது ஆதரவே காட்டியுள்ளன. சிறிஸ்தவர் வாக்குகளை நம்பியுள்ள தி.மு.க.வும் காங்கிரஸும் கூட ஆதரவே தெரிவித்திருந்தன.

மின்சாரப் பிரச்சினை அ.தி.மு.க ஆட்சியின் குரல்வளையை நெரித்தது என்றால் மிகையில்லை. எங்கே சங்கரன் கோவிலில் மின்சாரத் தட்டுப்பாட்டால் தோற்று விடுவோமோ என ஜெயலலிதா நடுநடுங்கிக் கொண்டே காலம் கழித்து வந்தார். ஆனால் அவரது கடந்த ஆட்சிகள் போலன்றி இம்முறை "எடுத்தேன் கவிழ்த்தேன்" பாணியில் நடவாது சகல தரப்பின் கருத்தையும் நிதானமாகக் கேட்டு முடிவெடுத்துள்ளமை கவனிக்கத்தக்கது. குறிப்பாக போராட்டக் குழுவையும் வரவழைத்து அவர்கள் தரப்பு நியாயத்தையும் ஏற்கனவே கேட்டறிந்து கொண்டார். தமிழகத்தின் கட்சிகள், பத்திரிகைகள் யாவும் ஓரணியில் திரண்டதால் போராட்டக்குழுவினால் எதுவும் செய்ய இயலாது போயிற்று. இந்திய உள்விவகாரத்தில் நுழைந்து முன்னேற்றத்தைத் தடுக்க அந்நிய நாடுகள் முயல்வது புதிய விடயமல்ல. சீனா, பாகிஸ்தானுடன் மேற்கு நாடுகள் சிலவும் இதில் ஆர்வமாக உள்ளது தெளிவாகி இருக்கிறது. இந்தியாவில் அரசியல் ஸ்திரமற்றநிலை 1990 களில் ஏற்படக் காரணமாக இருந்த ராஜீவ் காந்தி கொலையில் புலிகள் இயக்கத்துக்கு அந்நிய சக்திகளும் உதவின என்று பலகாலமாகவே கூறப்பட்டுவந்தது. சந்திரா சாமி இதில் முக்கிய சதிகாரர் என்றும் கூறப்பட்டது. இது தவிர சுப்பிரமணியசாமி எந்தக்கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அக்கட்சியை வேரறுக்க எதிரணிக் கட்சிகளுடன் கைகோர்ப்பார் என நீண்ட நெடுங்காலமாகவே குற்றஞ்சாட்டப்பட்டு வந்தார். 1990 ல் வி.பி.சிங் அரசு, 1999 ல் வாஜ்பாய் அரசு என அவர் கவிழ்க்காத அரசுகளே இல்லை எனுமளவுக்கு சாமி கவிழ்ப்பதில் அசகாயசூரர் ஆவார். இவரது மனநிலையைப் புரிந்த காங்கிரசும் பிஜேபியும் இவரை அண்மைக் காலம் வரை தூரவே வைத்திருந்தன.

இதேவேளை, 3ஆவது முறை முதல்வரானதில் இருந்து ஜெயலலிதா நிர்வாகத் திறமையை அற்புதமாக வெளிக்காட்டி வருவது மற்றொரு தடவை இந்த விடயத்தின் மூலம்

> மின்சாரப் பிரச்சினை அ.தி.மு.க ஆட்சியின் குரல்வளையை நெரித்தது என்றால் மிகையில்லை. எங்கே சங்கரன் கோவிலில் மின்சாரத் தட்டுப்பாட்டால் தோற்று விடுவோமோ என ஜெயலலிதா நடுநடுங்கிக் கொண்டே காலம் கழித்து வந்தார். ஆனால் அவரது கடந்த ஆட்சிகள் போலன்றி இம்முறை எடுத்தேன் கவிழ்த்தேன் பாணியில் நடவாது சகல தரப்பின் கருத்தையும் நிதானமாகக் கேட்டு முடிவெடுத்துள்ளமை கவனிக்கத்தக்கது.

நிரூபிக்கப்பட்டுள்ளது எனலாம். சசி குடும்பத்தை வெளியேற்றியது முதல் அவரது அதிரடிகள் தொடர்கின்றன. நிர்வாகம் சம்பந்தப்பட்ட சகல கோப்புகளையும் தண்ணீர் பட்டபாடாக படித்து விட்டே முதல்வர் சட்டசபைக்கு வருகிறார் என்பது எதிர்க்கட்சிகளுக்கு அவர் தரும் அதிரடிப் பதிலடியில் தெரிகிறது. ஒரு காலத்தில் இலங்கை ஜனாதிபதி பிரேமதாஸ அதிகாலை 3 மணிக்கு எழுந்து நிர்வாக அதிகாரிகளுக்குத் தொலைபேசியில் குடைச்சல் கொடுப்பது போல ஜெயலலிதா இன்று உள்ளார். சமீபத்தில் சென்னையில் வங்கிக் கொள்ளையில் தொடர்பாக ஈடுபட்ட கொள்ளையரை 'என்கவுண்டரில்' போட்டுத் தள்ளவும் முதல்வரே உத்தரவிட்டு உள்ளார். ஆனால் பிரேமதாஸவை விட ஜெயலலிதா கல்வியறிவு கூடியவர். எனவே ஜெயலலிதாவுக்கு எந்தப் பயமும் கிடையாது. இனிவரும் வருடங்களில் அவர் காட்டில் மழைதான் போலிருக்கிறது.

அபிஷேக்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகைத் தக்கவைத்துக்கொள்ள எளிமையான வழிமுறைகள்!



அழகை விரும்பாதவர்கள் இருக்க முடியாது. அதற்காக அழகுக்கலை நிலையங்களுக்குச் செல்வது எல்லோராலும் முடியாது. அதிகமான செலவைத் தருவதாகும். ஆனால், தினசரி வீட்டில் இருந்தபடியே சில எளிய வழி முறைகள் மூலமாக உங்கள் இயற்கையான அழகைத் தக்கவைத்துக் கொள்ளலாம். இரவு படுக்கைக்குச் செல்லும் முன் ஒரு பத்து, இருபது நிமிடங்கள் இதற்கு ஒதுக்கினாலே போதுமானது.

**கண்கள்:**

முகத்திற்கு பொலிவும், வசீகர மும் சேர்ப்பவை கண்கள். சிலருக்கு அந்தக் கண்களின் புருவத்தில் தேவையான அளவிற்கு முடி இருக்காது. இதற்கு சுத்தமான விளக்கெண்ணெயை கொஞ்சமாக எடுத்து புருவ முடிகளிலும், கண் முடிகளிலும் தேய்த்து வந்தால், முடி அடர்த்தியாக வளரும். சோர்வான கண்களுக்கு, ரோஸ் வோட்டரில் நனைத்த கொட்டன் பாட், வட்டமாக வெட்டிய வெள்ளரித் துண்டு போன்றவற்றைக் கண்களின் மேல் வைத்துக்கொள்ளலாம். நன்றாகப் பொடியாக நறுக்கிய வெள்ளரித் துண்டுகளையோ அல்லது அதனுடன் கரட் சாறினைக் கலந்தோ கண்களுக்கு அடியில் தடவி வந்தால், கருவளையங்கள் மறையும்.

**உதடுகள்:**

தினமும் சிறிதளவு 'வெஸலின்' எடுத்து உங்கள் உதடுகளில் தடவி வந்தால், மென்மையாகவும், வெடிப்புகள் இல்லாமலும் இருக்கும்.

**பாதம்:**

நாள்தோறும் வேலை முடிந்து வீட்டிற்குச் சோர்வாக வருவீர்கள். வந்ததும் ஒரு பெரிய பாத்திரத்தில் நல்ல நறுமணமுள்ள குளியல் உப்பை வெதுவெதுப்பான தண்ணீரில் கலந்து, உங்கள் பாதங்களை அதில் ஒரு 10 நிமிடம் ஊற வைக்க வேண்டும். சும்மா இருப்பது போரடித்தால், நல்ல ஸ்க்ரப்பர் கொண்டு குதிகாலைத் தேய்க்கலாம். ஓரஞ்சு ஸ்டிக் கொண்டு கால் நகங்களில் படிந்துள்ள அழுக்குகளை அகற்றலாம். பின்னர், கால்களைத் தண்ணீர் அல்லது சோப்பால் நன்கு கழுவிவிட்டு, 'கோல்ட் க்ரீம்' அல்லது 'மொய்சரைசர்' போட வேண்டும். இதனால் உங்கள் பாதங்கள் மிருதுவாகவும் பளிச்சென்றும் இருக்கும்.

**முகம்:**


இரவு உறங்கச் செல்லும் முன் நாள் முழுதும் முகத்தில் படிந்துள்ள அழுக்கை அகற்றுவது முக்கியமான வேலையாக இருக்க வேண்டும். எண்ணெய் பசையுள்ள சருமத்தை 'வால்நட் ஸ்க்ரப்' கொண்டும், உலர்ந்த மற்றும் சென்சிடிவ் சருமத்தை மிருதுவான 'பேபி ஆயில்' கொண்டும் துடைக்கலாம். அவ்வாறு துடைக்கும்போது உங்கள் கைகளின் அசைவு வட்ட வாக்கில் இருக்க வேண்டும். பின்னர் குளிர்ந்த நீரில் முகத்தைக் கழுவிவிட்டு தரமான 'நைட் க்ரீம்'களை உபயோகப்படுத்த வேண்டும். எளிதான மொய்சரைசரும் உபயோகப்படுத்தலாம். இது, உங்கள் சருமத்தை மென்மையாக வைத்திருக்க உதவுகிறது. இந்த மொய்சரைசரை முகம், கைகள், கழுத்து மற்றும் கால்களுக்குக் கீழேயும் உபயோகிக்கலாம்.

**தலைமுடி:**

இரவில் எண்ணெயைத் தேய்த்து விட்டுக் காலையில் ஷாம்பு தேய்த்துக் குளித்தால் முடிக்கு கூடுதல் ஊட்டச்சத்து கிடைக்கும். ஒரு பாத்திரத்தில் தண்ணீரைக் கொதிக்க வைத்து அந்தப் பாத்திரத்தின் உள்ளே ஒரு சிறிய அளவிலான பாத்திரத்தில் எண்ணெயை (ஒலிவ் ஒயில், ஆல்மண்ட் ஒயில் அல்லது சாதாரண தேங்காய் எண்ணெய்) எடுத்துக் கொண்டு சூடுபடுத்த வேண்டும். லேசான சூடு போதுமானது. அவ்வாறு சூடான ஆயிலை உங்கள் விரல்கள் கொண்டு தலையில் மசாஜ் செய்ய வேண்டும். கால்களைப் பராமரிக்க அமரும் அந்த நேரத்தில் இதையும் செய்து முடித்தால் உங்கள் நேரம் மிச்சமாகும்.

-இந்த எளிய வழிமுறைகளை பின்பற்றினால், நீங்களும் ஒரு அழகி தான்.

## சுண்டைக்காய் பச்சடி



தேவையானவை:

பிஞ்சு சுண்டைக்காய் - 1/2 கப்
துவரம்பருப்பு - 1/2 கப்
பெரிய வெங்காயம் - ஒன்று
தக்காளி - 2
பச்சைமிளகாய் - 4
புளி - நெல்லிக்காய் அளவு
கடுகு - 1/2 தே. கரண்டி
உளுத்தம்பருப்பு - 1/2 தே. கரண்டி
சோம்பு - 1/4 தே. கரண்டி
மஞ்சள்தூள் - சிறிதளவு
பெருங்காயத்தூள் - சிறிதளவு
எண்ணெய் - தாளிக்க

செய்முறை:

துவரம் பருப்பை சிறிது பெருங்காயம், மஞ்சள்தூள் சேர்த்து வேக வைத்து எடுத்துக் கொள்ளவும். புளியை தண்ணீர் விட்டு கரைத்து வடிகட்டி வைத்துக் கொள்ளவும். வெங்காயம், தக்காளியைப் பொடியாக நறுக்கி, பச்சை மிளகாயைக் கீறி வைக்கவும்.

சுண்டைக்காயை இரண்டிரண்டாக நறுக்கவும். அல்லது அம்மியில் வைத்து தட்டிக் கொள்ளவும். வாணலியில் சிறிது எண்ணெயை காய வைத்து கடுகு, உளுத்தம்பருப்பு, சோம்பு, பெருங்காயம் போட்டுத் தாளிக்கவும்.

தொடர்ந்து வெங்காயம், பச்சைமிளகாய் சேர்த்து வதக்கவும். நன்கு வதங்கியதும் சுண்டைக்காயை சேர்த்து வதக்கி அடுப்பை மிதமான தீயில் வைத்து மூடி இரண்டு நிமிடம் வேக விடவும்.

சுண்டைக்காய் வெந்ததும், தக்காளி, உப்பு, புளித்தண்ணீர் சேர்த்து கொதிக்க விடவும். பச்சை வாசனை போனதும் வெந்த துவரம் பருப்பைச் சேர்த்து ஐந்து நிமிடங்கள் கொதிக்க விடவும். பச்சடி ரெடி.

# உங்கள் குழந்தைகளை இலகுவாக வழிக்குக் கொண்டு வரவேண்டுமா?

மகளிர் சுடர்

டிவி பார்க்க வேண்டாம் என்று சொல்லி முடிப்பதற்குள் ரிமோட்டை கையில் எடுத்துவிடுவார்கள். அப்படி ஜைத் திறக்க வேண்டாம் என்றால் அதைத்தான் செய்வேன் என்று அடம்பிடிக்கிறார்கள். தண்ணீரில் விளையாடாதே, சளி பிடிக்கும் என்று எவ்வளவு தான் சொன்னாலும் காதே கேட்காத மாதிரி தண்ணீரில் விளையாடுகிறார்கள். அதைச் செய்யாதே என்று சொன்னாலும் அதைத்தான் செய்யவேண்டும் என்று அடம்பிடிக்கிறார்கள் குழந்தைகள்.



இவர்களை எப்படி வழிக்குக் கொண்டுவருவது என்றே தெரியவில்லை - பெரும்பாலான பெற்றோரின் புலம்பல் இதுதான். இந்தப் புலம்பல்களுக்குத் தீர்வு என்ன?

ஒரு பொருளை மூடிவைத்திருந்தால் உள்ளே என்ன இருக்கிறது என்று பார்க்கும் ஆர்வம் எழுவது எப்படி இயல்பானதோ, அதேபோலத்தான் செய்யாதே என்று சொல்வதை செய்துபார்க்க நினைப்பதும், குழந்தைகளுக்கு மட்டுமல்ல, பெரியவர்களுக்கும் இதே மனநிலை இருக்கும். நீங்கள் செய்யாதே என்று சொல்லியும் உங்கள் குழந்தை அதைச் செய்கிறது என்றால், நீங்கள் சொல்லும் முறையில் மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும். அதைச் செய்யாதே... இதைத் தொடாதே என்று மிரட்டி அதிரும்படி கத்தக் கூடாது. சொல்வதை மீறி இப்படிச் செய்தால் என்ன செய்வேன் தெரியுமா? என்று மிரட்டவும் கூடாது. குழந்தைகளை எப்போதுமே இதுபோல எதிர்மறையாக அணுகுவதைத் தவிர்ப்பது நல்லது. இப்படிப் பேசினால் அவர்கள் எரிச்சல் அடைவார்கள். அதற்காகவே உங்கள் வார்த்தையை மீறி, நீங்கள் வேண்டாம் என்று சொன்னதைச் செய்துகாட்ட நினைப்பார்கள்.

உங்கள் அதிரடி அணுகுமுறையைக் கொஞ்சம் மாற்றி, இதமாக எடுத்துச் சொல்லிப் பாருங்களேன். வேண்டாத, [illegible] தீங்குதரக்கூடிய செயல்களை [illegible] செய்தால் ஆபத்து [illegible] எனக் குழந்தையைக் கூப்பிட்டு அதை [illegible] செய்யக்கூடாது [illegible] என்று சொன்னால் அதற்குக் கிடைக்கும் [illegible] அதையும் மீறி குழந்தை செய்தால் 'நீ இப்படி செய்தால் இப்படி [illegible]' என்று அந்தச் செயலால் ஏற்படும் பின் விளைவுகளை பற்றி எடுத்துச் சொல்ல வேண்டும். தேவைப்பட்டால் உங்கள் கருணையைச் சேர்த்து அவர்களை [illegible] இப்படிச் சொல்லும்போது நீங்கள் அந்த இடத்தில் இருந்தால் [illegible]

செயலைச் செய்ய குழந்தை யோசிக்கும். இதுதான் உங்கள் வெற்றி!


பலமுறை எடுத்துச் சொல்லியும் மசியாத குழந்தைகளை என்ன செய்வது? வேறு வழியே இல்லை, அவர்கள் வழிக்கு நீங்கள் செல்ல வேண்டியதுதான். தேவையற்ற செயல்களில் குழந்தைகள் ஈடுபடும் போது அவர்களுக்கு ஆர்வமான விளையாட்டுகளைப் பற்றிப் பேசி அவர்களது கவனத்தை திசை திருப்பலாம். உதாரணமாக, படிக்கிற நேரத்தில் விளையாடக் கூடாது என்று கண்டிப்பு காட்டாமல், படித்து முடித்துவிட்டால் அடுத்து என்ன புது விளையாட்டு விளையாடலாம் என்று குழந்தையிடமே ஆலோசனை செய்தால், குழந்தை உற்சாகமாகப் படிக்கத் துவங்கிவிடும். தவிர, எப்போதும் படிப்பைப் பற்றி மட்டுமே அவர்களிடம் பேசிக்கொண்டிருந்தால், படிப்பின் மீதே வெறுப்பு வந்துவிடும். இதைவிட படிப்பதால் கிடைக்கும் பலன்களையும் அதனால் அவர்களுக்குக் கிடைக்க இருக்கும் பெருமையையும் எடுத்துச் சொல்லலாம். 'நீ நல்லா படிச்சாதான் புதுப் புது விளையாட்டுகளைப் புரிந்துகொள்ள முடியும். அதற்கும் அறிவு வேண்டும் இல்லையா?' என்று சொன்னால் எந்தக் குழந்தைதான் படிப்பை வெறுக்கும்?

குழந்தைகள் எப்போதும் பெற்றோரின் மன நிலைக்கு வரமாட்டார்கள். பெற்றோர்தான் குழந்தைகளின் மனநிலைக்கு இறங்கிப்போக வேண்டும். அவர்களை அவர்கள் போக்கில் விட்டுத்தான் நம் வழிக்குக் கொண்டுவர வேண்டும். அப்பா, அம்மா சொல்வது நம் நல்லதுக்குத்தான் என்ற நம்பிக்கையை குழந்தைகளுக்கு ஏற்படுத்த வேண்டும். அதற்கு குழந்தைகள் உலகத்துக்குள் நாம் செல்ல வேண்டும். அவர்கள் சொல்வதைக் காது கொடுத்துக் கேட்க வேண்டும். அவர்களுக்குப் பிடித்த விஷயங்கள் குறித்துப் பேச வேண்டும். இதே வழியில் சொல்லுதென்றால், அவர்களை நண்பர்களாக அணுக வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுத இறக்குமதி

*சீனாவைப் பின்னுக்குத் தள்ளி இந்தியா இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது*



உலகில் மிக அதிக அளவில் ஆயுதங்கள் இறக்குமதி செய்வதில் சீனாவைப் பின்னுக்குத் தள்ளி, இந்தியா இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது. மூன்றாவது இடத்தில், பாகிஸ்தானும், சீனாவும் உள்ளன.

சுவீடன் நாட்டின் தலைநகரான ஸ்டாக்ஹோமில் இயங்கி வரும், ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம் (எஸ்.ஐ.பி.ஆர்.ஐ.) இது குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

ஆயுத இறக்குமதியில் தென் கொரியா முதலிடத்தில் உள்ளது. இந்தியா இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது. கடந்த 2007 முதல் 2011ஆம் ஆண்டு வரையிலான கால கட்டத்தில், முக்கிய பெரிய ஆயுதங்களை இறக்குமதி செய்வதை, இந்தியா 38 சதவீதம் அதிகரித்துள்ளது. அதே நேரம் மூன்றாம் இடத்தில் உள்ள சீனாவும், மூன்றாம் இடத்தில் உள்ள பாகிஸ்தானும், 5 சதவீதம் அளவிற்கு மட்டுமே தங்கள் ஆயுத இறக்குமதியை அதிகரித்துள்ளன.

இதே காலகட்டத்தில் பாகிஸ்தான், சீனாவிடம் இருந்து 50 ஜேஎப்-17 ரக போர் விமானங்களையும், எப் -16 ரக போர் விமானங்களையும் அமெரிக்காவிடம் இருந்து கணிசமான அளவில் வாங்கியுள்ளது. கடந்த 2006-07 காலகட்டத்தில், ஆயுத இறக்குமதியில், சீனா இரண்டாம் இடத்தில் இருந்தது. தற்போது மூன்றாம் இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது.

ஆயுத ஏற்றுமதி செய்யும் உலகின் முன்னணி நாடுகளான அமெரிக்கா, ரஷ்யா, ஜெர்மனி, பிரான்ஸ் மற்றும் பிரிட்டன் ஆகியவற்றின் வரிசையில் ஆறாவதாக சீனா இடம் பெற்றுள்ளது.

தற்போது சீனாவின் ஆயுத ஏற்றுமதி அதிகரித்துள்ளதற்கு காரணம், அந்நாட்டிடம் இருந்து பாகிஸ்தான் அதிக அளவில் ஆயுதம் இறக்குமதி செய்வதுதான். அடுத்த 15 ஆண்டுகளில், ஆயுதங்களுக்காக இந்தியா 100 பில்லியன் டாலர் செலவழிக்கும் எனத் தெரிகிறது.



## இங்கிலாந்தில் கார்களை கழுவினால்.....

ஹோஸ் பைப் வைத்து தோட்டத்துக்கு தண்ணீர் பாய்ச்சுபவர்கள், வண்டி கழுவுபவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும் என இங்கிலாந்து அரசு அறிவித்துள்ளது.

இங்கிலாந்தில் கடந்த 124 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு கடுமையான வறட்சி ஏற்பட்டுள்ளது. நீர் நிலைகள் வறண்டு, நிலம் காய்ந்து வருகிறது. நீர்மட்டம் குறைந்து வருகிறது. தண்ணீர் தட்டுப்பாடு மற்றும் வறட்சியை கட்டுப்படுத்த கடும் நடவடிக்கைகளை உடனே எடுக்குமாறு அரசு துறைகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இதுபற்றி நீர் மற்றும் சுற்றுச்சூழல் நிர்வாக நிறுவனத்தின் இயக்குனர் ஜஸ்டின் டாபர்ஹம் கூறியதாவது:

பிரிட்டன் முழுவதும் சுமார் 2.2 கோடி வீடுகளுக்கு 7 நிறுவனங்கள் மூலம் தண்ணீர் விநியோகிக்கப்படுகிறது.

வரலாறு காணாத வறட்சி நிலவுவதால் பிரிட்டன் முழுவதும் தண்ணீருக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, முதல் கட்டமாக வீடுகளில் ஹோஸ் பைப் பயன்படுத்தி தோட்டத்துக்கு தண்ணீர் ஊற்றவும், வாகனங்கள் கழுவவும் தடை விதிக்கப்படுகிறது.

மேலும் இந்த தடை உத்தரவு ஏப்ரல் 5 ஆம் திகதி அமுலுக்கு வரும். இந்த அரசு உத்தரவை மீறி தண்ணீரை வீணாக்குபவர்களுக்கு ரூ.50 ஆயிரம் அபராதம் விதிக்கப்படும். தட்டுப்பாடு அதிகரித்தால் தொழில்களிலும் இத்தடை கொண்டு வரப்படும் என்று கூறியுள்ளார்.

## அழகுக்காக ஆண்டுக்கு ரூ 72 லட்சம் செலவழிக்கும் 43 வயது நடிகை!

*பிரபல ஹாலிவுட் நடிகை ஜெனிபர் அனிஸ்டன் தன் அழகைப் பாதுகாக்க மட்டும் ஆண்டுக்கு ரூ 72 லட்சம் செலவழிக்கிறாராம்.*

*43 வயதாகும் ஜெனிபர் அனிஸ்டன் இப்போதும் கூட ரசிகர்களின் விருப்ப நாயகியாக உலா வருகிறார். இதுமட்டுமின்றி உலகின் சிறந்த துண்டும் கவர்ச்சிகரமான பெண் (Hottest woman of all time) என்ற பட்டத்தையும் அவர் சமீபத்தில் பெற்றார்.*

*அவரது அழகு மற்றும் கவர்ச்சியின் ரகசியம் என்ன என்பதற்கு வெளியான இணையதளம் விடையளித்துள்ளது.*

*இவர் அழகு மருத்துவத்துக்கு மட்டும் ஆண்டுதோறும் சுமார் ரூ.72 லட்சம் (90 ஆயிரம் பவுண்ட்) செலவு செய்கிறாராம். கிட்டத்தட்ட தினமும் அதற்காக ரூ.20 ஆயிரம் செலவழிக்கிறார். யோகா பயிற்சிக்கு ரூ.48 ஆயிரமும், கூந்தல் அலங்காரத்துக்கு ரூ.46 ஆயிரமும் செலவு செய்கிறாராம்.*



## 200 அடி உயரத்தில் கயிற்றின் மீது நடக்கும் அதிசய இளைஞர்

28 வயதுடைய ஜூனிகி மிக் என்ற இளைஞர் தரை மட்டத்திலிருந்து 200 அடிகள் உயரத்தில் உள்ள கயிற்றின் மீது நடந்து சாதித்துள்ளார். இந்த அதிசய சம்பவமானது மொனாகோ எனும் இடத்தில் நிகழ்ந்துள்ளது.

இதற்காக உலகின் மிகவும் ஆபத்தான பகுதியை தேர்ந்தெடுத்த இந்த இளைஞர் 60 மீற்றர்கள் நீளமான கயிற்றின் மீது இரண்டு தடவைகள் நடந்துள்ளார்.

இந்நிகழ்வு பற்றி கருத்து தெரிவித்த இளைஞர் தான் உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் திடமாக இருந்ததனால் பயமின்றி சாதிக்க முடிந்தது என்று தெரிவித்துள்ளார்.

## கவர்ச்சி நடிகை கோலிக்கு காதல் வலை

இந்திய கிரிக்கெட் வீரர் விராத் கோலியின் ஆட்டத்தை பாராட்டியுள்ள கவர்ச்சி நடிகை பூனம் பாண்டே ட்விட்டர் இணையதளத்தில் அவரை காதலிப்பதாக தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் துணை கேப்டன் விராத் கோலி. அதிரடியாக விளையாடும் இளம்வீரரான இவர், ஆசியக் கோப்பையில் பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் 183 ஓட்டங்களை குவித்து அணியின் வெற்றிக்கு வித்திட்டார்.

இதனையடுத்து விராத் கோலியின் சிறப்பான ஆட்டத்தை சகவீரர்களும், முன்னாள் வீரர்களும் பாராட்டினர். அதேபோல கவர்ச்சி மாடல் அழகியும், கிரிக்கெட் ரசிகையுமான பூனம் பாண்டேயும் அவரை பாராட்டி ட்விட்டர் இணையதளத்தில் கருத்து வெளியிட்டுள்ளார்.

இது குறித்து பூனம் பாண்டே ட்விட்டர் இணையதளத்தில் வெளியிட்டுள்ள செய்தியில் கூறியிருப்பதாவது,

என்ன அருமையான ஆட்டம் விராத். நான் உன்னை காதலிக்கிறேன். சிறப்பாக ஆடும் உங்களின் உணர்வுகளை (நான்) அதிகமாக பாராட்டுவதில்லை. ஆனால் இன்று நீங்கள் ஆடிய ஆட்டம் மூலம் நாங்கள் பெருமைப்படுகிறோம். இந்த சிறப்பான ஆட்டத்தை நாங்கள் எப்போதும் நினைவில் வைத்திருப்போம். பாகிஸ்தான் பந்துகளை துவம்சம் செய்த கோலி உள்ளார். அவர் ஒரு ரத்தினம், என்று கருத்து வெளியிட்டுள்ளார்.

கடந்த ஆண்டு நடைபெற்ற உலக கோப்பையில் இந்தியா கோப்பையை வென்றால், முழு நிர்வாணமாக மைதானத்தில் ஓடுவதாக பூனம் பாண்டே அறிவித்து இருந்தார். இதன் மூலம் பரபரப்பாக பேசப்பட்ட பூனம் பாண்டே, இந்தியா கோப்பையை வென்ற போது பூசி மெழுகி, முழுமை கடைசி வரை நிர்வாண தரிசனம் தராமல் எஸ்கேப் ஆகிவிட்டார். இருந்தாலும் தற்போது தனது இணையதளம் மூலமாக அவ்வப்போது கவர்ச்சிப் படங்களையும், வீடியோக்களையும் வெளியிட்டு தொடர்ந்து பரபரப்படுத்தி வருகிறார். தற்போது கோலியை காதலிப்பதாக கூறியுள்ளார்.




## சந்தோசவானில் சிறகடிக்க....

காலை நேரத்தில் அவசரமாக கிளம்புவதும், மாலையில் அயர்ச்சியாக திரும்பி வந்து உறங்கவும்தான் முடிகிறது. இதனால் இல்லற வாழ்க்கை ஒருவித வெறுமை நிரம்பியதாக மாறிவிடுகிறது. நாளடைவில் விரிசலையும் ஏற்படுத்தி விடுகிறது. இதனை தவிர்க்கவும், இல்லறத்தை உற்சாகம் மிக்கதாக மாற்றவும் ஆலோசனை கூறியுள்ளனர் உளவியல் நிபுணர்கள். படித்து பாருங்களேன்.

### குடும்பத்திற்கான நாள்

இப்பொழுதெல்லாம் 5 நாள் வேலை 2 நாள் விடுமுறை என்றாகிவிட்டது. எனவே விடுமுறை நாட்களை குடும்பத்திற்கென ரிசர்வ் செய்யுங்கள். அதில் எந்த கமிட்மெண்ட்டும் வேண்டாம். துணையுடன் அமர்ந்து பேசவும், காதலை வெளிப்படுத்தவும் அந்த நாட்களை பயன்படுத்திக்கொள்ளுங்கள். ஜாலியாக வெளியில் சென்று ஐஸ்கிரீம் சாப்பிடலாம், திரைப்படத்திற்கு செல்லலாம். இது உங்களின் காதல் வாழ்க்கையை உற்சாகப்படுத்தும்.

### தொலைபேசியில் உரையாடுங்கள்

என்னதான் தலை போகிற வேலையாக இருந்தாலும் மனைவி அழைத்தால் அந்த போனை எடுத்து பேசுங்கள். அதை எடுக்காமல் மிஸ் கோலாகும் பட்சத்தில் உங்கள் வாழ்க்கையும் மிஸ் ஆகும் சூழல் உருவாகும். இப்பொழுது இருக்கும் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியில் ஆயிரம் முறை ஐ லவ் யூ எஸ்எம்எஸ் அனுப்பலாம். மெயில், சாட்டிங், என ஏதாவது ஒரு விதத்தில் பணிச் சூழலுக்கு இடையே துணையுடன் உரையாடுங்கள். அது பணிச்சுமையை குறைக்க உதவும்.

### இன்ப அதிர்ச்சி

வேலைக்காக உங்கள் துணைவி பேருந்தில் சென்று வருகிறார் என்றால் அவருக்கு இன்ப அதிர்ச்சி அளிக்கும் வகையில் அலுவலகத்தில் இருந்து அவரை அழைத்து வரலாம். அவ்வப்போது வரும் வழியில் உள்ள உணவகங்களிலேயே அமர்ந்து டிபன், ஐஸ்கிரீம் என சாப்பிடுவது இருவருக்குமே உற்சாகத்தை அதிகரிக்கும். அதேபோல் கணவருக்கு பிடித்தமான ஆடைகளை அயர்ன் செய்து வைப்பது ஒருவருக்கொருவர் செய்து கொள்ளும் சின்ன உதவிகள்தான் உள்ளத்தில் காதல் உணர்வுகளை உற்சாகப்படுத்தும்.

### அன்பார்ந்த பரிசுப்பொருள்

தங்கம், வைரம் என விலை உயர்ந்த பரிசுப்பொருட்களை வாங்கி குவித்தால் தான் துணைவிக்கு பிடிக்கும் என்றில்லை. உங்களின் உணர்வுகளை, ரசனைகளை துணையுடன் பகிர்ந்துகொண்டாலே போதும் அதுவே அவருக்கு நீங்கள் தரும் பொக்கிஷ பரிசுப்பொருள். உங்களுக்கு வரும் நல்ல நகைச்சுவை துணுக்குகள், பேஸ்புக், ட்விட்டரில் உங்களுக்குக் கிடைக்கும் நல்ல படங்கள் என துணையின் மெயிலுக்கு அனுப்புங்கள். உங்களுக்கு இடையேயான காதல் அதிகரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பம்பல் பரமசிவம்




பகல் முழுக்கச் சத்தம் போட்டேன் எப்படியும் இன்றைக்கு அல்லது நாளைக்கு இடையில் பலத்த மழைபெய்யும், தாவாரத்தில் இருக்கின்ற சீமெந்துப் பக்கற்றுகளை எடுத்து மழைபடாத ஒரு இடத்தில் அடுக்குமாறு - பத்துத் தடவை சொல்லி இருப்பேன்.

ஒருத்தரும் கவனிக்கவில்லை.

இந்தக் கடுங்கோடையுக்கை எங்க மழைபெய்யப் போகுது. பேசாமல் இருங்கோ என்று எனது வாயை அடைச்சுப் போட்டுதுகள்.

விடியப்புறம் 3 மணிக்கு சோவென்று காற்றோடு மழை பிடிக்கத் தொடங்கியது. அப்பதான் அச்சச்சோ... அடடா என்று ஓடி ஓடி சீமெந்துப் பக்கற்றுகளை வீட்டுக்குள்ளை இழுக்கத் தொடங்கிச்சினம். மழையில நனைஞ்ச பாதி நனையாத பாதி - ஆக்கள் முழுத்தெப்பமா நனைஞ்சு நடுங்கிக் கொண்டு நிற்றார்கள்.

"பார்த்தியளே! நேற்றே சொன்னனான்.... இன்றைக்கு அல்லது நாளைக்கு மழை கொட்டித் தீர்க்கும் என்று.... கேட்டியளே..."

எனது தீர்க்க தரிசனத்தை வெளிக்காட்டுவதாக மேலும் ஒரு முறை, "அனுபவசாலியள் சொன்னால் கேட்க வேணும்" என்று கூறிவிட்டு படுத்துவிட்டேன்.

விடிய தேத்தண்ணி கொண்டு வந்த எனது மூன்றாவது, "அப்பா சொன்னமாதிரி இன்றைக்கு மழை வந்திட்டுது... ஒருத்தரும் எதிர்பார்க்கவில்லை. இப்படி மழை பெய்யும் என்று..." மகள் சொல்லப் புரிப்பாக இருந்தது. அப்பாவைப் பற்றி அந்தப்பிள்ளையாவது அறிந்து வைத்திருக்கிறது.

மீண்டும் கேட்டாள், "அப்பா... ஒரு ரெண்டு மூன்று நாளைக்குள்ளை மழைபெய்யும் என்பதை எறும்புகள், நேரகாலத்தோடை அறிந்து செயற்படுமாம்....." எங்கையோ வாசித்த ஞாபகம்.... "இந்தக் கழுதைகளும் மழைபெய்யப்போறதை நேர காலத்தோடை அறிந்து கொள்ளுமாம்... உண்மையா அப்பா...." என்றாள் மூன்றாவது மகள்...

"ஓமடி ஓமடி.... கழுதையள் மழை வரப்போறதை முன்னமே அறிந்து சீமெந்து பக்கற்றுக்களை வீட்டுக்கை அடுக்கச் சொல்லும்.... போ...போய் நீ உன்ரை படிப்பு அலுவலைப் பார்...." என்றேன். எனக்குக் கோபம் வந்துதென்டால் என்ன செய்வன் என்று எனக்கே தெரியிறதில்லை.

நான் கழுதை என்று ஏன் கத்தி வளைக்கச் சொல்லுவான்.

முந்தியும் உப்பிடித்தான். நான் ஒரு கதை சொல்ல சுற்றி வளைச்சுக் கொண்டு வந்து என்னிலையே முடிப்பாள்.

என்னகதை சொன்னனான் என்டால், ஒரு பிரபல வைத்தியர், மூன்று பைத்தியங்களுக்கு வைத்தியம் செய்தார். மூன்று பேருக்கும் நீண்டநாள் மருந்து கொடுத்து வந்தார். அவர்களது நோய் குறைந்துள்ளதா? பூரண சுகம் அடைந்துவிட்டார்களா? எனச் சோதிக்க முடிவு செய்தார்.

வெளிமுற்றத்திலை ஒரு கோடு கீறினார். மூன்று ஸ்ரூலைக் கொண்டு வந்து வைத்தார். மூன்று பைத்தியங்களையும் ஒவ்வொரு ஸ்ரூலிலை இருக்கச் சொன்னார்.

இருத்திப்போட்டு, இப்ப நீங்கள் சைக்கிளிலை இருக்கிறியள். நான் விசில் ஊதினதும், நீங்கள் சைக்கிள் ரேசைத் தொடங்க வேண்டும். அந்த தூரத்தில நிற்கிற பலா மரத்தைச் சுற்றிவரவேண்டும் - என்று போட்டி விதியை வைத்தியர் விளங்கப்படுத்தினார். மூன்று பைத்தியங்களும் ஸ்ரூலில் இருந்தவாறு சம்மதம் தெரிவித்தனர்.

வைத்தியர் வன், ரூ சொல்லி விசில் ஊத இரண்டு பைத்தியங்கள் ஸ்ரூலில் இருந்தவாறே - சைக்கிளின் காண்டிலைப் பிடிப்பது போல பிடித்துக் கொண்டு கால்களால் மிதிக்கத் தொடங்கினர்.

ஒருத்தர் கைக்கிளைக் கட்டிக் கொண்டு ஸ்ரூலில் இருப்பது போலவே 'ஸ்ரூலில்' இருந்தார். வைத்தியருக்குச் சந்தோசமென்ற சந்தோசம். மூன்றில் ஒன்றேனும் தன் வைத்தியத்தால் சுகப்பட்டதென்ற பெருமை. ஸ்ரூலில், சைக்கிள் ஓடாமலிருந்த பைத்தியத்தை அணுகினார் வைத்தியர். நீர் ஏன் சைக்கிள் ஓடாமல் கைகட்டிக் கொண்டு இருக்கிறீர்? என அந்த நபரிடம் கேட்டார்.

"நான் கை விட்டுவிட்டு மிக இலாவகமாக பலன்ஸ்சில சைக்கிள் ஓடுவன்" என்றது அந்தப் பைத்தியம்.

வைத்தியருக்கு ஒரு மாதிரிப் போய்விட்டது. "சரி போட்டியில கலந்து கொள்ளுற நீர் சைக்கிள் பெடலை மிதிக்காமல் - உழக்காமல், ஏன் காலை இப்படிப் போட்டுக் கொண்டு இருக்கிறீர்?" என்று வைத்தியர் கேட்டார்.

'அதோ....?....அது சைக்கிள் இறக்கத்தில போகுது அதுதான் உழக்காமல் இருக்கிறன்...' என்றது அந்தப் பைத்தியம்...

இந்தக் கதையை சும்மா பம்பலுக்காக, மனுசி பிள்ளையள் இருக்கேக்கை சொன்னன்.

சொல்லிப்போட்டு அந்தக் கதையை மறந்துபோனன்.

உப்புடித்தான் ஒரு நாள் "ஆட்டுக்குக் குழைவெட்டிப் போடாமல் படிச்சுக் கொண்டிருக்கிறாய்...அதுகள் வாயில்லாப் பிராணியள்... என்று ஏதோ தாறுமாறாப் பிள்ளையளைப் பேசினன்.

மனுசி குசினிக்கை இருந்து கொண்டு "என்னடி பிள்ளை? கொப்பர் தொண்டை கிழியக் கத்துறார்... என்ன செய்தனி?" என்று கேட்டா. அதுக்கு என்ரை மூண்டாவது சொல்லுது


"அந்தாள் இறக்கத்தில போகுது அதுதான் சத்தம் போடுது.. நீ கெதியா சமையலை முடிச்சிட்டு.. சாப்பாடு போடம்மா... பின்நேரமும் எக்ஸாம் இருக்குது" என்று அவசரப்படுத்தினாள்.

அதென்ன இறக்கத்தில போறது... நேரே சொல்லலாமே அந்தாளுக்கு விசர் நீ பேசாமல் சமையல் வேலையைப் பார் என்டு, படிச்ச பிள்ளையள் சில விசயத்தை இப்படி பக்குவமாத்தான் சொல்லுவினம். ஆனாலும் எங்களுக்குத் தெரியும் அவை என்ன சொல்ல வருகினம் என்டு...

வீட்டுலை பம்பலா ஏதாவது கதை சொல்ல வெளிக்கிட்டால் இப்படிச் சில சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டித்தான் வரும். அது எனக்கு ஒரு பாடம். அதாலை வீட்டில ஒரு பம்பலும் அடிக்கிறதில்லை.

பேப்பரில நாலுபேர் பாக்க ஒரு 'பம்பல்' தொடங்குவம் என்று பார்த்தால் அதுவும் ஒரு சிக்கலில வந்திட்டுது. அடுத்தவாரம் சொல்லுறன்.

## நவீன தொழில்நுட்பத்துடன் புதிய கமரா!



வரும் மே 10 மற்றும் 11 ஆகிய நாள்களில் பெர்லினில் நடைபெறும் கமரா கண்காட்சிக்கு லெயிக்கா நிறுவனம் தனது புதிய நவீன கமராவோடு தயாராக இருக்கிறது. அந்த கண்காட்சியில் லெயிக்கா எம்10 என்ற புதிய கமராவை அறிமுகம் செய்ய இருக்கிறது.

ஏற்கனவே வந்த லெயிக்கா எம்9 கமரா மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றது. அதுபோல் இந்த புதிய எம்10 கமராவைப் பற்றிய எதிர்பார்ப்பு நீண்ட நாள்களாக இருந்து வந்தது. இப்போது இந்த எம்10 கேமரா வரும் மே 10 இல் அறிமுகம் செய்யப்படும் என்று நம்பப்படுகிறது.

இந்த எம் 10 கமராவைப் பற்றிய அதிக தகவல்கள் வெளிவரவில்லை என்றாலும் இந்த கமரா முந்தைய எம் 9 கமராவின் மேம்படுத்தப்பட்ட கமராவாக வரும் என்று தெரிகிறது. இந்த எம் 9 கமரா உலகிலேயே மிகச் சிறிய கமரா ஆகும்.

மேலும் இது ஒரு முழுமையான ப்ரேம் இன்டர் சேன்ஜபுள் லென்ஸ் கமரா ஆகும். இந்த கமராவில் 18 மெகா பக்சல் சிசிடி சென்சார் உள்ளதால் இது எடுக்கும் படங்கள் மிகத் துல்லியமாக அதே நேரத்தில் மிகத் தெளிவாக இருக்கும். ஆனால் வரும் புதிய எம் 10 கமரா இதைவிட மேம்படுத்தப்பட்ட தொழில் நுட்பத்தைக் கொண்டிருக்கும் என்று தெரிகிறது.

இணையதளங்களில் இந்தப் புதிய எம் 10 கமராவின் படங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அதன்படி இந்த கமரா மிகவும் எளிமையாக உள்ளது. இதன் முன்பகுதியில் ப்ளாஷ் இணைக்கப்பட்டுள்ளது.

லெயிக்கா எம் 10 கமராவின் விலை இன்னும் தெரிய வில்லை. ஆனால் எம் 9 கமராவின் விலை ரூ.400000 ஆகும். இந்த விலையைவிட எம் 10இன் விலை அதிகமாக இருக்கும் என்று தெரிகிறது. வரும் மே 10இல் இந்த கமராவைப் பற்றிய அனைத்துத் தகவல்களும் வந்துவிடும் என்று நம்பப்படுகிறது.



## கூகுளின் புதிய திட்டம்

தொழில்நுட்ப உலகில் ரெக்கைகட்டி பறந்துகொண்டு இருக்கும் கூகுள் புதிய 7 இஞ்ச் நெக்ஸஸ் டேப்லட்டை வெளியிட திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது. கூகுளின் இந்த டேப்லட் வெளியானால் மற்ற டேப்லட் மார்கெட்டில் பெரிய போட்டி நிலவும் என்று நிச்சயமாக கூறலாம்.

இந்த நெக்ஸஸ் டேப்லட் குறைந்த விலை கொண்டதாக இருக்கும் என்றும் கருதப்படுகிறது. அதுவும் கிண்டில் ஃபயர் டேப்லட்டையும் விட, கூகுள் வெளியிட இருக்கும் புதிய டேப்லட் குறைந்த விலை கொண்டதாக இருக்கும். பெரிய பெரிய தொழில் நுட்பங்களை அனாயசமாக அள்ளிக் கொடுக்கும் கூகுள்,

இந்த டேப்லட் பற்றிய தொழில் நுட்ப விவரங்களை வெளியிடாமல் ரகசியம் காக்கின்ற வை போட்டி நிறு வனங்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்திறன் ளது.



## குறைந்த விலையில் ஒன்ட்ராய்ட் ஸ்மார்ட்போன்!

அதிக விலையுடைய மொபைல்களை வெளியிட்டு இருக்கும் அல்காடெல் நிறுவனம் புதிதாக 3ஜி நெட்வொர்க் வசதி கொண்ட வென்சுர் ஸ்மார்ட்போன் ஒன்றையும் வாடிக்கையாளர்களுக்கு வழங்க உள்ளது. ஸ்மார்ட்போன் என்றவுடன் அதிக விலை கொண்டதாக இருக்கும் என்று எண்ணிவிட வேண்டாம்.

இந்த ஸ்மார்ட்போன் அனைவராலும் எளிதாக வாங்கும் வகையில் இருக்கும் விலை கொண்ட ஸ்மார்ட்போன். அதிலும் சிறந்த தொழில் நுட்பத்தினைக் கொடுக்கும் ஸ்மார்ட் போன். 2.8 இஞ்ச் திரை கொண்ட இந்த ஸ்மார்ட்போன் கூகுள் ஒன்ட்ராய்ட் 2.3.5 ஜின்ஜெர்பிரெட் ஒப்பரேட்டிங் சிஸ்டத்தில் இயங்கும். இந்த இயங்குதளம் சிறப்பாக இயங்க குவல்காம் எம்எஸ்எம்- 7627 600 மெகாஹெர்ட்ஸ் பிராசஸர் பொருத்தப்பட்டுள்ளது.

அழகான புகைப்படத்தினை எடுக்க இதில் 1600 X 1200 பிக்ஸல் துல்லியத்தினை கொடுக்கும் கமராவும் உள்ளது. அற்புதமான வீடியோ, ஜியோ டேகிங், ஒப்ஷனல் சூம் போன்ற சிறப்புகளையும் இந்த கமராவின் மூலம் பெறலாம். எக்ஸ்டர்னல் ஸ்டோரேஜ் வசதியை 32ஜிபி வரை விரிவுபடுத்தி கொள்ளலாம்.

3ஜி நெட்வொர்க் வசதிக்கு சப்போர்ட் செய்யும் இந்த ஸ்மார்ட்போனில் 1,300 எம்ஏஎச் லித்தியம் அயான் ரிமூவபுல் பற்றரி பொருத்தப்பட்டுள்ளது. இந்த பற்றரி 4 மணி நேரம் டாக் டைம் மற்றும் 12.5 ஸ்டான்-பை டைமினையும் வழங்கும்.


வைபை தொழில் நுட்பத்தினை கொடுக்கும் இந்த ஸ்மார்ட்போன் டச் மற்றும் டைப் வசதியைக் கொண்டுள்ளது. இதனால் தொடு திரை வசதியோடு சேர்த்து, டைப் செய்யும் வசதியையும் சேர்த்துப் பெறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கடமைக்கா காதலுக்கா முக்கியத்துவம்?

## பித்தன் பதில்கள்



வி. ரவிந்திரன்,
ஆனைக்கோட்டை.

**கேள்வி:** காதலித்துக் கைப்பிடித்தோரும் உண்டு. காதலித்துக் கைவிட்டோரும் உண்டு. இதில் நீர் எந்த வகை பித்தரே?

**பதில்:** நான் வேறொரு வகைக்குள் அடக்கம். 'ஏகதாரவன்'

அ. பன்னீர்ச்செல்வன்,
வவுனியா.


**கேள்வி:** 'முந்திரிக்கொட்டை போன்று முந்திக் கொண்டு' என்கிறார்களே? விளக்கம் தருவீர்களா?

**பதில்:** தனக்குச் சம்பந்தமில்லாத விடயத்தில் மூக்கை நுழைப்பதைச் சுட்டிக்காட்ட மரமுந்திரிகைப் பழத்தை முந்திக்கொண்டு அதன் கொட்டை முன்னால போயிருப்பதை உதாரணக் காட்டிப் பேசுவார்கள் அது சரி மூக்கை நுழைப்பது என்பதற்கு அடுத்த வாரம் விளக்கம் கேட்பீரோ?

ம. தனுசா,
பருத்தவ்.

**கேள்வி:** பித்தரே. அன்பு புனிதமானது என்கிறார்களே அன்புக்கும் உருவம் உண்டா? என்றொரு சந்தேகம் எனக்கு...

**பதில்:** அன்பு அருவமானது. உருவத்தைப் பார்த்து பருவத்தில் வருவது அன்பு அல்ல. அது காதல் அல்லது காமம் மனதொன்றி இறைவன் மேல் அன்பு செலுத்த முன்னோர் வகுத்த வழியே உருவ வழிபாடு.



செல்லத்துரை,
வரணி.

**கேள்வி:** பித்தரே! உம்மைப்பற்றி உமக்கு என்ன தெரியும்?


**பதில்:** உண்மையைச் சொல்லுவதானால் என்னைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்பது எனக்கு எப்படியோ தெரியும். அது சரி நீரென்ன செல்லப்பா சுவாமிகள். யோகர் சுவாமிகளின் வழிவந்த சுவாமியாரா?

த. கலைச்செல்வி,
மட்டக்களப்பு.



**கேள்வி:** மழலை மொழியின் சிறப்பின் இரகசியம் என்ன?

**பதில்:** மனதில் எண்ணுவதை பரகசியமாக அப்படியே வெளிப்படுத்தும் மழலை மொழியின் இனிமையும் வெளிப்படைத்தன்மையுமே அதன் சிறப்பு. உம்மாலும் என்னாலும் முடியாதது அது.



இ. இந்திரன்,
மட்டக்களப்பு.

**கேள்வி:** பித்தரே, உமக்குப் பேய், பிசாசு குறித்து நம்பிக்கை உண்டா?


**பதில்:** அதற்குத்தான் என் மீது கொஞ்சமும் நம்பிக்கை இல்லை. (நான் என் வீட்டுக் கஷ்டத்தை யாரிடமாவது சொல்லித்தானே ஆக வேண்டும்)

வெ. தனபாலசிங்கம்,
பருத்தித்துறை.

**கேள்வி:** கடமைக்கா காதலுக்கா முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்?

**பதில்:** கடமையின் மீது காதல் கொள்வதன் மூலம் இரண்டுக்குமே முக்கியம் கொடுத்தலே சிறப்பு.

த. கனகசபை,
கொழும்பு 04.



**கேள்வி:** தலைமுறை இடைவெளி: மழுப்பலான விளக்கம் வேண்டாம்.

**பதில்:** விளங்கத் தக்கதாக விளக்கம்தர வேண்டியது எனது பொறுப்பு. அந்த வகையில் தகப்பனைக் கண்டு மகன் அஞ்சியது முந்தைய தலைமுறை. பாலனை நினைத்தே அப்பன் அஞ்சுவது இந்தத் தலைமுறை போதுமா?

## சொற்சிலம்பம் போட்டி இல: 514

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | ■ | 5 | 6 |
| 7 | | | | ■ | 8 | | |
| ■ | 9 | | | 10 | | ■ | |
| 11 | | ■ | 12 | | ■ | 13 | |
| 14 | | | ■ | 15 | 16 | | ■ |
| ■ | | ■ | 17 | | | ■ | 18 |
| 19 | | 20 | | ■ | 21 | 22 | |
| 23 | | | ■ | 24 | | | |

அனுப்புபவர் பெயர்:........................................

விலாசம்:........................................

........................................

கையொப்பம்:........................................

### மேலிருந்து கீழ்

01. எந்நேரமும்
02. கர்ணன் பிறந்தது இந்த அணிகலன் களுடனாமே!
03. ஏழு நாட்கள்
04. உழைத்துப் பெறு
05. குலம்
06. கதாநாயகனுக்கு எதிரி இவன்
08. வீடு
10. ஒரு வகைப் பாத்திரம்
11. அரைவாசி
13. பாய்
16. உணவுக் கால்வாயில் நடக்கும் தொழிற்பாடு
17. ஆணுமல்ல பெண்ணுமல்ல
18. இதுவும் ஒரு பாத்திர வகையே
19. பிரி
20. கடவுள்
22. மேல் நாட்டுக் குடிவகை

### இடமிருந்து வலம்

01. நட்பு
05. திறப்பு
07. உயிரினம் -விலங்கு அல்ல
08. சுவர்
09. உரையாடல்
11. திரவத்தன்மை கொஞ்சம் தடித்தால் வருவது
12. செல்வம்
13. மமதையின் பிறப்பிடம்
14. வீட்டின் முன்புறம் இருப்பது
15. திட்டு
17. இது பாரமானது
19. வறுமிக்கவன்
21. எடை
23. பெண்களின் தேசிய விளையாட்டுக்களில் ஒன்று.
24. ஊர்வன இன விலங்கு

### சொற்சிலம்பம் போட்டி இல. 514

சொற்சிலம்பம் 514 போட்டிக்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் திகதி 2012 ஏப்ரல் மாதம் 08ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஏப்ரல் 15ஆம் திகதிய சுடர்ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

முதலாவது பரிசாக ரூபா 250உம் இரண்டாவது பரிசாக ரூபா 150உம் மூன்றாவது பரிசாக ரூபா 100உம் வழங்கப்படும். சரியான விடைகளை அனுப்பியவர்களில் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:
சுடர் ஒளி யாழ். அலுவலகம்,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

### சொற்சிலம்பம் போட்டி இல: 511 விடைகள்

**மேலிருந்து கீழ்**

01.விவாதம், 02.ரசம், 03.சம்பவம், 04.கருமாதி, 05.முட்ட, 06.குடும்பம், 10.திருமதி, 13.மன்னவன், 14.அன்னால், 15.நாரி, 16.உதவி, 18.சன்னி, 21.சாவு

**இடமிருந்து வலம்**

01.விரசம், 04.கழுகு, 07.வாசம், 08.இருட்டு, 09.தம்பதி, 11.மாடர், 12.வருமதி, 14.அம்மன், 15.நாம், 16.உண், 17.தலைசரி, 19.தனால், 20.வன், 22.[illegible], 23.[illegible]

### போட்டி இல. 511 இல் பரிசு பெற்றோர்

**1 ஆம் பரிசு** வி. விமல்ராஜ், பாடசாலை வீதி,திருநகர் யோகபுரம், மல்லாவி.

**2 ஆம் பரிசு** கி.ருக்சனா, இளையதம்பி பெண்கள் இல்லம், உடுவில்.

**3 ஆம் பரிசு** திருமதி. உஷா கனகசுந்தரம், இல. 24/4.புளியடிலேன், மட்டக்களப்பு.

### பாராட்டுப் பெறுவோர்

(1) க.தில்லையம்பலம்,
கதிர்காம கோவிலடி,
வதிரி, கரவெட்டி.

(2) ஆ.இம்மனுவல்,
இல-85/4, மவுன்கார்மல் வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

(3) ரா.உஷாந்தினி,
குருபரன் கல்வி நிறுவனம்,
புத்தூர்.

(4) கே.இராஜகோபால்,
அடைக்கலம் தோட்டம்,
கந்தசுவாமி கோயிலடி, வட்டுக்கோட்டை.

(5) சிலுஜா தில்லையம்பலம்,
நீர்ப்பாசன விடுதி,
திருகோணமலை.

(6) ஏ.ஜே. ஜெக்ஸி,
இல.20, ஹேன் முல்லை,
கொச்சிக்கடை.

(7) திருமதி. ர.சிவஞானம்,
இல.29/2, கல்யாணி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு-06.

(8) செல்வி.இ.அர்ச்சனா,
மே/பா இரத்தினவேல்,
பெரியகல்லாறு -03,கல்லாறு.

(9) திருமதி. J. மதுந்தாதேவி,
இல.93, 2/5, பீட்டர்சன் வீதி,
கொழும்பு -06.

(10) திருமதி. சத்தியலெட்சுமி,
உமாபதிசிவம்,
பரமனயினார் கோவிலடி,
ஆரையம்பதி -01

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஐ.பி.எல் திருவிழாவுக்கு சினிமா பிரபலங்கள்

சென்னையில் நடைபெற உள்ள ஐ.பி.எல் கிரிக்கட் போட்டி தொடக்க விழாவில் பாலிவுட் நட்சத்திரங்கள் சல்மான் கான், பிரியங்கா சோப்ரா ஆகியோர் பங்கேற்க உள்ளனர்.

ஐந்தாவது ஐபிஎல் கிரிக்கட் போட்டிகள் வருகிற ஏப்ரல் 4ம் திகதி சென்னையில் தொடங்க உள்ளது. முதல் போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் - மும்பை இண்டியன்ஸ் அணிகள் மோத உள்ளன.

இதன் ஒரு பகுதியாக சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ உடற்கல்வியியல் கல்லூரியில் வருகிற ஏப்ரல் 3ம் திகதி இரவு 7.30 மணிக்குத் தொடக்க விழா நடைபெறவுள்ளது.

இதில் சர்வதேச அளவில் புகழ்பெற்ற கலைஞர்கள் பங்கேற்கும் பல்வேறு கலை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், பாலிவுட் நட்சத்திரங்கள் சல்மான் கான், பிரியங்கா சோப்ரா ஆகியோரும் பங்கேற்க உள்ளனர்.

தமிழ் மற்றும் இந்திப் பாடல்களுக்கு மேடையில் நடனமாடுகிறார் பிரபுதேவா. போட்டியில் பங்கேற்கும் 9 அணிகளின் அணித்தலைவர்களும் பங்கேற்க உள்ளனர்.

## பாரத ரத்னா விருது

சதத்தில் சதம் கண்ட சச்சினுக்கு நாட்டின் மிக உயர்ந்த பாரத ரத்னா விருது வழங்க வேண்டுமென இந்திய கிரிக்கெட் சபையின் துணைத் தலைவர் ராஜிவ் சுக்லா கூறுகின்றார்.

## ஷேன் வோர்னின் கருத்து

சதத்தில் சதம் கண்ட முன்னணி நட்சத்திர துடுப்பாட்டக்காரர் சச்சின் டெண்டுல்கருக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்த அவுஸ்திரேலிய முன்னாள் கிரிக்கெட் வீரர் ஷேன் வோர்ன் ஓய்வு குறித்து ஊடகங்கள் சர்ச்சைகளைக் கிளப்ப வேண்டாம் என்றும் கூறியுள்ளார்.

## நாடாளுமன்றில்...

சர்வதேச போட்டிகளில் 100ஆவது சதம் விளாசி சாதனை படைத்துள்ள இந்திய கிரிக்கெட் அணி வீரர் சச்சினுக்கு, நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. சபாநாயகர் இது குறித்து கூறுகையில் சச்சினின் இந்த மகத்தான சாதனை நாட்டிற்கே பெருமை சேர்த்துள்ளது இளம் வீரர்களுக்கு அவரின் சாதனை முன்மாதிரியாக இருக்கும் என்றார்.



# ஹொக்கியில் கலக்கும் இளவரசி


பிரிட்டிஷ் இளவரசியான கேட் ஹொக்கி விளையாட்டிலும் கலக்கி வருகின்றார். லண்டனில் இந்த ஆண்டு இடம்பெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளுக்காக கடுமையான ஹொக்கி பயிற்சிகள் ஒலிம்பிக் பார்க்கில் இடம்பெற்று வருகின்றன.

Marlborough கல்லூரியில் ஏற்கனவே கேட் ஹொக்கி அணிக்கு தலைமை தாங்கியவர் இவர்.

அந்த உற்சாகத்தில் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கவுள்ள வீராங்கனைகளுடன் பயிற்சியில் ஈடுபட்டார் கேட்.

கேட் ஒரு சிறந்த ஹொக்கி விளையாட்டு வீராங்கனை என்பது குறிப்பிடத்தக்கது.

# சதத்தில் சதம் அடித்த சச்சின்




## சதங்களின் விபரம்

| | | | |
|---|---|---|---|
| ஆஸ்திரேலியா | - 20 | இங்கிலாந்து | - 09 |
| நியூசிலாந்து | - 09 | மே. இந்திய தீவு | - 07 |
| இலங்கை | - 17 | தென் ஆப்ரிக்கா | - 12 |
| பாகிஸ்தான் | - 07 | வங்கதேசம் | - 06 |
| ஜிம்பாவே | - 08 | கென்யா | - 04 |
| நம்பிபீயா | - 01 | | |

100

## ஐ.சி.சி இன் மறுப்பு



ஆசியக் கோப்பைக்கான கிரிக்கெட் தொடரில் இந்தியாவுக்கு எதிரான போட்டியில் அஜ்மலின் பந்துவீச்சு கிரிக்கெட் விதிமுறைகளை மீறியதாக முன்னாள் இந்திய வீரர்கள் தெரிவித்தனர்.

இதுபற்றி ஐசிசி அதிகாரி ஹரூன் லோர்கட் கருத்துத் தெரிவிக்கையில் பந்துவீச்சில் எந்த விதிமுறை மீறலும் இல்லை என்று கூறியுள்ளார்.

## அதிக வருமானத்தில்.... கால்பந்து வீரர் மெஸ்சி



கடந்த 2011 ஆம் ஆண்டில் கால்பந்து மூலம் அதிகம் சம்பாதித்த வீரர்களின் பட் டியலில் அர்ஜென்டினா நட்சத்திர வீரர் லயோனல் மெஸ்சி 33 மில்லியன் யூரோ வருமானத்துடன் முதலிடம் பிடித்துள்ளார்.

நீண்ட காலமாக இந்த பட்டியலில் முதலிடத்தில் இருந்து வந்த இங்கிலாந்து அணியின் முன்னாள் அணித்தலைவர் டேவிட் பெக்காம் 2ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

தற்போது லாஸ் ஏஞ்சல்ஸ் கேலக்சிக்காக விளையாடி வரும் பெக்காமின் கடந்த ஆண்டு வருமானம் 31.5 மில்லியன் யூரோ ஆகும். ரியல்மாட்ரிட் நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ 29.2 மில்லியன் யூரோ வருமானத்துடன் 3ஆவது இடத்தில் உள்ளார். பார்சிலோனாவில் இருந்து ரஷ்யாவின் ஆன்ஷ்கி மக்கச்சாலே அணியில் இணைந்த சாமுவேல் ஈடோ 23.3 மில்லியன் யூரோ வருமானத்துடன் 4வது இடத்தில் உள்ளார்.

பயிற்சியாளர்கள் பட்டியலில் ரியல்மாட்ரிட்டின் ஜோஸ் மோரின்ஹோ 14.8 மில்லியன் யூரோ வருமானத்துடன் முதலிடம் பெற்றுள்ளார்.

சமீபத்தில் பாரீஸ் செயின்ட் ஜேர்மைன் அணியில் இணைந்த கார்லோ அன்சாலட்டி 13.5 மில்லியன் யூரோவுடன் 2வது இடத்திலும், பார்சிலோனா பயிற்சியாளர் பெப் கார்டியாலா 9.5 மில்லியன் யூரோ வருமானத்துடன் 3வது இடத்திலும் உள்ளனர்.

## ரைம்ஸ் நாளிதழ் புகழாரம்

நூறாவது சதம் என்ற மைல் கல்லை எட்டி விட்டதால், சச்சின் தனது துடுப்பாட்ட கையுறைகளுக்கு ஓய்வு கொடுப்பது பற்றி பரிசீலிக்கலாம் என்று சிலர் ஆலோசனை தருகின்றனர்.

இதனை ஏற்று ஓய்வுபெற்றால் உலக கிண்ணத் தொடரின்போதே சதத்தில்சதம் கண்டிருந்தால் சிறப்பாக இருந்திருக்கும் என்று வர்ணிப்பர். ஆனால் இந்த கருத்து முட்டாள்தனமானது எனவும் கூறியுள்ளது. ஏனென்றால் விளையாட்டின் மிகப் பெரிய சாதனைகள் எல்லாம் சிறப்பான தருணங்களில் நடைபெற்றது கிடையாது. உதாரணமாக கால்பந்து ஜாம்பவான் பீலே தனது 1000 ஆவது கோலை உலகக் கிண்ண இறுதிச் சுற்றில் அடிக்கவில்லை. பிரேசிலியன் லீக் போட்டியில்தான் அடித்தார்.

அதே போன்று தடைக்கு பின் மீண்டும் குத்துச்சண்டையில் களமிறங்கிய அமெரிக்காவின் முகமது அலி, சமபலம் வாய்ந்த ஜோ பரேசர் அல்லது ஜார்ஜ் போர்மெனுடன் மோதவில்லை. மாறாக பலம்குன்றிய ஜெர்ரி குவாரியுடன் தான் மோதினார் என்றும் தெரிவித்துள்ளது அமெரிக்காவின் ரைம்ஸ் சஞ்சிகை.

## இங்கிலாந்தின் டெலிகிராப்

இங்கிலாந்தின் டெலிகிராப் தனது கட்டுரையில், 100 ஆவது சதமடித் ததன் மூலம் சச்சின் கிரிக்கெட் [illegible] குறிப்பிட்டுள்ளது.

## தொடர்ந்தும் அமெரிக்காவில்...



மருத்துவமனையில் இருந்து வெளியேறிய யுவராஜ் இன்னும் 3 வாரங்களுக்கு அமெரிக்காவில் தங்கி இருந்து மருத்துவ பரிசோதனைகளில் பங்கேற்பார் என்று அவருக்கு சிகிச்சை அளித்து வரும் மருத்துவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

## கால்பந்து வீரர் மும்பாவுக்கு விசேட மரியாதை

மாரடைப்பால் மைதானத்தில் சுருண்டு விழுந்த பிரித்தானிய கால்பந்து வீரர் ஃபேப்ரிஸ் மும்பா குணமடைய வேண்டி, நட்சத்திர வீரர் ரொனோல்டோ உட்பட ரியல் மாட்ரிட் கால்பந்து அணி வீரர்கள் சிறப்பான ஆடைகளை அணிந்து விளையாடினர்.

பிரபல கால்பந்து வீரர் ஃபேப்ரிஸ் மும்பா போல்டன் வான்டரர்சின் அணிக்காக விளையாடிக் கொண்டிருக்கும் போது மாரடைப்பால் மைதானத்திலேயே சுருண்டு விழுந்தார்.

மும்பாவின் நின்று போன இதயத்தை சுமார் 2 மணி நேர போராட்டத்திற்குப் பின் வைத்தியர்கள் காப்பாற்றியதாக கூறப்படுகிறது.

மேலும் உயிருக்கு ஆபத்தான நிலையில் லண்டன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் ஃபேப்ரிஸ் மும்பா குணமடைந்து வர வேண்டும் என்று வாழ்த்தி நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ உட்பட ரியல் மாட்ரிட் அணி வீரர்களும் மற்றும் சில அணி வீரர்களும் நேற்று மும்பாவுக்காக பிரார்த்தியுங்கள் என்ற வாசகம் எழுதிய ஆடைகள் அணிந்து விளையாடினர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# நித்தியானந்தா - ரஞ்சிதா

## வீடியோ காட்சி உண்மையே...!

**தடய அறிவியல் நிபுணர் கூறுகின்றார்**

நடிகை ரஞ்சிதாவுடன் தனியறையில் இருந்த காட்சி பொய் என்று தவறானது அறிக்கை தருமாறு நித்தியானந்தாவின் சீடர்கள் தம்மை அணுகியதாக தடய அறிவியல் நிபுணர் சந்திரசேகரன் திடுக் கிட வைக்கும் குற்றச்சாட்டை கூறியுள் ளார். தடய அறிவியல் துறையில் நெடு நாள் அனுபவமும் பத்மபூஷன் விருதும் பெற்ற வருமான பி.சந்திரசேகரன், பெங்களூரில் இதனைக் கூறியுள்ளார்.

அந்த வீடியோவை தாம் ஆய்வு செய்த போது நிலையான இடத்தில் பொருத்தப்பட்ட கமெரா மூலம் எடுக்கப்பட்டது என்பதும், அதில் கிரபிக்ஸ் காட்சி தந்திரங்கள் எதுவும் செய்யப்படவில்லை என்றும் தெரியவந்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

வீடியோ வெளிவந்து மறு நாள் ஒரு தனியார் தொலைக்காட்சியில் இருந்து, அந்த செக்ஸ் வீடியோவையும், நித்தியானந்தா சொற்பொழிவு ஆற்றும் வீடியோவையும் கொடுத்து இதில் இருப்பது உண்மை தானா? நித்தியானந்தா தானா? என விஞ்ஞானப்பூர்வமாக சொல்ல முடியுமா எனக் கேட்டனர்.

அதை கம்ப்யூட்டரில் வைத்து ஆராய்ந்து பார்க்கும்போது, அது ஒரு கமெராவை நிலையான இடத்தில் பொருத்தி எடுக்கப்பட்டது தெரியவந்தது. அதில் உள்ள உருவங்கள் எல்லாம் ஆடாமல் நிலையான இடத்தில் இருந்து எடுக்கப்பட்ட வீடியோ என்றும், ஒரே ஷாட்டில் எடுக்கப்பட்ட வீடியோ என்றும் கண்டுபிடித்தேன்.

அந்த வீடியோவிலே அனிமேஷன், எடிட்டிங், மார்பிங் எல்லாம் இருக்க சாத்திய மேயில்லை. திரும்ப திரும்ப ஆராய்ந்து பார்த்ததில் அது ஒரிஜினல் வீடியோ தான். இதில் எந்த சேர்க்கையோ அல்லது விடுபட்டதற்கான தடயங்கள் இல்லை என்பதைக் கண்டறிந்தேன்.

அந்த வீடியோவில் நித்தியானந்தாவின் உருவமும், ரஞ்சிதாவின் உருவமும் தான் இருந்தது. அந்த வீடியோவை வேறு ஒருவருடன் எடுக்கப்பட்டது என ரஞ்சிதா சொல்வதிலும் உண்மையில்லை என்று சந்திரச்சேகரன் கூறியுள்ளார்.

இந்த வீடியோ உண்மையானது அல்ல என்று அமெரிக்க நிபுணர்கள் சான்று தந்திருப்பது பற்றி கேட்டதற்கு, சர்வ தேச தரத்திற்கு உள்ள ஐதராபாத் ஆய்வகத்தில் நித்தியானந்தாவும், ரஞ்சிதாவும் நெருக்கமாக இருந்த காட்சிகள் உண்மை தான் என்று உறுதி கூறியிருப்பதை சந்திர சேகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமெரிக்காவுக்கு நித்தியானந்தா அனுப்பி வைத்த சீடி வேண்டுமானால் போலியாக இருக்ககூடும் என்று தெரிவித்துள்ளார்.



லண்டனில் யிம் ஆலின் என்ற பெண்மணி 76 கிலோ எடையுடைய பாரிய திருமண ஆடையுடன் தோன்றி அனைவரின் கவனத்தினையும் ஈர்த்துள்ளார்.

இந்தப் பெண்மணி தன்மீது மற்றவர்களின் கவனத்தை ஏற்படுத்துவதற்காகவே இப்படி அணிந்து வீதியில் சென்றதாகக் கூறப்படுகின்றது.

இக்காட்சியை லண்டனின் பிரபல தொலைக்காட்சி சேவை யான சனல் 4 இலும் ஒளிபரப்பப்பியது.



இந்தப் பெண்ணின் நீண்ட நாள் கனவுகளில் ஒன்று உலகின் குண்டான பெண்ணாக வர வேண் டும் என்பதாகும்.

33 வயதான Susanne Eman என்ற இந்தப் பெண் Parker Clack என்ற 35 வயது சமையல் கலை நிபுணரை திருமணம் செய்து கொண்டுள்ளார்.

இவரை குறித்த பெண் திருமணம் செய்ததற்கு ஒரு தொலை நோக்குத் திட்டம்தான் காரணம்.

திருமணம் தொடர்பாக Susanne Eman என்ற அந்தப் பெண் கருத்துத் தெரிவிக்கையில்,

எங்களது திருமணம் சொர்க்கத்தில் தான் நிச்சயிக்கப்பட்டுள்ளது. இருவரும் ஒருவருக்கொருவர் புரிந்துகொண்டு வாழ்வோம். ஏனெனில் நான் சாப்பிடுவதில் அலாதி பிரியம் உடையவள்.

ஆனால் என் கணவரோ விதவிதமாக சமைப்பதில் விருப்பமுள்ளவர். அவர் என்னை நன்றாக சாப்பிட வைத்து எனது இலக்கை அடைய நிச்சயம் துணையாக இருப்பார் என்று நம்புகின்றேன்..


Parker Clack என்ற அந்தப் பெண்ணின் அப் பாவிக் கணவர் கருத்துத் தெரிவிக்கையில்,

அவள் இன்னும் குண்டாக வருவதை நான் வரவேற்கிறேன். அவளுக்கு எப்போதும் முழு ஆதரவாக இருப்பேன். ஆனால் அவளது உடல் நிலை தொடர்பாகதான் நான் கவலைப் படுகிறேன்.

எது எவ்வாறெனினும் அவள் சாப்பாட்டை ரசித்து ருசித்து உண்ணும் போது நல்ல மகிழ்ச்சியாக இருக்கிறாள். அதனை நான் ரசிக்கிறேன் என்றார்.

Subwing என்ற வியாபாரப் பெயருடன் உருவாக்கப்பட்டிருக்கும் இந்த நவீன செட்டைகளில் கைகளை பயன்படுத்தி நீருக்கு கொடுக்கும் உந்து சக்தியை விட அதிக உந்து வழங்கி இலகுவாகவும், விரைவாகவும் நீந்த முடியும்.

இவற்றின் பெறுமதியானது அவை ஆக்கப்பட்டுள்ள பதார்த்தத்திற்கு ஏற்ப வேறுபடுகின்றன. இதன் அடிப்படையில் பைபர் கண்ணாடிகளால் உருவாக்கப்பட்டவை 700 அமெரிக்க டொலர்கள் எனவும், கார்பன் நார்களால் செய்யப்பட்டவை 850 அமெரிக்க டொலர்கள் எனவும், கார்பன் கண்ணாடிகளால் செய்யப்பட்டவை 895 அமெரிக்க டொலர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது






*அமிதாப்பச்சனின் குடும்ப சொத்துமதிப்பு சுமார் 493 கோடி ரூபாய் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சில தினங்களுக்கு முன்பு, மீண்டும் முலாயம் சிங்கின் சமாஜ்வாடியில் அமிதாப் பச்சன் மனைவி ஜெயாபச்சன் இணைந்தார்.*

*தற்போது சமாஜ்வாடி கட்சி சார்பில் ராஜ்யசபா உறுப்பினர் பதவிக்காக வேட்பாளராக களமிறங்கியுள்ளார். இதற்காக அவர் வேட்பு மனு தாக்கல் செய்தார். அதில் அவரின் சொத்து மதிப்பு பற்றி தெரிவித்துள்ளதாவது:-*

*சொத்து மற்றும் முதலீடாக 402 கோடி ரூபாயும், தன்னுடைய தங்கம் மற்றும் வெள்ளியின் மதிப்பு சுமார் 13.34 கோடி, அமிதாப்பன் தங்கம் வெள்ளியின் மதிப்பு 26.23 கோடி ரூபாய் உட்பட 'சொத்து மதிப்பு சுமார் 493 கோடி ரூபாய் உள்ளது என தெரிவித்துள்ளார்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## நித்திரைக் குளிசை ஆபத்து

அதிக எடை உள்ளவர்கள் தொடர்ச்சியாக நித்திரைக் குளிசை குடித்தால் அவர்களது உயிருக்கே ஆபத்தாக முடியும் என்று மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர்.

அமெரிக்காவின் கலிபோர்னியாவைச் சேர்ந்த ஆய்வாளர்களே இந்த அதிர்ச்சிகரமான செய்தியை வெளியிட்டுள்ளனர்.

40000 பேரை வைத்து நடத்தப்பட்ட ஆய்வில்,

ஒரு வருடத்துக்கு பதினெட்டு அல்லது அதற்கு மேற்பட்ட நித்திரைக் குளிசைகள் உட்கொண்டால் இறப்பதற்கான சாத்தியக் கூறுகள் அதிகமாகக் காணப்படும்.

பெண்களை விட இரண்டு மடங்கு கூடுதலாக ஆண்களுக்கே இந்தப் பாதிப்பு உள்ளமை குறிப்பிடத்தக்கது.





பொதுவாக சாலைகள், தெருக்கள் இவற்றினை சுத்தம் செய்வதற்கு வக்யூம் கிளீனரை கொண்ட ஐதரசன் சக்தியில் இயங்கும் வாகனம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இதில் 0.3 தொடக்கம் 0.6 கிலோகிராம் வரையான ஐதரசன் எரிபொருளை நிரப்புவதன் மூலம் ஒரு மணித்தியாலம் தொடர்ச்சியாக இயங்கவைக்க முடியும்











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இப்பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2012, மார்ச் 25 ஆம் திகதி வெளியிடப்பட்டது.